# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு 2030 தை 3 ஞாயிற்றுக்கிழமை (17 – 01 – 1999) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:34


# மாங்குளத்திலிருந்து வடக்கே இராணுவம் முன்னேற முயற்சி!

## 2 ஆவது நாளாக மோதல் நீடிப்பு

வவுனியா, ஜனவரி 17

மாங்குளத்துக்கு வடக்கே வெள்ளி அதிகாலை படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியை அடுத்து படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

வெள்ளி அதிகாலை இரு தரப்பினருக்கும் இடையில் பெரும் மோதல் இடம்பெற்றதாகவும்—

படையினர் தரப்பில் மூவர் உயிரிழந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. புலிகள் தரப்பில் 18 பேர் உயிரிழந்ததாகவும் அது தெரிவித்தது.

எனினும் சேத விவரம் குறித்து புலிகள் தரப்பில் இருந்து அறிவிப்பு எதுவும் விடப்படவில்லை.

இரண்டாவது நாளாக நேற்று இடம்பெற்ற மோதலிலும் 3 படையினர் கொல்லப்பட்டதாகவும் 12 படையினர் காயம் அடைந்ததாகவும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரத்தில் இன்று சர்வ மதப் பிரார்த்தனை!

யாழ்ப்பாணம், ஜன. 17

தமிழ் மக்களுக்கு சுய கௌரவத்துடன் நீதியும் சமாதானமும் கிடைக்க வேண்டும் எனவும்—

செம்மணி புதைகுழி விவகாரத்தை துரிதப்படுத்துமாறும்—

கோரி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சர்வ மதப் பிரார்த்தனை யாழ். சோமசுந்தரம் அவனியூவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இன்று நடைபெறும்.

இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறும் இந்தப் பிரார்த்தனை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார், யாழ். ஆயர் கலாநிதி வண. பிதா தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், மெதடிஸ்த திருச்சபை வடக்கு-கிழக்கு மறை மாவட்டத்தலைவர் வண எஸ்.எஸ். கருணைராஜ், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. ஜே. ஜெபமோகன் ஆகியோர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. பெறுபேறுகள் நேற்று இங்கு வெளியாகின

யாழ்ப்பாணம், ஜன. 17

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை வெளியான ஜி. சீ. ஈ. உயர்தரபரீட்சை முடிவுகளில் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்குரிய பெறுபேறுகள் நேற்று பரீட்சை திணைக்கள அதிகாரி ஒருவரினால் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டன.

யாழ். நகர பாடசாலை அதிபர்கள் நேற்றே இப்பெறுபேறுகளை பெற்று மாணவர்களிடம் வழங்கினார்கள்.

இதேவேளை தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் நேற்றைய தினமே யாழ்ப்பாணத்தில் வைத்து தபாலில் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-7-6)

## குண்டு வைத்து தகர்ப்பு

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்புப் பகுதி கல்லடியிலுள்ள தொலைபேசிப் பரிவர்த்தனைக் கபினேட் நேற்று அதிகாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் கல்லடிப் பகுதியில் உள்ள 350 தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்துள்ளன. (இ-7-21)

## அரச எம். பியின் வாகன அணி மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஜன. 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நுவரெலியா மாவட்ட எம். பி. யான சி. பி. ரட்னாயக்கவும் வேறு சிலரும் பயணம் செய்த வாகன அணி இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது. எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள கடுகலவஸ்வே என்னும் இடத்தில் இடம்பெற்றது. (இ-5-7-க)

## ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது பல இடங்களில் தாக்குதல்கள்

### எம். பி. ஒருவருக்கு தலையில் காயம்

கொழும்பு, ஜன. 17

கடந்த சில நாள்களாக ஐ. தே. க. உறுப்பினர்கள் மீது பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை வென்னப்புவையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றில் ஐ. தே. கட்சி எம். பி பிரேமரத்தின குணசேகர தலையில் காயம் அடைந்தார்.

கடந்த வெள்ளி காலை ஐ. தே. க. செயலாளர் காமினி அத்துக்கோறள, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சென்ற வாகனத்தை நோக்கி மாறவில் என்றஇடத்தில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இவர்கள் இருவரும் காயம் இன்றித் தப்பினர்.

வெள்ளி இரவு குளியாப்பிட்டியவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஐ. தே. க. இளைஞர் முன்னணி பொருளாளரான பி. சிவா என்பவர் அதே இடத்தில் பலியானார். (இ-7-5)

## கிட்டு நினைவாக பதாதைகள்!

யாழ்ப்பாணம், ஜன. 17

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கேணல் கிட்டு மற்றும் அவருடன் உயிரிழந்த 10 பேரின் 6 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று யாழ். நகரப் பகுதியிலும் அதனை அண்டிய நல்லூர், கல்வியன்காடு பகுதியிலும் பருத்தித்துறையில் ஓராங்கட்டைப் பகுதியிலும் சிறிய பதாதைகள் கட்டப்பட்டிருந்தன.

பருத்தித்துறையில் கட்டப்பட்டிருந்த பதாதை தொடர்பாக சிலர் படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிய வந்தது. (இ-5-15-7-3)

## தொலைத்தொடர்பு இணைப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணத்துக்கும்வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைத்தொடர்புஇணைப்புக்களின் எண்ணிக்கை அறுபதினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ள 45 இணைப்புகளும் வெளி இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொள்ள 45 இணைப்புக்களுமே இருந்தன.

கடந்த பொங்கல் தினத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு தொடர்பு கொள்ள 105 இணைப்புக்களும் வெளி இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தொடர்பு கொள்ள 105 இணைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதாவது மேலதிகமாக 60 சோடி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த ஓரிரு வாரங்களில் மேலும் இணைப்புகள் வழங்கப்படும் போது தொலைபேசிச் சேவை முற்றாக சீரடையும் என்று ரெலிகொம் பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ். கனகசூரியர் நம்பிக்கை தெரிவித்தார்.

(இ-5)

## ஐ.தே.க.ஒத்துழைத்திருந்தால் 3 வருடங்களுக்கு முன்பே தீர்வு ஏற்பட்டிருக்கும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் மூன்று வருடங்களுக்கு முன்னரே அதனைத் தீர்த்து வைத்து முழுமையானசமாதானத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

வாரியப்பொலவில் நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் செல்லத்துரை

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். முத்திரைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை 12-01-99 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகமுத்துவின மருமகனும், சரஸ்வதி (ஜேர்மனி), வரதராஜன், வசந்தா (கொழும்பு,) வனிதா (வவுனியா), முருகானந்தன் (ஜேர்மனி,) கலாநிதி (யாழ்ப்பாணம்), தயாநிதி (சுவிஸ்), ஆனந்தராசா (நோர்வே), காலஞ்சென்ற உதயன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாலநாதன் (ஜேர்மனி), உதயகுமாரி (ஜேர்மனி) சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), லோகராசா (வவுனியா), லோகப்பிரகாஷ் (யாழ்ப்பாணம்), அருளானந்தம் (சுவிஸ்) ஆகியோரின்மாமனாரும். கதிரவேலு, சண்முகநாதன், காலஞ்சென்ற அன்னமுத்து, தர்மலிங்கம், முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், சிவக்கொழுந்து, யோகம்மா, அமிர்தம் மற்றும் தம்பிராஜா, நமசிவாயம், சபாபதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (17-01-99) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணியளவில்நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி லோகப்பிரகாஷ் கலாநிதி,**
(முத்திரைச்சந்தி)

250/14, ஜோர்ஜ் ஆர்.டி சில்வா மாவத்தை,
கொட்டாஞ் சேனை,
கொழும்பு—13.
T. P. 074618367.

(62227)

---

## மாணிக்கதியாகராஜா ஆனந்தர்

(ஒய்வுபெற்ற அதிபர், சென். சில்வஸ்ரர் கல்லூரி தமிழ் பிரிவு, கண்டி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை)

இணுவில் கிழக்கு இளந்தாரியார் கோயிலடியைச் சேர்ந்த மாணிக்கதியாகராஜா ஆனந்தர் 14-01-99 வியாழக்கிழமை சென்னையில் இறைபதமடைந்தார்.

இவர் ஒய்வுபெற்ற அதிபர் ஆ. இராசம்மா (பஞ்சவர்ணம்) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீதரன் (ஒய்வுபெற்ற உத்தியோகத்தர் வருமானவரித் திணைக்களம்), ஸ்ரீகாந்தன் (பொறியியலாளர், G. T. Z. யாழ்ப்பாணம்). கமலாசனி (இந்தியா), ஸ்ரீ ஞானகுரு (ஆஸ்திரேலியா), பத்மலோசனி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் வத்சலா, மிதிலைச்செல்வி (சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, கைதடி), மனோகரன் (லேக்ஹவுஸ்), சிவஞானகௌரி, நகுலேஸ்வரி (ராணி- ஆஸ்திரேலியா), ஆனந்தகுலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும். சுரேந்திரன், விஜயபாலினி, சியாமளபாலினி, கீர்சன், திவாகர், துஷாணி, செந்தூரன், வாகீசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16-1-99) சனிக்கிழமை சென்னையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**ஆ. ஸ்ரீகாந்தன்.**
(மகன்)

''ஆனந்த வாசம்''
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(62210)

---

## கந்தர் சுப்பையா

[இளைப்பாறிய உதவி வைத்திய அதிகாரி]

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சுப்பையா 15-01-99 வெள்ளிக்கிழமை அன்று கொழும்பில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தர் அவர்களின் அன்பு மகனும் மீனாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஐ. சிற்றம்பலம் அவர்களின் அருமைச்சகோதரனும், கமலாசனி, மகாதேவா [கனடா], மகாதேவி, மகேந்திரராசா [கனடா], மங்கலேஸ்வரி [கனடா], தெய்வநாயகம் [கனடா] ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநடனசிவம், உதயசங்கர், ராஜசிங்கம், சண்முகலிங்கம், நடராசா. மனோராணி, கமலரதி ஆகியோரின் அன்பு மாமனும், சர்வேஸ்வரன், அம்பிகாவரன் [கனடா], புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், நிரூஷன், ரஜீவா, மயூரா, நிவேதன், சரண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ப. சிவசுதன்**
[பேரன்]

யாழ். முகவரி:
''திருவதிகை'',
நுகவில்,
கரவெட்டி.

கொழும்பு முகவரி:
131/8 கிருலப்பனை அவனியூ,
Colombo -06 .
T. P. 820670

[62225]

---

## சமய நிகழ்வில்

அரியாலை அருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் அம்மன் கோயிலில் இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு அபிராமிப்பட்டர் விழா நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

புலோலி பர்வதவர்த்தனி சமேதபசுபதீஸ்வரர் ஆலய ஸ்ரீ சிவன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை அபிராமிப் பட்டர் விழா இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில் அபிராமிப்பட்டர் விழாஇன்றுநடைபெறும். இந்த விழாவில் மாலை 4 மணிக்கு இசைப்புலவர்பிரம்ம ஸ்ரீ க. இராமநாதனின் அபிராமி அந்தாதிப்பாடல்கள் இடம்பெறும். (இ-173)

## வேம்படி மகளிர் கல்லூரி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். வேம்படி மகளிர் பாடசாலை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணி கடந்த பல நாள்களாக இங்கு நடைபெற்று வந்தது. அப்பணி நேற்றுடன் முடிவடைந்தது. அதனையடுத்தே நாளை முதல் பாடசாலை இயங்க உள்ளது. (ஐ)

---


எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்!

- கள்ளழகர்
- லவ் மூடு
- மன்னவரு சின்னவரு
- கல்கத்தா

**மெலோடியஸ் மியூசிக்**

303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(62236)



**ராஜா**
யாழ்ப்பாணம்.
நெப்போலியன், நாசர்
தேவயானி, மணிவண்ணன்
நடித்த
கிழக்கும் மேற்கும்
இன்று காட்சிகள்
10-30, 2-00 ,5-00
[சி/6134]



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
கமலஹாசன்,
ரேவதி, ராதா
நடித்த
ஒரு கைதியின் டைரி
காட்சிகள்;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P. No. 070—212223
(62228)



**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
19 ஆம் திகதி வரை
அஜித், தேவயானி
நடித்த
காதல்கோட்டை
காட்சிகள்: 10-30, 2-30
(62229)


---

# மரண அறிவித்தல்கள்

## இராசையா இரகுநாதன்

பிரான்ஸில் 22-12-98 அன்று காலமாகிய இராசையா இலட்சுமியின் மகன் இரகுநாதனின் பூதவுடல் நாளை (18.01.99) திங்கட்கிழமை பிரான்ஸில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**அ. இராசையா.**
தந்தை
(சைக்கிள் கடை)

கோண்டாவில்.

(62220)

---

## திருமதி சரஸ்வதி மார்க்கண்டு

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு இல. 31/19, பெர்னாண்டோ பிளேசில் வசித்தவருமான திருமதி சரஸ்வதி மார்க்கண்டு 12. 01. 99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம் மார்க்கண்டு (முன்னாள் தங்கொட்டுவ சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் கணபதிப்பிள்ளை தெய்வானை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இராமலிங்கம், நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், செல்வராசா, உதயகுமார், செந்தில்நாதன், சோதிநாதன், தியாகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானி, வடிவாம்பிகை, ஜெயந்தி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருள்ராஜ், சாம்பவி, பிருந்தா, கணேஷ், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், சோமசுந்தரம் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, நடராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-01-99 இன்று ஞாயிறு காலை 8 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**இ. மார்க்கண்டு**
(கணவன்)

31/19, பெர்னாண்டோ பிளேஸ்,
கொழும்பு - 14.

(62202)

---

## கந்தையா திருநாவுக்கரசு

திருநெல்வேலி கிழக்கு நல்லூரைச்சேர்ந்த கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் 15-01-1999 வெள்ளிக்கிழமை யன்று காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக்கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), திருமதி வசந்தகுமாரி இராமநாதன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நல்லூர்), ஸ்ரீகாந்தா, ஸ்ரீதரன் (நூலகம், யாழ். பல்கலைக்கழகம்), சாந்தகுமாரி, ஸ்ரீசந்திரகுமார் (ஆசிரியர், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி வசந்தா ஸ்ரீஸ்கந்தராசா (யாழ். மாநகர சபை), இராமநாதன் (ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), திருமதி பாலராணி ஸ்ரீதரன் (வட்டக்கச்சி மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஜெயரூபிணி, தர்மிகன், நிவேதனன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிறு 17-01-1999 நண்பகல் 12. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**தி. ஸ்ரீஸ்கந்தராசா**
(மகன்)
(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

73, செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர்.

(62206)

---

## சின்னையா ஆச்சாரி ராசலெட்சுமி

யாழ். கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ஆச்சாரி (ராசாப்பத்தர்) ராசலெட்சுமி அவர்கள் வவுனியாவில் 14-01-99 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னையா ஆச்சாரியின் (ராசாப்பத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரவேல், செல்லையா, சறோஜா மற்றும் ஞானம்மாள், சிவராஜா, முத்துலெட்சுமி, திலகவதி, காமினி, திருக்கேதிஸ்வரன், பரமசிவம், சந்துரு ஆகியோரின் அன்புத்தாயாரும் கணபதி ஆச்சாரி, ராஜி குணசேகரன், காலஞ்சென்ற சரவணமுத்து ஆச்சாரி மற்றும் துருவலெட்சுமி, உமாதேவி, சைலஜா, கமலா, தங்கலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-01-99 சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவராஜா** (சிவா)
(மகன்)

190, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(62209)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

யாழ். குடாநாட்டில் யாழ்ப்பாண நகரம் உட்பட முக்கியபகுதிகளுக்கு 24 மணி நேர மின்சார விநியோகம் வழங்கப்பட்ட பின்னர், காலையிலும் மாலையிலும் — மின்பாவனை அதிகரிக்கும் வேளைகளில் — மின்சாரம் அடிக்கடி தடைப்படுவது குறித்தும், அதனால் மக்களுக்கு ஏற்படும் ''எரிச்சல்'' குறித்தும் இப்பத்தியில் பிரஸ்தாபிக்கப்பட்டதும் —

அது குறித்து, காங்கேசன்துறையில் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்து இலங்கை மின்சார சபைக்கு அதைச் சட்டண அடிப்படையில் விநியோகிக்கும் ''கூல் எயார்'' நிறுவனம் அளித்த விளக்கங்கள் இப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும் — தெரிந்தவையே.

நிலைமையை இலங்கைமின்சாரசபை தெளிவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று ''கூல் எயார்'' நிறுவனத்தின் மறுப்பு அறிக்கைக்கு கீழ் அடிக்குறிப்பில் 'உதயன்', 'சஞ்சீவி' ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இரண்டு வாரங்களாகியும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்தியப் பிரிவு தனது பாவனையாளர்களுக்கு — பொதுமக்களுக்கு — உத்தியோகபூர்வமாக நிலைமையை இன்னும் தெளிவுபடுத்தவில்லை. என்றாலும் பாவனை அதிகமான நேரத்தில் மின்வெட்டு ஏற்படுவது அவ்வப்போது தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இலங்கை மின்சார சபையின் மௌனம், கூல் எயார் நிறுவனம் தன்னில் பிழை ஏதும் இல்லை என்ற பாணியில் தெரிவித்த மறுப்பை உறுதிப்படுத்துவதாக அமைகின்றதோ என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.

சம்பந்தப்பட்டோர், தாம் பத்திரிகைகளுக்கு பதில் சொல்ல வேண்டிய உத்தியோகபூர்வ கடப்பாடு அற்றவர்கள் என்று கருதினாலும் கூட, தமது பாவனையாளர்களுக்கு — பொதுமக்களுக்கு — பதில் சொல்ல வேண்டிய தார்மீகக் கடப்பாடு — பொறுப்பு — உள்ளவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

★ ★ ★ ★ ★

பொதுவாகவே மக்கள் கூடும் இடங்களில் பிரச்சினைக்குரிய விடயங்களில் ஒன்று மக்களின் இயற்கைக் கடன் கழிக்கும் வசதிகளைச் செய்து கொடுப்பது.

நூற்றுக் கணக்கில் பயணிகளை கப்பலில் ஏற்றிச் செல்வதென்றாலும் மக்கள் கூடும் திருவிழாக் கூட்டங்கள் என்றாலும் ஒருபுறம் திட்டமிட்ட நிகழ்ச்சிகள் நடந்தேற மறுபுறம் மக்கள் கூட்டத்தின் கழிப்புகளால் சில பகுதிகள் நாறிப் போய்விடும்.

இந்தப் பிரச்சினைக்கு யாழ். நகரமும் விதிவிலக்கல்ல.

யாழ். நகரில் கூடும் மக்கள் தமது இயற்கை உபாதைகளைக் கழிக்க யாழ். நகர நவீன சந்தையின் கீழ் கட்டடத்தில் உள்ள ஓரிரு மலசல கூடங்களைப் பாவிப்பதுண்டு. அதைவிட வேறு ஓர் இடமும் இதற்கு வசதியளிக்கின்றது.

நவீன (?) சந்தையின் மேல் மாடிக் கட்டடங்களில் உள்ள கடைகள் பலவும் உடைந்து, திருத்தப்படாமல், பாவனையின்றிக் கிடக்கின்றன. இயற்கை உபாதை கழிக்கும் சொர்க்கலோகமாக அங்குள்ள எட்டுக் கடைகள் இப்போது பயன்படுத்தப்படுவதால் கீழே கட்டடத்தில் கடை வைத்திருப்போர் இருக்க முடியாமல் விழிபிதுங்கி, மூக்குப் பொத்தி, மூச்சடக்கி நிற்கின்றார்கள்.

''சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் முறையிட்டு விட்டோம். உரிய நடவடிக்கை ஏதும் இல்லை. மேல் கடைகளை உரியவர்கள் பயன்படுத்தாவிட்டால் எங்களுக்குத் தாருங்கள். நாம் எமது சொந்தப் பணத்தில் அவற்றைத் திருத்திப் பேணுகின்றோம் என்று மாநகரசபையிடம் கேட்டுப் பார்த்தோம். இணங்கவில்லை. நீங்களாவது திருத்தி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் கொண்டு கண்காணித்துச் சுத்தம் பேணுங்கள் என்று கோரினோம்; சமுதாய நலன் கருதி கட்டடம் திருத்தப்படும் வரையாவது மேல்மாடிக்கு ஆள்களைச் செல்லாமல் வழியை அடையுங்கள் என்று வற்புறுத்திப் பார்த்தோம். ஒன்றும் பயனளிக்கவில்லை. தாங்கமுடியாமல் நகர சுத்திகரிப்புத் தொழிலாளரைக் கொண்டு அவ்வப்போது நாமே பணம் கொடுத்து — எமது செலவில் — மேல் மாடியைத் துப்புரவு செய்து வருகின்றோம்.

''எத்தனை நாளைக்கு நாம் இப்படி அல்லாடுவது? மேல் அதிகாரிகள் நேரில் வந்து ஒரிரு தடவைகள் இந்த அவல நிலையைப் பார்த்துச் சென்றால் என்ன? சுகாதாரச் சீர்கேட்டிலிருந்து யாழ். நகரைக் காப்பாற்றினால் என்ன?'' — என்று நிலைமையைப் பொறுக்க முடியாமல் எழுத்தில் அதிரடி அரங்குப் பகுதிக்கு கடிதம் எழுதியிருக்கின்றார் ஒரு வர்த்தகர்.

சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம். உரிய நடவடிக்கை அவசியமானது; அவசரமானது.

★ ★ ★ ★

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கி ஒன்றில் அண்மையில் நடைபெற்ற வருட இறுதி ஒன்றுகூடலின் போது விருந்தினருக்கு மதியபோசனமாக வழங்கப்பட்ட புறியாணிப் பார்சலில் அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட வங்கியினர் ஹோட்டல் ஒன்றில் இந்த புறியாணிப் பார்சலுக்கு ஓடர் செய்து பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இது குறித்து அந்தக் ஹோட்டலில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு பின் சாப்பாட்டிற்கு ஒரு தொகை விலைக் கழிவு வழங்கப்பட்டதாகவும் அறிய வந்தது.

விசேடங்களுக்கு புறியாணிப் பார்சல்கள் ஓடர் செய்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது அவசியம் போல் தெரிகிறது.

★ ★ ★ ★ ★

மதத் தலைவர்கள், மதப்பூசகர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படுகின்றவர்கள் என்றாலும் சட்டத்தின் முன் ஏனையோருடன் அவர்களும் சமமாகவே கருதப்பட வேண்டும்.

ஒரு நீதிபதியின் முன்னால் ஒரு மதப்பூசகரை அல்லது மதத்தலைவரைக் கொண்டு போய் நிறுத்தினால் நீதிபதி என்ற முறையில் அவரையும் ஒரு சாதாரணப் பிரஜையாகவே நீதிபதி கருதவேண்டியிருக்கும். ஆனால் தாம் சமூகத்தில் ஒரு மனிதன் என்ற முறையில் மதப்பூசகரை மதிக்கவேண்டிய கடப்பாடும் நீதிபதிக்கு வந்து விடுகின்றது.

இத்தகைய இக்கட்டுகளில் தத்தளிக்கும் நீதிபதிகள் பலர். இதுபோன்ற சுவையான சம்பவம் ஒன்று அண்மையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

பிரபல ஆலயம் ஒன்றின் பூசகர் ஒருவர் நீதிமன்ற உத்தரவை மீறினார் என்பதற்காக — நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில் — நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிவான் என்ற முறையில் அவரைப் பிணையில் விடுவதற்கு ஐயாயிரம் ரூபா காசுப்பிணை செலுத்தும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

காசுப் பிணை கட்ட பூசகர் தயாராக இல்லாததால் அவரை விளக்கமறியலில் வைக்கும் நிலை ஏற்பட்டது.

அதை அறிந்த நீதிவான், ஆலயப் பூசை தடங்கல் இன்றி நடைபெற வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு தனது சூட்கேஸிலிருந்து ஐயாயிரம் ரூபாவைப் பூசகருக்கு வழங்கி அதனைப் பிணைப்பணமாகச் செலுத்துமாறு பூசகருக்கு ஆலோசனை வழங்கினார்.

நீதிவானின் மனிதநேயத்தையும் — மதத் தலைவர்களை மதிக்கும் பண்பையும் — நீதிமன்றத்திற்கு வந்திருந்தோர் பெரிதும் பாராட்டினர்.

நீதிவான் வழங்கிய பணத்தைப் பெற்றுக் கொண்டு பூசகர் பிணைப் பணத்தைச் செலுத்தி வெளியில் வந்தார்!

அவர் பெற்றுக் கொண்ட பணத்தை நீதிவானுக்குத் திருப்பிச் செலுத்தி விட்டாரா என்பது தெரியவில்லை.

— மின்னல்

## கூட்டுத் திருப்பலி

யாழ்ப்பாணம், ஜன. 17

குருநகர் முன்னேற்ற இளைஞர் மன்றத்தின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் அருள் தந்தை பி. எவ். பொனிபஸ் தலைமையில் கூட்டுத் திருப்பலியும், மாலை 3 மணியளவில் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஐ-க)

## விவசாயக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17

மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் க சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அரச திணைக்களத் தலைவர்கள். அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5)

## மீன் விலை வீழ்ச்சி

காரைநகர், ஜன. 17

காரைநகரில் கடற்றொழிலாளர்கள் மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் குறிப்பிட்ட நேரம் அனுமதி வழங்கியுள்ளனர். இதனால் அண்மைக் காலங்களில் மீனின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. (ஐ-ரீ)

## மாநாட்டு மண்டபம் இன்று திறப்பு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபம் இன்று (ஞாயிறு) திறந்து வைக்கப்படுகிறது.

பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அரச அதிபர் க. சண்முகநாதன் மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஒன்றுகூடல் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபரும், சிறப்பு விருந்தினராக மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனும் கலந்து கொள்வர். (ஐ-27)

# வடமராட்சிப் பிரதேசத்தில் மின் இணைப்பு பணி துரிதம்

பருத்தித்துறை, ஜன. 17

வடமராட்சிப் பகுதிக்கு இருபத்துநான்கு மணி நேர மின்சாரம் வழங்கும்பொருட்டு மின் இணைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

வல்லை தொடக்கம் புறாப் பொறுக்கி ஊடாக கரணவாய் குஞ்சர் கடை வரை அதி உயர் அழுத்த மின் இணைப்புக்கென மின் தூண்கள் நடப்பட்டு மின் கம்பிகள் இணைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைகளை ஒட்டி புறாப்பொறுக்கி தொடக்கம் குஞ்சர்கடைவரை வீதி யோரமுள்ள பாரிய ஆலமரம், வேப்பமரம், இலுப்பைமரம், விளாமரம் போன்றவை தறிக்கப்பட்டும் அரைவாசி அப்புறப்படுத்தப்பட்டும் வருகின்றன.

கடந்த காலங்களில் சுன்னாகத்தில் இருந்து கிராமங்களின் ஊடாக உயர் மின் அழுத்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. புதிய நிர்மாணத் திட்டச் திற்கமைய அனைத்து உயர்மின் அழுத்தி இணைப்புக்களும் பிரதான வீதிகளின் ஊடாகவே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர் வரும் ஏப்பிரல் மாதமளவில் இருபத்துநான்கு மணிநேர மின்சாரம் வடமராட்சிப்பகுதிக்கு அறிமுகப் படுத்தப்படலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ 118)

## பொலிகண்டிப் பகுதியில் புதிய ஜெனரேற்றர்

பருத்தித்துறை, ஜன. 17

வடமராட்சிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு மேலும் ஒரு ஜெனரேற்றர் பொலிகண்டியில் நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பொலிகண்டிப் பகுதிக்கும் அதன் சுற்றாடல் பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படாமல் இருந்து வந்தது.

யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதிகளுக்கு இருபத்து நான்கு மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட ஜெனரேற்றர் ஒன்றே பொலிகண்டியில் நிறுவப்பட்டுள்ளது.

பொலிகண்டி, திக்கம், இன்பர்சிட்டி, ஊறணி ஆகிய பகுதிகளிலும் கடற்கரையோரமாகவும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

விரைவில் இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஐ-118)

## ராஜீவ் கொலை வழக்கு: மேன் முறையீடு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 17

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் உட்பட 26 பேரின் மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை இந்திய உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் ஒத்திவைத்தது.

ராஜீவ் கொலை வழக்கிற் குற்றஞ்சாட்டப்பட்ட மேற்படி 26 பேருக்கும் பூந்தமல்லி விசாரணை நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியிருந்தது. —

இந்தத் தீர்ப்பை எதிர்த்து குறிப்பிட்ட 26 சந்தேக நபர்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

மேற்படி மேன் முறையீட்டு மனு மீதான விசாரணை கடந்த இரு மாதங்களாகப் பலத்த வாதப் பிரதி வாதங்களின் மத்தியில் நடந்தது.

எனினும் இறுதியில் கொலைக் குற்றஞ் சுமத்தப்பட்டவர்களின் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகள் பிரபாகரன் மற்றும் சிவராசன் போன்ற குற்றவாளிகளே கொலைச் சம்பவத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் —

ஏனையவர்கள் மேற்படி கொலைச் சம்பவத்தோடு நேரடித் தொடர்பு அற்றவர்கள் என்றும் —

பிரபாகரன் உட்பட முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்படாத நிலையில் இவர்கள் மீதான மரணதண்டனைத் தீர்ப்பு அர்த்தமற்றது எனவும் — வாதாடினர்.

பின்னர் அரச தரப்பு எதிரிகள் தரப்பு வாதங்களைக் கேட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் தமது தீர்ப்பை ஒத்திவைப்பதாக நேற்று முன்தினம் அறிவித்தனர். (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய ஹொண்டா (சாலி) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. விலை 35,000/- தொடர்பு; இராசையா, இல. 22, சென். ஆன்ஸ் றோட், பாண்டியன் தாழ்வு (சென். ஆன்ஸ் சேர்ச் அருகில் — கொழும்புத்துறை றோட்).
(62113)

உருளை வடிவ தண்ணீர்த் தாங்கி 12 அடி நீளமானது விற்பனைக்குள்ளது. தொடர்பு: இ. தவகோபால், 525/2, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
(சி/6139)

ஆங்கிலம், புவியியல், சார்ந்த பயன்மிகு நூல்களும் சஞ்சிகைகளும் சகாய விலையில் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் பி.ப. 2-6 மணிவரை. தொடர்பு: 25, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி.
(62205)

## சோதிடம்

''ஆனந்தி'' வெளியீடு எங்கும் விற்பனையாகின்றது. பிரமாதி வருட வியாழ, சனி ராகு, கேது மாற்றப் பலா பலன்கள் உங்களுக்கு எப்படி? ஆசிரியர்: V. A. சிவராசா, 152 B, அரசடி றோட், சந்தர்மடம், யாழ்ப்பாணம். சோதிடர் வேலணை
(62160)

## ENGLISH

தரம் 6 -- 9 (1999) புதிய பாடத்திட்டங்கள் உட்பட சகல வகுப்புகளும் நடைபெறுகின்றன. பாடசாலை செல்லாதவர்கள் பிரத்தியேக வகுப்புகளும் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan, B. A. Lond, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(62143)

## தேவை

புதிய / பாவித்த தமிழ். ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: மருதம் மருதலிங்கம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்
(62148)

## மணமகள் தேவை

வெளிநாட்டில் நிரந்தர வதிவுரிமை உடைய NON RC மணமகனுக்கு 28லிருந்து 32 வரை வயதுடைய மணமகள் தேவை (மதம் கவனிக்கப்பட மாட்டாது) தொடர்பு: இலக்கம், 837 மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
(62196)

## தவறிவிட்டது

சிறில் பதினா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 090303469V) 12-01-99 அன்று யாழ். அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 721, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(62211)

## கணிதம்

ஆண்டு 10, 11க்கான கணித வகுப்புக்கள் 18-01-99 காலை 6-30க்கு மீண்டும் ஆரம்பமாகின்றது. ஆசிரியர்: திரு. யூட், 46/2, 2ஆம் விதானையார் ஒழுங்கை (பழைய இடத்திலேயே) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(62216)

## வகுப்புகள்

A L கணக்கீடு, O L வர்த்தகமும் கணக்கியலும் பிரத்தியேகமாக, தகைமை பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றன. தொடர்பு: 57, நக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(62197)

## ஆங்கிலம்

ஆண்டு 5 - 11 வரை ஆங்கிலம் பயிற்றப்பட்ட ஆசிரியரினால் கற்பிக்கப்படும் ஆரம்பம் 20 - 01 - 99 தொடர்பு: க. நாகேந்திரம் 34/4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
(62189)

## வீடு விற்பனைக்கு

இல. 89/1, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் உள்ள வீடும், இல. 6, செல்லாச்சிபம்மையார் வீதி, சுன்னாகத்தில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: Dr. P. விக்னேஸ்வரா, 89, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(62174)

## தேவை

Sharp 7750, போட்டோ பிரதி இயந்திரம் நல்ல நிலையிலோ அல்லது பழுதடைந்த நிலையிலோ உள்ளதோ தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். ஒளி அகம் இல. 60. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(62199)

## 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

சிவபூமி
20 — 09 — 1924



சிவன்பாதம்
10 — 02 — 1994

திருமதி
**லில்லிமலர் சின்னத்துரை**
(யோகம்மா)
இணுவில்
திதி: 17 - 01 - 1999

வயிற்றில் எமைச் சுமந்து
வாழ்வு எலாம் எமக்காக்கி
உள்ளம் நிறைந்து நிற்கும் — எம்
உத்தமியே அம்மா!
வணங்குகின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

துரைமலர்ப் பொய்கை,
இணுவில் மேற்கு.
(62193)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**கனகசபை நாகரத்தினம்**
(கொக்குவில் மேற்கு)
திதி: 17 - 01 - 99

மலர்வு 19 - 01 - 1928
உதிர்வு 25 - 01 - 1998

அன்பின் சிகரமே! அருமை அம்மா!
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
வளர்த்தீர்களே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு ஓராண்டு
ஆனாலும் உன் நினைவால் உருகி நிற்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க. தலையசிங்கம்
குமரகோட்டம்,
சோண்டாவில்.
(62171)

### கிரேக்கக் கடலில்

# விபத்தில் சிக்கியோரின் பெயர்பட்டியல் பார்வைக்கு

இத்தாலிக்குக் கப்பல் மூலம் சென்று கிரேக்கக் கடலில் 1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இருபத்தைந்தாம் திகதி விபத்தில் சிக்கியவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் தமது அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாக 'புளொட்' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா அறிவித்துள்ளார்.

இந்த விபத்தில் சிக்கிய 149 இலங்கையரின் பெயர் விவரங்களை இன்ரபோல் வெளியிட்டுள்ளது என்றும்—

அந்த விவரங்களே தமது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் —

விவரங்களை அறிந்து கொள்ள விரும்புவோர் அவற்றை வந்து பார்வையிடலாம் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# மின் ஒளி பாய்ச்சி மீன் பிடித்தோர் கைது!

கொழும்பு, ஜன. 17

அம்பலாங்கொட கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் மின் ஒளி பாய்ச்சி மீன் பிடித்தலில் ஈடுபட்ட 36 மீனவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றது.

அம்பலாங்கொட கடற்கரையோரப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த பொலீஸாரே மேற்படி மீனவர்களைக் கைது செய்ததோடு, அவர்களிடம் இருந்து 6 மீன்பிடி வலைகளையும் வள்ளங்களையும் கைப்பற்றினர். (ஐ-7)

# கொக்குவிலில் திருடப்பட்ட நகைகள் நீதிமன்றில்

கொக்குவில் பகுதியில கடந்த சில மாதங்களுக்குமுன்னர் திருடப்பட்டதாகக் கூறப்படும் நகைகள் பொலீஸாரினால் மீட்கப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த புதனன்று ஒப்படைக்கப்பட்டன.

கொக்குவில், தலையாழிப் பகுதியில் வசிக்கும் இரத்தின கோபால் நந்தகோபால் என்பவரின் வீட்டில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக மார்க்கண்டு விஜயானந்தன் என்பவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கடந்த புதனன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பொலீஸார் தம்மால் மீட்கப்பட்ட நகைகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். நகைகளை உரியவரிடம் ஒப்படைக்குமாறு வழக்காளிதரப்பில் ஆஜரான சட்டத்தரணி க. கேசவன் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்டத்தரணியின் கோரிக்கையைத் தொடர்ந்து இவ்வழக்கினைப் பிறிதொரு தவணைக்கு மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் ஒத்திவைத்தார். (ஐ-5)

# அபிராமிப்பட்டர் விழா

இணுவில்

ஷிவிழா விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன்தேவஸ்தானத்தில இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும்.

அனைவரும் வருக! அபிராமி அருள் பெறுக!!

சுபம்

உபயம்
தி. அபிராமி சி. பரமேஸ்வரன்

(இவ்விளம்பரம் 15 - 01 - 99 அன்று தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டது)
(62159)

தேவிமயம்

# அபிராமிபட்டர் உற்சவம்

யாழ்/ கலட்டி எச்சாட்டி
**மகாமாரி அம்மன் கோயில்**

17 1 99 இன்று ஞாயிற்றுக்கிழமை
பகல் 11-00 மணி அபிஷேகம்
பகல் 12-00 மணி பூசை
மாலை 2-00 மணி மூலமூர்த்திப் பூசை
மாலை 2-30 மணி அபிராமி அந்தாதி பாடல்

பிரதம குரு
**தாணு வாசுதேவக்குருக்கள்**

தேவஸ்தான குரு
**சி. சிவமோகன் சர்மா**

அந்தாதி இசைப்பவர்
**திரு. மு. நவரெத்தினம் M. A.**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)

வயலின்
**வே. தியாகராஜசர்மா**
ஆவரங்கால்

மிருதங்கம்
**எம். மகேந்திரன்**
(விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)

உபயம்: நா. திவாகர சர்மா
தி. ஜெயப்பிரபா - தி. அபிராமி

''அனைவரும் வருக அன்னை அருள் பெறுக''
சுபம்!

(62204) ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 | 18 |
| 01 | 12 |
| 1944 | 1998 |

அமரர்

**சின்னப்பொடி நல்லதம்பி**

(திரவியம்)

(வர்த்தகரும், முன்னாள் 'அமர்னா' லொறி உரிமையாளரும்)

வர்த்தகத்தால் பொருளீட்டி வாழ்க்கையிலே
சிறப்படைந்த
ஐம்பத்தினாலே வயது உடைய
ஆவரங்கால் பெயருக்கே இலக்கணமாம் நல்லதம்பி
(திரவியம்)
அருமனைவி சிவபாக்கியத்துடன் வாழ்ந்து
உருக்கமும் உயர்வுமுள்ள ஓராறு பிள்ளைகளை
உலகுக்குத் தந்துவிட்ட மேலோன்
விரக்தியுடன் எமையிங்கு வீழ்ந்தழ வைத்து-நோயால்
மேலுலகு சென்றதேனோ?
ஒருமாதம் என்ன ஒன்பது மாதமென்ன ஒன்பதாயிரம்
மாதங்கள் தான் சென்றாலும் ஆறாது எம் துயர்!

இன்று (17-01-99) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் வாடும்
**மனைவி, பிள்ளைகள்.**

சாந்தா தோட்டம்,
ஆவரங்கால், புத்தூர்

(62139)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சோமசுந்தரம் குகதாசன்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09-06-1948 | 19-12-1998 |

திதி: 17 — 01 — 1999

மலர்ந்திடும் வெகுதானிய மார்கழி மூன்று மூலம்
புலர்ந்திடும் அமாவாசையிப் புவியிலங்க -குலந்திகழ்
உரும்பையூர் வடக்குறை சோமசுந்தரம் குகதாசன்
அரும்பதம் இணைந்தநாள் அணைந்து!

ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும்

**மனைவி, சகோதரிகள்,**
**மைத்துனர், மருமக்கள்.**

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(சி/6151)

## பிரதேசசபைத் தலைவர் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 17

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆலையடி வேம்பு பிரதேசசபைத் தலைவர் இ. நடராஜா கடந்த புதனன்று விடுதலை செய்யப்பட்டார்.

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணக் கல்விவலயத்தின் கீழ் அடங்கும் நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் —

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தை சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் — இடம் பெறவுள்ளதாக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்துக்கு சமுகமளிக்கும் போது ஒவ்வொரு பாடசாலை அதிபரும் தத்தமது பாடசாலையில் உள்ள ஆசிரியர்களின் முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் மற்றும் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களின் விவரங்கள் ஆகியவற்றைக் கொண்டு வருமாறு பணிக்கப்பட்டுள்ளனர். (இ-7-51)

## நீர்கொழும்பில் 2 இந்தியர்கள் கைது

கொழும்பு ஜன. 17

போலியான இந்திய ரூபாத் தாள்களை இலங்கையில் அச்சிட்டுக் கொண்டு இந்தியாவுக்கு செல்ல முயன்ற இரு இந்தியர்கள் நீர்கொழும்பில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது

இலங்கையர் ஒருவரே போலியான இந்திய நாணயத் தாள்களை அச்சிட்டு மேற்படி நபர்களுக்கு விநியோகம் செய்து வந்தார் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் —

இவர்கள் இருவரிடமும் இருந்து இந்திய ரூபாவில் 6 இலட்சம் ரூபா பெறுமதியான பணத்தாள்கள் இரகசியப் பொலீஸாரால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## அதிகாரிகள் குழு விஜயம்

நெடுந்தீவு, ஜன. 17

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ் செல்வநாயகம் உட்பட யாழ் செயலக உயரதிகாரிகள் மற்றும் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் அடங்கிய குழு நேற்று அனலை தீவுக்கு விஜயம் செய்தது. அங்கு நடைமுறைப்படுத்தப் பட்ட அபிவிருத்தித்திட்டங்களை குழுவினர் பார்வையிட இருந்தனர்.

(ஐ-111)

## யாழ்.செயலக நுழைவாயில் திறக்கப்படும்

நல்லூர், ஜன. 17

யாழ். அரசாங்க செயலகத்தின் முன்பக்க பிரதான வாயில் செயலகக் கட்டடத்தின் நுழைவாயில் என்பன நாளை திங்கட்கிழமை முதல் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்படவுள்ளன.

பிரதான கட்டடத்தின் நுழைவாயிலுக்கு அருகாமையில் [illegible] போன்று விசாரணைக் கருமபீடமும் இயங்கவுள்ளது.

[ஐ-103]

### விசர் நாய் கடித்து

## ஏ. ஆர். வி. தடுப்பூசி ஏற்றிவந்த பெண் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 17

விசர்நாய்க்கடிக்கு இலக்காகி அதற்கான தடுப்பூசி மருந்து போட்டு வந்த பெண் ஒருவர், ஊசி மருந்தை முழுவதுமாகப் போட்டு முடிப்பதற்கு முன்பே உயிரிழந்தார்.

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த வேலாயுதம் நாகரத்தினம் (வயது 63) என்ற வயோதிபப்பெண்ணே மரணமானவராவார்.

ஏ ஆர். வி. மூன்றாவது ஊசி மருந்தைப் போட்ட பின் திடீரென ஏற்பட்ட காய்ச்சல், வலிப்பு நோய், மூச்சுத்திணறலை அடுத்து கடந்த 4ஆம் திகதி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்

யாழ். ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நிலையில் அங்கே அவரின் கை, கால்கள் செயலிழந்து நோய் தீவிரமடைந்தது

நோயின் தன்மையைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, வேண்டிய பரிசோதனைகளை (இரத்தப் பரிசோதனை) கொழும்பில் மேற்கொள்ள அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பரிசோதனை அறிக்கை வந்து சேர முன்பே, சிகிச்சைக்குட்படுத்தி பத்தாம் நாள் அவர் மரணமானார்.

இதேவேளை —

விசர் நாய்க்கடிக்கு இலக்கான மற்றொரு சிறுவனும் இதேபோன்று தடுப்பூசி போட்டு வந்த சமயத்தில் திடீரென நோய்வாய்ப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

கச்சேரி — நல்லூர் வீதியைச் சேர்ந்த டானியல் சாம்சன் (வயது 11) என்ற சிறுவனுக்கே இந்நிலை ஏற்பட்டது.

இச்சிறுவன் விசர் நாய்க் கடிக்கு ஆளாகி இரண்டாவது ஏ. ஆர். வி. தடுப்பூசி போட்ட பின்னரே இவ்வாறு திடீரென சுயீனமுற்றான்.

(ஐ-15)

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 | 17 |
| 09 | 01 |
| 1921 | 1978 |

அமரர்

**ஆ. க. ஆறுமுகம்தம்பி**

(Station Superintendent C. G. R, Maradana)
(ரயில் நிலைய அத்தியட்சகர், C. G. R. மருதானை)

ஆண்டுகள் எத்தனை கழிந்தாலும்
நினைவுகள் என்றென்றும் நீங்காத

**அன்பின் மனைவி கமலா.**
**பேரமக்கள். சகோதர சகோதரிகள்,**
**மைத்துனர், மைத்துனிகள்.**

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(62175)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 28 | 28 |
| 08 | 01 |
| 1961 | 1998 |

**அமரர் த. சத்தியசீலன்**

(கிளை முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி)

பாசத்தின் உறைவிடமாய், பண்பின் நிலைக்களனாய் விளங்கிய எங்கள் குடும்பத்தின் அணையாத தீபமே! ஆண்டு ஒன்று என்ன ஆயிரம் தான் சென்றாலும் ஆறிடுமோ உங்கள் துயர்?

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**பெற்றோர், உறவினர்கள்.**

அடிச்சேரி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(62207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



## சிவரட்ணம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

பிறப்பு:
**31–08–1964**

அழிப்பு:
**16–01–1997**

திதி: 25–01–1999

கண்ணான கண்ணாளா
காலமெல்லாம் உமை நினைத்து
காத்திருந்ததை நீர் மறந்து
கண்ணீரை எமக்களித்து
காததூரம் போனதென்ன?
உலக சக்திகள் அனைத்தின் முன்னும்
உமை இழந்த நாளில் - நாம்
அனாதரவானோம் ஐயா!
அகவை இரண்டு ஆனாலும் நினது
அன்பு முகம் மறையவில்லை அப்பா!
மீண்டும் உமை எங்கு காண்போம்?
உமது புகழில் நாம் வாழ்வோம் அப்பா!
எமக்கு நினது இனிய முகம் ஒன்றே வேண்டும்
எம் இனிய தந்தையே! உமை நினைத்து
ஏங்குகிறோம எந்நாளும்!
கண்ணா நீ எங்கே......
கருணையே உருவான கண்ணா!
மங்காத புகழும் மாறாத புன்னகையும் கொண்ட
கங்கையாய் எம் கண்ணில் நிறைந்துள்ளாய் கண்ணா
உற்றவர் மட்டுமன்றி மற்றவர்களின் மனதிலும்
நிலையாக இடம்பிடித்தாய் - கண்ணா!
குல விளக்கே! குன்றாத
நவமணியே! குவலயமே!
குமுறுதையா மனம்
வந்து மாய்த்தானே
மாய மானை நம்பி மோசம் போனனையோ?
குற்றாலத்தில் கூடி மகிழ்ந்தோம் - கண்ணா
குருவி பறந்த கூடாய் ஆனதையா – எம் இல்லம்
வா வென்று வரவழைத்து
வஞ்சகமாய் சதிதீட்டி
சாசடித்து விட்டனரே பாவிகள்!
கலியுகக் காலத்தின் அவப்பலிக்கு
காலந் தான் பதில் சொல்லும்!!
கண்ணான எம் கண்ணனுக்கு
கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கை யாக்குகின்றோம்.

பெறுக சாந்தி!

— குடும்பத்தினர்

77/58, இராமநாதன் வீதி,
'குற்றாலம்'
யாழ்ப்பாணம்.

(62:92)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் இவ்வாண்டுக்கான பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் வி. ப. வேலாயுத பிள்ளை தலைமையில் மேற்படி கூட்டம் இடம்பெறும்.

இது தொடர்பான கடிதங்கள் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் இ. சிவபுண்ணியம் தெரிவித்தார். (ஐ-36)

## உழவர் பெருவிழா

வலி கிழக்கு, ஜன 17

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு நடத்தும் உழவர் பெருவிழா இன்று ஞாயிறு காலை 9 மணி முதல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் அலங்கார ஊர்தி, பட்டிமன்றம், பாட்டு மன்றம், கவியரங்கம், நாடகம், நாட்டியம், விநோத உடைப் போட்டி உட்பட பல கலை நிகழ்வுகள் இடம் பெறும். (ஐ-180)

## ரெலிகொம் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 17

'ரெலிகொம்' நிறுவன யாழ். அலுவலகப் பணியாளர்களின் பொங்கல் நிகழ்வு நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது.

பண்ணை மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் பொங்கலிட்டு, விசேட பூசை செய்த பின்னரே பணியாளர்கள் தமது அலுவல்களை ஆரம்பித்தனர். பொங்கல் நிகழ்வில் பிரதேச பொறியியலாளர் ச. பாலசுப்பிரமணியம் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

## கலந்துரையாடல்

வேலணைப் பகுதியில் மரமுந்திரிகைச் செய்கையினை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வேலணை பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சகல சன சமூக நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள ஆகியவற்றின் தலைவர். செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி கேட்டுள்ளார். (ஐ-ரீ)


உ
சிவமயம்

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

**அன்புடையீர்!**
நிகழும் வெகுதானிய வருடம் தை மாதம் 4 ஆம் நாள் (18 - 1 - 99) திங்கட்கிழமை காலை 10-45 மணி முதல் 12-00 மணி வரை வரும் சுபவேளையில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள கிளை ஸ்தாபனமான

**தரன் நகை மாளிகை**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் வருகைதந்து எம்மை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தரன் நகை மாளிகை**
பிரதான வீதி,
பருத்தித்துறை.

[illegible]
(உரிமையாளர்)

(62212)



உ

## ஸ்ரீ பண்டாரி அம்மன் கோயில்

தம்பசிட்டி

**அபிராமிபட்டர் விழா**

இன்று (17 - 01 - 99) ஞாயிற்றுக்கிழமை
பகல் 12 00 மணி
மேளக்கச்சேரி: ஜெகநாதன் குழுவினர்
மாலை 4 மணிக்கு அந்தாதி பாடல்
பக்கவாத்தியசகிதம் இசைப்பவர்
இசைப்புலவர் சங்கீத வித்துவான்
பிரம்மஸ்ரீ க. இராமநாதன் அவர்கள்.
அனைவரும் வருக! அபிராமி அருள் பெறுக!

- ஆதீனகர்த்தா

[62224]


# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
01
—
02
—
1917



அரன் அடியில்
01
—
02
—
1984

திருமதி

## அசுபதி சின்னத்தம்பி

(பளை, தெல்லிப்பழை.)

திதி:- 17 - 01 - 1999

அகம் நிறைந்த அன்னைக்கு எம் அஞ்சலிகள்!

**கணவன், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''சத்தி வாசா'',
பளை, தெல்லிப்பழை.

(62213)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## இராசையா சின்னம்மா

(கோண்டாவில் வடக்கு)

தோற்றம்:
**24–07–1924**

மறைவு:
**16–12–1998**

16—12—98 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் ஆறாத்துயரில் கலந்து கொண்டு உதவிய நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகள் பல இன்று (17—01—99) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
அன்னுங்கை.

(62223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SHAMROCK
A/L 99
கிரயக் கணக்கீடு
திரு. பாலவாசன்
ஆரம்பம்: 18-1-99
Mon 4.00 P. M.
★ 2001 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.
(சி/6170)


# புவியியல் ஆசிரியருக்கான இரு நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் (பகுதி—D) நடத்தும் ஜி.சீ.ஈ. உயர்தர புவியியற் கற்கை நெறி சார்ந்த ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளைதிங்கட்கிழமையும் மறு நாள் செவ்வாய்க்கிழமையும் காலை 8.45மணிமுதல்மாலை 4.30 வரை யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை இடம்பெறும் கருத்தரங்கு நிகழ்வில் 'சூழல் பற்றிய எண்ணக்கரு', 'சூழல் மாநாட்டு தீர்மானங்கள்' எனும் தலைப்புகளில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும்—

'சூழல் தொகுதி' எனும் தலைப்பில் புவியியற்றுறை உதவிவிரிவுரையாளர் செல்வி எஸ். தர்மேஸ்வரியும்—

'வளி மண்டல அமைப்பும் பொதுச் சுற்றோட்டமும்', 'பச்சை வீட்டுத் தாக்கங்கள்' எனும் தலைப்புகளில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே. இராஜேந்திரமும்,—

'சமுத்திரச் சூழலும் மீன் பிடியும்', 'உலகக் கைத் தொழில்கள்' ஆகிய தலைப்புக்களில் புவியியற்றுறை விரிவுரையாளர் ஏ. எஸ். சூசையும்—

'உலக மண்பாகுபாடுகள்' எனும் தலைப்பில் செல்வி த. ஜானகியும்—

கருத்துரை வழங்குவர்.

செவ்வாய்க்கிழமை இடம் பெறும் கருத்தரங்கு நிகழ்வில்—

'கண்ட நகர்வுக் கொள்கைகள்', நில அளவையியல் — செயன்முறை' ஆகியதலைப்புகளில் புவியியற்றுறை விரிவுரையாளர் எஸ். ரி. பி. இராஜேஸ்வரனும்,

'குடியிருப்புக்களின் வகைகளும் நகராக்கமும்' என்ற தலைப்பில் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலனும்—

'கெப்பனின் காலநிலைப் பாகுபாடு' என்ற தலைப்பில் க. இராஜேந்திரமும்—

'ஞாயிற்றுத் தொகுதி' என்ற தலைப்பில் புவியியற்றுறை உதவி விரிவுரையாளர் த. ஜானகியும்—

'சனத்தொகையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்



யா/ நாயன்மார்கட்டு

**ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேய்ச்சி)**

அம்பாள் ஆலயத் திருப்பணி நிதி

சேகரிப்புக்காக 15 - 01 - 99 வெள்ளியன்று சீட்டிழுப்பு நடைபெற்றது.

முதலாம் பரிசு இலக்கம்:- 974
இரண்டாம் பரிசு இலக்கம்:- 2163
மூன்றாம் பரிசு இலக்கம்:- 493

மற்றும் பத்து ஆறுதற் பரிசில்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 3733 | 4357 | 4555 | 3642 | 499 |
| 284 | 2884 | 4436 | 2433 | 84 |


விளம்பர அன்பளிப்பு:
ஸ்கைவே எலெக்றோனிக்ஸ்
(எலெக்றோனிக்ஸ் உபகரணங்கள் விற்பனையும் பழுதுபார்த்தலும்.)
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
(62226)


## E. R. போக்குவரத்து சேவை
( E. R. TRANSPORT SERVICE )

ஆதரவில்

பருத்தித்துறை

**ஐக்கிய விளையாட்டு கழகம்**

நடத்தும்

வடமராட்சி ரீதியிலான

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம்: திக்கமுனை மைதானம்
நாள்: இன்று (17 . 01 . 99) ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: பிற்பகல் 3. 30 மணி (புதிய நேரம்)
தலைவர்: திரு. ம. சூரிய குமாரன் (தலைவர் ஐக்கிய விளையாட்டுக்கழகம்)
பிரதம விருந்தினர்: திரு. சி. நடராஜலிங்கம் (முகாமையாளர், இலங்கை வங்கி, பருத்தித்துறை)
சிறப்பு விருந்தினர்: திரு. இ. ஞானசேகரம்பிள்ளை (அதிபர், வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை)

**3 ஆம் இடத்திற்கான போட்டி**

பரு. ஐக்கிய வி. கழகம் A அணி — எதிர் — மனோகரா வி. கழகம்

**இறுதி ஆட்டம்**

வல்வை ஆதி சக்தி வி. கழகம் — எதிர் — கலட்டி ஐக்கிய வி. கழகம்

அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பரு. ஐ. வி. கழகம்.

(C/6166)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

கோப்பாய் பிரிவு

பெருமையுடன் வழங்கும்

# உழவர் விழா

**இடம்:** கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மண்டபம்
**நாள்:** 17 - 01 - 1999 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 9-00 மணி முதல் — பிற்பகல் 4-30 மணி வரை

தலைவர்: **வைத்திய கலாநிதி வை. தியாகராசா** (தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - கோப்பாய் பிரிவு)

பிரதம விருந்தினர்: **திரு. து. வைத்திலிங்கம்** (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்: **பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்** (தலைவர், இலங்கைசெஞ்சிலுவைச்சங்க யாழ் கிளை)
**திரு. கே. கேதீஸ்வரன்** (பிரதேச செயலர், கோப்பாய்)
**திரு. எஸ். சிவலோகநாதன்** (விவசாய உதவிப் பணிப்பாளர்)
**திரு. எஸ். சுந்தரேசன்** (விவசாய சேவைகள் உதவிப் பணிப்பாளர்)

கௌரவ விருந்தினர்கள்: **திருமதி எஸ். யோகேஸ்வரி** (முகாமையாளர், மக்கள் வங்கி - கன்னாதிட்டி)
**திரு. எஸ். விக்னேஸ்** (பணிப்பாளர், ஐ. ஐ. எஸ். யாழ்ப்பாணம்)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
வரவேற்புரை: திரு. இ. மயில்வாகனம் (செயலாளர், இ. செ. சங்கம் - கோப்பாய் பிரிவு)
நயப்புரை: "உலகளாவிய பொங்கல்" ஐயா. சச்சிதானந்தம்
நல்லுரை: செல்வன் வி. வீரகுமார் (பயிற்சி மாணவர் தலைவர்)
செல்வி இ. சுரேந்திரா (பயிற்சி மாணவர் தலைவி)

**கலை நிகழ்ச்சிகள்**

◆ பட்டிமன்றம் ◆ விவசாய அறிவுப் போட்டி ◆ நாடகங்கள்
◆ கவியரங்கம் ◆ தனி நடிப்பு ◆ நடனம்

சிறப்பு நிகழ்வாக **பாட்டு மன்றம்** பின்னணி; அருணா

◆ சுழலும் சொற்போர் ◆ வில்லிசை

நன்றியுரை

**சுவைஞர்களின் நயப்புக்கு நல்லதோர் விழா!**

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

கோ. செ. ச. பிரிவினரும் பயிற்சி மாணவரும்.

(சி/6165)

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் செல்லத்துரை
(அரசாங்க ஒப்பந்தக்காரர்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அரசாங்க ஒப்பந்தக்காரர் சுந்தரம் செல்லத்துரை அவர்கள் 14-01-99 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் பார்வதியம்மாவின் அன்புக் கணவரும் சுகந்தா, வசந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (கனடா), அனுசிபா (ஜேர்மனி), செல்வரூபன் (கனடா), ஜெயரூபி (கனடா), கிருஜா (ஜேர்மனி), ஸ்ரீபவானி (இராமநாதன் கல்லூரி, இலிகிதர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி அன்னபூரணம், காலஞ்சென்ற திருமதி நாகரெத்தினம், திரு. சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு. செ. ஜெகதீஸ்வரன் (சிற்றிஸ்ரார், உரிமையாளர்), திரு. கணேஸ்கரன், திரு. சுதர்சன், திரு. புவனேந்திரன், திரு. சரவணபவன், திரு. ரவிதாஸ் ஆகியோரின் மாமனாரும் ஜெனார்த்தனன், ஜெயிசன், ஜெரூசன், கஜானன், கஜானி, தாட்சாயினி, சாருகா, ஜோபி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-01-99 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**செ. ஜெகதீஸ்வரன்** (மருமகன்)

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி/6163)

## கதிரவேலு தியாகராசா
(விஷகடி வைத்தியர்)

வேணை 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்காலிகமாக 87, கொல்லவிழாங்குளம், மல்லாவியில் வசித்தவருமாகிய பிரபல விஷகடி வைத்தியர் கதிரவேலு தியகராசா 15-1-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் விமலாதேவி, சற்குணதேவி (ஜேர்மனி), புஸ்பரதி, தில்லைச்சிவன் (லண்டன்), விஜயகாந்தன் (காந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பெரிய தம்பி, சோமசுந்தரம் (ஜேர்மனி) காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஷம்மா (வேலணை, விஷகடி வைத்தியர்), சிற்றம்பலம் (கொட்டடி விஷகடி வைத்தியரும், இளைப்பாறிய அதிபரும், கனடா), சிவபாதலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மல்லாவியில் 16-1-99 சனிக்கிழமை அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இளையதம்பி அனுஷம்மா** (சகோதரி)
**இ. சற்குருநாதன் (அப்பு)** (மருமகன்)

23, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(62231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வீடியோ
CD வெளியீடு!
ரஞ்சித் - மோகினி
நடித்த
சேரன்
சோழன்
பாண்டியன்

**சுப்ப ஸோ**

யாழ்ப்பாணம்-

(சி/6172)

## புவியியல்...

(ஏழாம் பக்கத் தொடர்)

யும்' என்ற தலைப்பில் புவியியற்றுறை உதவி விரிவுரையாளர் எஸ். பி. சோபனாவும்,—

'உலக வர்த்தக அமைப்பு—சூழல் சட்டங்கள்' என்ற தலைப்புக்களில் முறையே உதவி விரிவுரையாளர் எஸ். சர்மிளாவும், எஸ். தர்மேஸ்வரியும் கருத்துரை வழங்குவர். இறுதியில் சான்றிதழ்களை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார். (ஐ-க)

## மாங்குளத்திலி...

(முதலாம் பக்கத் தொடர்)

படைத்தரப்பினால் அறிவிக்கப்பட்டது.

புலிகள் நேற்றுக்காலை நடத்திய மோட்டார் தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

அதேசமயம் கடந்த வியாழக்கிழமை ஒட்டுசுட்டான் பகுதியிலும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5-7)

## உதைபந்தாட்ட இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். உதைபந்தாட்ட லீக் அதன் தலைவர் கிண்ணத்துக்காக நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. டபிள்யூ. விமலராஜன் கலந்து கொள்வார்.

இறுதிப்போட்டியில்றோயல் வி. க. அணியும் பாடுமீன் வி. க. அணியும் மோத உள்ளன.

இந்த இறுதிப் போட்டி கடந்த மாதம் நடைபெற இருந்து மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. (ஐ)

## 15 பேர் பலி!

பங்களாதேஷில் வீசிய பனிப் புயலினால் 15 பேர் வரை பலியாகியுள்ளனர்.

வட மேற்கு பங்களாதேஷிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளும் வயோதிபர்களுமாவர்.

இப் பகுதியில் பனிமூட்டம் நிலவுவதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓம்
அம்பாள் துணை

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் தைத்திங்கள் 7 ஆம் நாள் ( 21-01-1999 ) வியாழக்கிழமை நண்பகல் 12. 00 மணி முதல் வரும் சுப முகூர்த்த நல்வேளையில்,

யாழ். கஸ்தூரியார் வீதி, 213 C இல் அமைந்த கட்டடத்தில்

**தயா நகைப் பூங்கா**

( தங்க — வைர நகை வியாபாரம் )

அசல் 22 கரட் தங்க நகைகளைத் தெரிவு செய்திட சிறந்த ஸ்தாபனம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(62217)

தங்கள் நல்வரவை நாடும்
செல்வரட்ணம் தயானந்தன்
குடும்பத்தினர்.

## யாழ். நகரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னிலையில் நடைபெறவுள்ளது.

போரினால் உயிர் பறிக்கப்பட்ட வடக்கு—கிழக்கு மக்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளானவர்கள், கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள், காணாமல் போன மாணவர்கள், சிறையிலுள்ள அப்பாவிகள், அகதிகள் இடம் பெயர்ந்தவர்கள், வன்னியில் வாடும் மக்கள், நிவாரணம் மறுக்கப்பட்டோர், நலிந்து போன மக்கள் ஆகியோருக்காக நடத்தப்படும் இந்த சர்வமத தெய்வ வழிபாட்டு ஆராதனையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் போன்றவற்றில் அங்கம் வகிக்கும் பல தொண்டர் நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்த சர்வ மதப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களை இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில் ஒன்று கூடுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரார்த்தனை வழிபாட்டின் இறுதியில் அறிக்கை ஒன்றும் வெளிபிடப்படவுள்ளது (இ-5-6-7-173)

## இசை ரசிகர்களுக்கோர் அரிய வாய்ப்பு!

லீட்ஸ் இன்ஸ்ரிரியூட், சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ், மாருதி ரெக்ஸ்

ஆதரவில்

யாழ். லயன்ஸ் கழகம் நலிவுற்றோர் நலன் நிதிக்காக வழங்கும்

இசை விருந்து

## பொங்கிவரும் இசை வெள்ளம்

ஈழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களுடன்
யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட, விஞ்ஞான பீட, கலைப்பீட மாணவர்கள்
முதன்முறையாக இணைந்து வழங்கும்
மிகப் பிரமாண்டமான திரை இசை நிகழ்ச்சி

உங்கள் அபிமான பாடகர்களான
சியாமளன், சிவரூபன், முரளி, குகானந்தன், நிமால் சங்கர், சுகந்தன்,
மற்றும் இசைக்குயில்கள்
செல்விகள் ஜெயபாரதி, சசிரேகா, பவானி, திவ்வியா ஆகியோருடன்
லயன் ராஜேஸ் ஆகியோர் பாடல்களை அள்ளி வழங்குகின்றனர்.

இடம்: கைலாசபதி கலை அரங்கு (யாழ். பல்கலைக்கழகம்)
காலம். 17 - 01 - 1999 காலை 10.00 மணி, மாலை 2.30 மணி.
(புதிய நேரம்)

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பும் நிகழ்ச்சி தொகுப்பும்
உங்கள் ஜனரஞ்சக அறிவிப்பாளர் S. K. குணா

குறிப்பு:
- ★ நிகழ்வு ஆரம்பமாவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பதாக அரங்கின் சகல வாசல்களும் மூடப்படும்.
- ★ எனவே இன்றே உங்கள் ஆசனத்தை உறுதிப்படுத்துங்கள்

அரங்க ஒலி அமைப்பு. சேகர் சவுண்ட்ஸ் ஒவ் மியூசிக்.
வர்ண ஒளி அமைப்பு: றோஸ் ஆட்ஸ்.
அரங்க வீடியோ: ஒளி அருவி வீடியோ விஷன்

முக்கிய கவனிப்பு:
யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தரும் வண்ணம் இத்தால் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

அன்பளிப்பு: ரூபா 500 ரூபா 250 ரூபா 100 ரூபா 50

மண்டப வாயிலிலும் நுழைவுச் சீட்டுக்களைப் பெறலாம்.

செயலாளர்,
யாழ். லயன் கழகம்.

தலைவர்,
யாழ். லயன் கழகம்.

பல கலைஞர்களை ஒன்று திரட்டிய
**பொங்கும் இசை வெள்ளம்**
காணத் தவறாதீர்கள்......
பின் கவலையடையாதீர்கள்.

(சி/6162)

"இதோ வந்து விட்டது!"

யாழ்ப்பாணப் பெருமக்களே!
நுளம்புத் தொல்லையிலிருந்து
உங்களைப் பாதுகாப்பதற்கும்
இதமான தூக்கத்திற்கும்
மாணவர்களின் சுகமான படிப்புக்கும்

**கார்டியன் நுளம்புத்திரி**
**Guardian Mosquito Coil**
( பக்க விளைவு அற்றது )

சந்தைப்படுத்துவோர்:

M. L. & Co.
Managed By
ESWARAN BROTHERS
FOODS [ Pvt. ] LTD.
235, 237, HOSPITAL ROAD,
JAFFNA
T. P. 2506

உங்கள் ஓடர்களுக்கு
முந்திக் கொள்ளுங்கள்.

(62124)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் பொன்னுத்துரை

செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் பொன்னுத்துரை 16-01-99 அன்று காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், லோகநாயகி, தயாபரன்(தபாலகம் பண்டத்தரிப்பு),செல்வரதி, திருமுருகன், ஞானகுருவேல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரராஜசிங்கம், விமலேந்திரநாதன், இந்துமதி,சுதர்சினி ஆகியோரின் மாமனாரும் ஜதாங்கி சனதாங்கி, சிந்துர்ஜன், நிருத்தனா, சிகரஜன், வாகினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-1-99 ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணிக்கு 192, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ. தயாபரன்
(மகன்)

192, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

(62237)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

# சஞ்சிகை

17 - 01 - 1999 சஞ்சீவி

சாரங்கா நகை மாடம்

மங்கையர் மனம்
கொள்ளை கொள்ளும் தங்க
ஆபரணங்கள் அத்தனையும்
அசல் 22 கரட்டில்
வாங்குவதற்கு

சாரங்கா நகைமாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. No :- 2480

(C/6135)

## கருத்துக் கலசம்

மயூரா

### தன்னம்பிக்கை

தைபிறந்தால் வழி பிறக்கும் என்றொரு வாக்கியம். பண்டைக் கால நிலையின் ஒழுங்கில் பருவ மழைக் குளிரும் பனிக் குளிரும் அகன்று, மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம் நீங்கி, தை மாதத்தில் சூரியன் சோதியாகப் பிரகாசிக்கத் தொடங்கி விடுவான்.

அதே போன்று, கழனிகளில் விளைந்த நெல்லும் வேறு தானியங்களும் வீட்டுப் பெட்டகங்களை நிரப்பி விடும். அதன் பின்னர் அவையே உணவாகியும் செல்வமாகியும் வாழ்க்கையில் வழி பிறக்க உதவும்.

மனித வாழ்க்கைக்கு நம்பிக்கையே பற்றுக்கோடு என்ற உண்மையையும் இந்தச் சொற்றொடர் சுட்டுகிறது. இடர்கள், இயலாமைகள் வரும்போது இனிமேல் நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையுடன் செயற்படாதவனுக்கு வாழ்க்கையேசூனியமாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னம்பிக்கை மிக அவசியம். தன்னம்பிக்கை இல்லாதவன் பலவீனமானவன். பலவீனம், இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. ஆகையால் தன்னம்பிக்கை என்ற வலிமையை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தன்னம்பிக்கை என்ற வலிமையை வளர்த்துக் கொள்ள, உண்மை அத்தியாவசியம். உண்மையைக் கைக்கொள்பவனுக்கே, உண்மையாக வாழ்பவனுக்கேமனவலிமை வரும். மனவலிமையின்மறு பெயர் தான் தன்னம்பிக்கை.

தான் பலவீனன் என்று நினைப்பவன், தன்னிடம் குறைபாடு உண்டென்று எண்ணுபவன்வாழ்க்கையில் முன்னுக்கு வர்மாட்டான்; வரவும் முடியாது. உண்மையை வாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவிலும் அனுஷ்டித்து மனவலிமை பெறுபவன் மட்டுமே மனிதன்.

நம்பிக்கையை இழந்து விடாதே. வாழ்க்கைப் பாதை கத்தி முனையில் நடப்பதைப் போல மிகவும் கடினமானதுதான். எனினும் எழுந்திரு; விழித்துக் கொள்; மனம் தளராதே. நீ அடையவேண்டிய — அடைய நினைக்கும் — இலட்சியத்தை— குறிக்கோளை — கண்டுபிடி — என்று சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு அறிவுரை பகர்கிறார்.

இளைஞர்கள் மட்டுமென்ன, வயதில் மூத்தவர்களுக்கும் இந்த அறிவுரை பொருந்தும். தன்னம்பிக்கையும் உண்மையும் இல்லாதவன் வாழ்க்கையில் வரலாறு படைக்க இயலாது. இதனை ஊன்றி உணர்ந்து உய்வோமாக!!

# பாடசாலைக் கல்வி முறை இன்று எங்கே போகின்றது?

காலத்திற்குக் காலம் மனித நாகரிக வளர்ச்சியுடன் கல்வியின் சிந்தனை வடிவங்களும் மாறி வருவதை நாம் தெளிவாக காண முடிகின்றது.

பண்டைய கிரேக்கத்தில் கல்விக்கான சிந்தனைகள் ஒரு பக்கச் சார்புடையதாகவே அமைந்தன. அக்காலத்தில் நாட்டு அரசியலுக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு இருந்த போதும் ஜனநாயகத்திற்கான கல்வி புறக்கணிக்கப்பட்டபோது பிளேட்டோ, அரிஸ்ரோட்டல் போன்ற கல்விச் சிந்தனையாளர்களின் வழியே கல்வி ஜனநாயக மயமாக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் கல்வியில் சமசந்தர்ப்ப உரிமை என்பது தேக்கநிலை அடைந்த போது கற்றல் என்பது சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கே ஏகபோக உரிமையாக்கப்பட்டிருந்தது. பின்னர் ரூஸோ போன்ற நவீன சிந்தனையாளர்களால் கல்வி என்பது மனிதனாகப் பிறந்த எவனுக்கும் உரிமையுடையதாகும் என்ற கருத்து வலுவூட்டப்பட்டபோதே பாடசாலைகள் என்கின்ற நிறுவனரீதியான அமைப்புகள் உதயமாகின. காலப் போக்கில் முறையான கல்விக்கும், மாணவர், ஆசிரியர் இடையே கற்றல் — கற்பித்தல் நிகழ்வுக்கும் அடித்தளமாக அமையும் பிரதான நிலையங்களாக பாடசாலைகள் விளங்கலாயின. இன்று பாடசாலைகள் என்பது ஒரு சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு இன்றி அமையாத நிறுவனங்களாக பரிணமிக்கின்றன. ''ஒரு மாணவன் பாடசாலைக்குள் வரும்போது தன் சமூகத்தையும் அழைத்து வருகின்றான்'' என்று ஒரு கருத்துண்டு. அதற்கிணங்க கல்வியை ஒரு சமூகத்திற்கு கையளிக்கின்ற பாரிய பணியில் பாடசாலைகள் செயற்படுன்றன என்பது தெளிவாகின்றது.

### கலைத்திட்டமும் பாடசாலையும்

இன்று நடைமுறையிலுள்ள முறையான கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் அடித்தளமே அது தொடர்பான கலைத் திட்டமாகும். இக் கலைத்திட்டத்தை வழிப்படுத்தும் உரிமையைப் பாடசாலைகளே உரிமையாக்கிக் கொண்டுள்ளன. இதேவேளை கலைத் திட்டத்தினூடாக அச்சமூகம் சார்ந்த சமூக, கலாசார, பொருளாதர அமைப்புகளை இனங்காண முடியும் என்பது சிந்தனையாளர்களின் கருத்தாகும்.

சமூக மாற்றத்தின் தன்மைகள் தனிமனித வாழ்வியலில் தாக்கங்களை ஏற்படுத்தும்மிடத்து வாழ்க்கைத் தத்துவங்கள் மாற்றமடைகின்றன. இவ்வகை சார்ந்த சமூக மாற்றங்களையும் தேவைகளையும் கருத்திற் கொள்ளும்போது கலைத்திட்டத்தில் இம் மாற்றங்களின் உள்வாங்கல்கள் மறுக்கப்பட முடியாதவை ஆகின்றன. கலைத்திட்டத்தை முற்றுமுழுதாக ஒதுக்கிவிட்டு ஒரு பாடசாலைக் கல்விமுறை தோற்றுவிக்கப்பட முடியாது என்கின்ற கருத்து இப்போது முறைசாராக் கல்வி மூலம் வலுவிழக்கப்பட்டாலும் அங்கு கூட ஒரு கலைத்திட்ட வடிவம் பின்பற்றப் படவே செய்கின்றது.

ஜோன்டுயி போன்ற நவீன சிந்தனையாளர்களின் பார்வையில் ''பாடசாலையில் வழங்கப்படுகின்ற கல்வியானது நாளைய சமூகத்தில் மாணவன் ஒருவன் வாழ்வதற்கு பொருத்தமுடைய தாக்குவதே'' என்பதாகும். இவருடைய பார்வையில் கல்விக்கு முடிவானதும், நிலைபேறானதுமான நோக்கங்கள் கிடையா. எனவே சமூக மாற்றத்தின் நிகழ்கால தேவைகளையும் மாறப்போகும் சமூகத்தின் எதிர்கால தேவைகளையும் நிறைவு செய்யும் தயார் நிலையில் கலைத்திட்டத்தின் பணி அமவைதே சிறந்தது.

ஆனால் நடைமுறை கலைத்திட்டமும், தற்போதைய பாடசாலைக் கற்றல் நிகழ்வுகளும் 21ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான பிரஜைகளாக பிள்ளைகளை மாற்றுவதில் எவ்வகை சார்ந்த பங்களிப்புகளையும் செய்ய வேயில்லை. மரபு ரீதியான நடைமுறைகளில் இருந்து இன்னும் பாடசாலைகள் மாறவில்லை. காலத்திற்கு காலம் எவ்வகையான கலைத்திட்ட மாற்றங்களும் கல்வி நிர்வாக மாற்றங்களும் நடைமுறையில் வந்தும் கூட அவை இம் மரபு வேலிகளையும் அதற்குள் நின்றுகொண்டிருக்கும் ஆசிரியர் மாணவர்களையும் மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தத் தவறிவிட்டன.

இன்றைய பாடசாலைகளில் ஆசிரியர்களின் பிரதானமான நோக்கமாக அமைந்திருப்பது ''மாணவர்களைப் பரீட்சையில் சித்தியடையச் செய்வது'' ஆகும். பரீட்சையில் சித்தியடைந்து விட்ட மாத்திரத்தில் கல்வியின் நோக்கங்கள் எய்தப்பட்டதாகக் கருதும் மனப்பாங்கே பெற்றோரிடமும் காணப்படுகின்றது. அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதிலேயே ஆசிரியர்களும் முனைப்பாக உள்ளனர்.



எனவே ஆசிரியரின் கருமத்தின் ஊடாக எய்தவேண்டிய நோக்கங்களை இவ்வகை எதிர்பார்ப்புகள் மாற்றியமைத்துவிடுகின்றன. இன்று மேற்குலக நாடுகளில் பாடசாலைக் கல்வி முறை மீது அதிருப்தி அலைகளும், சார்பற்ற கருத்துகளும் மேலோங்கியே காணப்படுகின்றன.

அமெரிக்க கல்வி ஆய்வாளர்களான ஐவன் இலிட் (Ivan Ilid), எட்மோ ரீமர் (Edmo Remar), ஜோன் கொலிட் (John Kolid) போன்றோரும் இன்று நடைமுறையிலுள்ள கல்வி பயனற்றது எனவும் பாடசாலைகளற்ற ஒரு சமூகமே இன்றைய தேவை எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். பாடசாலைக் கல்வியினால் அதன் நோக்கங்கள்— இலக்குகள் — எய்தப்படுவதில்லையாதலால் கல்விக்காகச் செய்யும் முதலீடு பயனேதுமின்றி விரயமாகின்றது என அவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்விக்கான முழுமை முதலீடுகளும் பாடசாலை, பல்கலைக்கழகங்கள் என்பவற்றிற்கு வழங்கப்பட்டும் அதன்மூலம் சிறப்பான அறுவடைகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

மரபுரீதியான கற்றல் நிகழ்வுகள் என்பது பாடசாலைகளை மட்டும் சார்ந்து இருந்தமையால் இம்முதலீடுகள் வீண் விரயத்தை ஏற்படுத்துகின்றன என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது.

இன்றைய அறிவு மைய யுகத்தில் (Knowledge Based Era) கல்விச் சிந்தனையில் புதிய வடிவங்கள் நாளுக்கு நாள் முக்கியத்துவம் பெறுகின்றன. வாழ்க்கை நீடித்த கல்வி, கற்றலுக்கான கற்றல் போன்ற நவீன எண்ணக் கருத்துகளின் அடிப்படையில் கல்வி என்பது பாடசாலையை மட்டும் தங்கியில்லாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களின் உளத்திறன் விருத்திக்கு பாடசாலையை விடவும் பாடசாலைக்கு வெளியேயான முறைசாரக் கல்வி, வளர்ந்தோர் கல்வி போன்ற புதிய நிகழ்வுத் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் மீதான அசைக்க முடியாத நம்பிக்கைகளை மாற்றி அமைக்க முடிகின்றது. மேற்குலக நாடுகளில் மட்டுமன்றி அண்மைக் காலங்களில் இலங்கையில் வெளியிடப்பட்ட கல்வி ஆணைக்குழுவின் அறிக்கைகள் கூட பாடசாலைகள் மீதான திருப்தியின்மையை தெளிவுபடக் கூறுகின்றன.

மாணவர்களின் ஒரே மாதிரியான கற்றல் பாணி (Learning Style), ஆசிரியர்களின் மாற்றமுடியாத மனப்பாங்கு என்பன எதிர்காலத்திற்கு பொருத்தமான பிரஜைகளை உருவாக்கும் பொது நோக்கில் இருந்து பாடசாலைகள் இடை விலகிப் போவதையே காட்டுகின்றன. ஒரு புறம் பரீட்சை நோக்கை மையமாகக் கொண்ட மாணவர்களின் கற்கும் முயற்சிகள்; மறுபுறம் ஒரே கற்பித்தல் முறைகளைப் பின்பற்றும் ஆசிரியர்கள். இவற்றால் பாடசாலை கல்வியின் கலைதிட்டத்தின் வழியான நோக்குகளை சரிவர அடையமுடியாமல் போய் விடுகின்றது.

21 ஆம் நூற்றாண்டில் கற்கும் சமூகத்தின் தேவைகளை, பாடசாலைகள் தனித்து நின்று நிறைவு செய்யும் இயல்புகளைப பெறவில்லை என்பது இப்போதைய உண்மையாகும். எனவே பாடசாலைக்கு வெளியே அறிவைத் தேடிப்பெறும் படலம் ஆரம்பமாகும்போது பாடசாலைக் கற்றல் நிகழ்வுகளின் குறைநிரப்பிகளாக பாடசாலைக்கு வெளியேயான நிறுவன அமைப்புகளின் தேவை புறக்கணிக்கப் படமுடியாத ஒன்றாக மாறிவிடும்.

இதேவேளை கல்விக்கான சமசந்தர்ப்பம் என்பது பாடசாலை மட்டத்தில் வினைத்திறனான விளைவுகளைக் காட்டவில்லை. சமசந்தர்ப்பத்திற்கென கல்வி நிர்வாகத்தில் பல மாற்றங்கள், சீர்திருத்தங்கள் மூலம் முன்மொழியப் பட்டாலும் கிராமப்புற, நகர்புற பாடசாலை என்கின்றபேதமும் தேசிய பாடசாலை என்கின்ற அமைப்புகளும் இன்னும் பாடசாலை ரீதியாக கல்விக்கான ஜனநாயகக் கதவு மூடப்பட்டுள்ள நிலைமையையே பறைசாற்றுகின்றன. சமூகத்தின் கீழ்வர்க்கத்தை சேர்ந்தோருக்கு ஜனநாயகக் கல்விக்கான சந்தர்பங்கள் எட்டாக்கனியாகவே இன்றும் உள்ளன.

உயர்கல்வி வாய்ப்புக்கென கிராமப்புற இளைஞர்கள் தொடர்ந்தும் புலம் பெயர்கின்ற நிலைமையும் இதன் மூலம் கிராமப்புறப் பாடசாலைகள் தொடர்ந்தும் புறக்கணிப்பிற்கு உட்பட்டுப் போவதுமாக பாடசாலைக் கல்வியின் மீது குற்றச்சாட்டுகள் நாளடைவில் வலுவடைகின்றன.

எனவே கீழைத்தேய நாடுகளில் யாவருக்கும் பொதுக்கல்வி என்கின்ற பார்வையில் பாடசாலைகளின் நடைமுறைக் கல்வி முறையில் கிராம, நகர்ப்புற மாணவர்களின் வாய்ப்புகளில்

(XV ஆம் பக்கம் பார்க்க)

- தருமராசா ஸ்ரீமுரளி -
(ஊர்காவற்றுறை, தம்பாட்டி
அ. த. க. பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளை இயங்கவைக்க பாதுகாப்பு விடயத்தில் அரசு சவால்?

**தை**ப்பொங்கலும் வந்து போய்விட்டது. தமிழர்களின் தலையாய பண்டிகை என்றவகையில் மக்கள் வீடுகளில் பொங்கினார்கள். மங்களமான நாளாகக் கருதப்படும் நேற்று முன்தினத்தில் மனம் பொங்காவிடினும் பானையில் பொங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பொங்கியவர்கள் பலர்.

வன்னியில் எங்கள் உறவுகள் வாடி வதங்கிக் கொண்டிருக்க, எமது வீடுகளில் நாம் பொங்கி மகிழ்வதா என்ற மனச்சலிப்புடன் பொங்கல் கொண்டாடாதவர்களும் பலர். வீட்டுமுற்றத்தில் பொங்க வசதி இல்லாது வீட்டுக்கு உள்ளே அடுக்களையில் சோற்றுக்குப் பதில் புக்கை சமைத்தவர்களும் உளர்.

தைப்பொங்கலை முன்னிட்டு, அதற்கு முக்கியமாகத் தேவைப்படும், அரிசி, பயறு, சர்க்கரைதேங்காய் ஆகியவற்றின் விலைகளில் யாழ்ப்பாண நகரத்தில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை. தனியார் கடைகளில் பொங்கல் அரிசி 39 ரூபாவுக்கும் கூட்டுறவுக் கடைகளில் 34 ரூபாவுக்கும், பயறு தனியார் கடைகளில் 60 ரூபாவுக்கும் கூட்டுறவுக் கடைகளில் 55 ரூபாவுக்கும், சர்க்கரை தனியார் கடைகளில் 60 ரூபாவுக்கும் கூட்டுறவுக்கடைகளில் 52 ரூபாவுக்கும் விற்பனையாகின.

முந்திய காலங்களில் பொங்கலுக்கு பத்துநாள் ஒரு வாரத்திற்கு முன்னரே அந்தந்தப் பிரதேசங்களில் பொங்கல் சந்தைகள் கூடத் தொடங்கிவிடும். இஞ்சி, மஞ்சள் மற்றும் பழவகைகள் உட்பட பொங்கலுக்குரிய பல பண்டங்களை வழமையைவிடக் குறைந்த விலையில் வாங்கலாம்.

ஆனால் இப்போது, பொங்கல் என்றதும் விலைகள் திடீரென உயரும் நிலையையே நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் காண முடிகிறது. எமது பிரதேசத்தின் வளங்கள் குறைந்து போனதன் பாதிப்புகளில் இதுவும் ஒன்று.

அக்காலத்தில் பொங்கலுக்குப் பல நாள்களுக்கு முன்னரே காதை அதிரவைக்கும் சீனவெடிச் சத்தமும் இப்போது இல்லை. மொத்தத்தில் களை குன்றிய, ஆரவாரம் இழந்த தைப்பொங்கல் இதற்கு முந்திய பல வருடங்களைப்போலவே நேற்று முன்தினம் (தைப்பொங்கல்) நாளும் கழிந்தது. சோர்வுற்ற மனங்களில் ஆழத்திலிருந்து மகிழ்ச்சி பொங்குவது என்பது கஷ்டமானதே. மேலோட்டத்தில் யாழ்ப்பாணத்திலும் தைப்பொங்கல் கொண்டாடப்பட்டது என்று மட்டுமே கூறலாம்.

★ ★ ★

**யா**ழ்ப்பாண நகரத்தின் இப்போதைய அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து — குரல் — அவ்வப்போது எழுவதும், தணிவதும், கரைந்து விடுவதுமாக ஆண்டுகள் பல சென்றுவிட்டன.

நகரத்தில் வசிக்கும் மற்றும் வந்து போவோரின் எண்ணிக்கை பல மடங்காகிவிட்டது. ஆனால் வீதிகள் அகலமாக்கப்படவில்லை. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கக்கூடிய நடைமுறைகளும் இல்லை. வாகனம் செலுத்துவோரும் (குறிப்பாக சைக்கிள் பயணிகளும்) பாதசாரிகளும் தமது வசதி கருதிப் போக்குவரத்துச் செய்யத் தொடங்கிய பின்னர் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளும், விதி முறைகளும் சுக்குநூறாகிவிட்டன.

பெரியாஸ்பத்திரி, மத்திய பஸ் நிலையம், மற்றும் வர்த்தக நிலையங்கள் கொண்ட நகரத்தின் இதயப் பகுதி எப்போதும் போக்குவரத்து நெரிசல் நிறைந்து காணப்படுகிறது.

பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறைவீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி என்பனவற்றில் முழுமையான போக்குவரத்து வசதி மற்றும் ஒருவழிப்பாதை முறை அமுல் செய்யப்பட்டால் நகரின் போக்குவரத்து நெருக்கடியைக் குறிப்பிடக்கூடிய அளவுக்குக் குறைக்கலாம்.

பருத்தித்துறை வீதி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லிவீதி என்பன நகரத்தின் இதயப் பகுதியில் மூடப்பட்டிருப்பதால் அவற்றால் வாகனங்களோ மக்களோ செல்ல முடிவதில்லை.

மேலும் பலவகைப் பொருள்களையும் வாங்குவதற்காக வரும் நுகர்வோர்கள் பெரும் எண்ணிக்கையில் ஒரே வீதியால் போக்குவரத்துச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியுள்ளது. சைக்கிள்கள். மோட்டார் சைக்கிள்கள், ஏனைய வாகனங்கள், பாதசாரிகள் என்று எல்லோரும் முட்டி மோத நேரிடுகிறது. மினி பஸ் சேவைகள், பஸ் சேவைகளும் இரண்டொரு வீதிகளாலேயே நடைபெறுவதால் போக்குவரத்து நெருக்கடி மிகப்பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது; விபத்துக்கள் இலகுவில் ஏற்படக்கூடிய சாத்தியங்களும் அதிகரித்துள்ளன.

எனவே நகரின் இதயப் பகுதிகளில் உள்ள — இப்போது மூடப்பட்டுள்ள — சில வீதிகளையாவது திறப்பதோடு முன்னரைப்போன்று ஒருவழிப் பாதை ஒழுங்கும் அமுல் செய்யப்படுவது குறித்துத் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

## செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டும்போது ஐ.நா. நிபுணரும் பிரசன்னமாக இருப்பார்

ஒருவகை சார்ந்த வர்த்தகநிலையங்கள் ஒரே வீதியில் (முன்னரைப் போல) அமைவதற்கும் வசதி செய்யப்பட வேண்டும். இது போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதோடு மட்டுமன்றி மக்கள் பொருள்களை வாங்குவதனையும் இலகுவாக்கும்.

சம்பந்தப்பட்ட தரப்புகள் மக்கள் நலன் கருதி இவற்றைக் கவனத்தில் எடுக்குமோ?

★ ★ ★

**நி**த்திய கண்டம்; பூரண ஆயுசு — என்பது பேச்சு வழக்கு மொழி. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் நிலையும் இத்தகையது என்று சொல்ல முடியவில்லை.

உள்ளூராட்சி சபைகள் இயங்கத் தொடங்கி ஒருவருடமாகிறது. ஆனால் அவை மக்களுக்கு முழு அளவில் சேவை செய்யக்கூடியதாக அவற்றின் நிதிவளமும் ஏனைய கட்டமைப்பு வளங்களும் அவற்றுக்குக் கிடைக்கவில்லை; உருவாக்கவும் முடியவுமில்லை.

இது ஒரு சிறிய விவகாரமாக மாறும் அளவுக்கு, அதனை மூடி மேவி நிற்குமளவுக்கு, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பாதுகாப்புப் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற ஒரு சில வாரங்களிலேயே தெரிவு செய்யப்பட்டவர்கள் பதவிப் பிரமாணம் செய்யக்கூடாது என்று எச்சரிக்கைகள் வந்தன. சில உறுப்பினர்களுக்கு அவரவர் வீடுகளுக்குச் சென்று அறிவிக்கப்பட்டது. வேறு பலருக்குக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதனால் உள்ளூராட்சி சபைகள் உடனடியாகக் கூட முடியாமல் இருந்தன. மாதங்கள் மூன்று கடந்தும் பல சபைகளின் உறுப்பினர்கள் பதவியை ஏற்காது பின்னடித்தனர். வேறுசிலர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

எனினும் ஏப்ரல் மாதமளவில் அனேக சபைகள் ஓரளவு இயங்கத் தொடங்கின. பதவியேற்காத — பதவி விலகிய உறுப்பினர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்பட்டே சில சபைகள் இயங்கத் தொடங்கின.

யாழ். மாநகர சபையின் மேயர் சரோஜினிதேவி யோகேஸ்வரன் கொலை செய்யப்பட்டதை அடுத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் மத்தியில் மீண்டும் பதற்ற நிலை, அச்சநிலை தோன்றியது.

அதன் விளைவாகவும் சில உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்தனர். அவர்களுக்குப் பதிலாக அந்தந்தக் கட்சிகளினால் புதியவர்கள் நியமிக்கப்பட்டனர்;

எனினும் தொடர்ந்தும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு அடிக்கடி துண்டுப் பிரசுரங்களும், கடிதங்களும் உலவ விடப்பட்டன. சங்கிலியன் படை, இன விடுதலை விரும்பிகள் என்ற பெயர்களில் எச்சரிக்கைக் கடிதங்கள் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுக்கு விட்டு விட்டு வந்து கொண்டிருந்தன.

கரவெட்டி பிரதேச சபை உறுப்பினரும் ஊழியருமான எஸ். இராசதுரை ஒகஸ்ட் மாதத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்.

அடுத்து. திருமதி சரோஜினி யோகஸ்வரனின் இடத்துக்கு நியமிக்கப்பட்ட பொன். சிவபாலன் கொலையுண்டார்.

மீண்டும் கடந்த திங்கட்கிழமை இரவு, வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினரும் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவருமான ஜேக்கப் அன்ரனி பீற்றர் கரவெட்டியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இவ்வாறு உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அடுத்தடுத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதன் விளைவாக உறுப்பினர்களாக இருந்த பொது மக்களில் மிகப் பலர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர். அவர்களின் இடங்களுக்கு அந்தந்த அமைப்புக்களின் அங்கத்தவர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் பாதுகாப்புக்கருதி பல உள்ளூராட்சிச்சபைகளின் கூட்டங்கள் அந்தந்த சபைக் கட்டடங்களில் நடைபெறாமல், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட இடங்களிலும் நடைபெறுவது வழக்கமாகி வருகிறது.

இத்தகைய பின்னணியில் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் பாதுகாப்புக் குறித்து கடந்த புதன்கிழமை 51 ஆவது படையணியின் தலைமை அலுவலகத்தில் — அச்செழுவில் — பிரிகேடியர் மாரம்பே தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து இப்போதுள்ளவர்களின் பாதுகாப்புக் குறித்து ஜனாதிபதிக்கு முறையிட்டதைத் தொடர்ந்தே இந்த மாநாடு நடைபெற்றது.

### உள்ளும் புறமும்

குறுமுனி

இதேபோன்று வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளை அடக்கும் 52 ஆவது படையணியின் சார்பில் சாவகச்சேரியிலுள்ள இராணுவ அலுவலகத்திலும் இம்மாதம் ஐந்தாம் திகதி உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பாதுகாப்புக் குறித்து ஆராயப்பட்டது.

இந்த மாநாடுகளில் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவற்றில் —

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் வீடுகளிலும், சபை அலுவலங்களிலும் பொலீஸ் பாதுகாப்பு வழங்குவது குறித்து ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாகவும் —

உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அளிக்கும் வகையில் ''பிஸ்டல்'' வழங்குவது குறித்து ஆராயப்பட்டதாகவும் — நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

எனினும் இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளிடமே உண்டு எனவும் அறியவந்தது.

உள்ளூராட்சிச் சபைகளை இயங்காதிருக்கச் செய்யும் முயற்சிக்குச் சவால் விடும் முறையில் அரசு அவற்றை இயக்கவே பாடுபடும் என்று பாதுகாப்புடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

★ ★ ★

**செ**ம்மணிப் புதைகுழிகள் விவகாரத்தில் அரச இயந்திரம் ஆமை வேகத்தில் நகர்ந்து ஆறு மாதங்களின் பின்னர் தனது ஆரம்ப நடவடிக்கையைக் கடந்த வாரம் தொடங்கியது.

புதைகுழிகள் இருப்பதாகக் கருதப்படும் பிரதேசத்தை அகழ்ந்து பார்ப்பதற்கு உத்தரவிடுமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பொலீஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மனுச்செய்த நிகழ்வோடு செம்மணி விவகாரத்தில் அரசு மெதுவாகக் காலடி வைத்திருக்கிறது.

இது விடயத்தில் குடாநாட்டில் மழை தொடங்குவதற்கு முன்னர் அரசு நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும் என்றே பல தரப்பினாலும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இங்கு பெருமழை பெய்து செம்மணிப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்கும் வரைக்கும் பார்த்திருந்து இப்போது நீதிமன்ற மனுத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது மக்கள் மத்தியில் பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

செம்மணியில் தமிழர்களின் புதைகுழிகள் இருப்பதாகத் தகவல் வெளியிடப்பட்டதற்கும் இப்போது நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருப்பதற்கும் இடையில் சடலங்களின் எச்சங்கள் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள், வதந்திகளுக்கு குறைவில்லை.

புதைகுழிகள் உள்ளதாகக் கருதப்படும் இடத்தைத் தோண்டும்போது அங்கு பிரசன்னமாயிருந்து, அதுபற்றிய ஆய்வுகளைச் செய்து, நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கூடிய தேர்ந்த மண்ணியல் நிபுணர் ஒருவரின் பெயரைச் சிபார்சு செய்தால் மட்டுமே புதைகுழிகளைத் தோண்ட அனுமதிக்க முடியும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பொலிஸார், மண்ணியல் நிபுணர் ஒருவரின் பெயரைச் சமர்ப்பிப்பர் எனத் தெரிய வந்துள்ளது. அனேகமாக கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒருவரின் பெயர் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தப்படும் என முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதே வேளை, புதைகுழி தோண்டும் வேலைகளை அவதானிக்க றுகுணுப் பல்கலைக்கழக சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் நிதியல்லகே சந்திரசிறியுடன், ஐக்கிய நாடுகள் சபையின் மண்ணியல் நிபுணர் வில்லியம் ஹெக்லர் அடுத்த மாதம் வருவார் எனவும் அறிய வந்தது.

புதைகுழிகளைத் தோண்டுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கிடைக்கவும் ஐ. நா. நிபுணர் இங்கு வந்து சேரவும் சரியாக இருக்கும் என்றும் —

தண்ணீர் வற்றியதும் புதைகுழி தோண்டும் வேலைகளைப் பெப்ரவரியில் ஆரம்பிக்க வசதியாக இருக்கும் என்றும் — பொலீஸ் தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

எப்படியோ புதை குழிகளை தோண்டி முடிவு தெரிவதற்குப் பல மாதங்களாகும்.

காணாமல் போனதாகக் கூறப்படும் இளைஞர்களின் பெற்றோரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே புதைகுழிகளைத் தோண்டும் வேலைகள் ஆரம்பமாகும் எனவும் அறியவந்தது.

எப்படியோ, புதைகுழிகளைத் தோண்டுவதில் ஒளிப்பு, மறைப்பு இல்லாமல் அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். இது விடயத்தில் குடாநாட்டு மக்கள் மனங்களில் நிறையச் சந்தேகங்கள் உண்டு.

புதைகுழிகள் விவகாரத்தில் கண்துடைப்பு நடத்த அரசு முனையக்கூடாது. அப்போதுதான் அது குறித்து இப்பிரதேச மக்களுக்கு மதிப்பு உண்டாகும். நடவடிக்கைகளை நீடித்து காலத்தை இழுத்தடிக்காமல் விரைந்து செயற்படுவது மிக மிக அவசரமும், அவசியமும் ஆகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 85



சொற்சிலம்பம் இல. 85
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

........................ இங்கே வெட்டுக ........................

முடிவு திகதி: 23 — 01 — 1999

**இடமிருந்து வலம்**

1. நினைவற்றால். 7. பிரிட்டனின் தலைநகரம். 8. சிறுகலயம். 9. பழுத்தல். 11. இணக்கத்தைக் குறிக்கும் சொல். 12. இறக்க. 13. இரை மீட்க ஆடு போடுவது. 14. சில்லு. 16. மா, தென்னைத் தோட்டம். 18. குற்றி. 19. குள்ளமதி. 21. சடுதியாக என்பதைக் குறிக்கும். 22. விரைவாக

**மேலிருந்து கீழ்**

1. உலகம். 2. இசைப்பாட்டு. 3. ஓர் இராசி. 4. சுரம். 5. மேடு. 6. அஞ்சல் நிலையம். 10. மண்டையிடி. 11. விரும்பு. 12. ஓட்டி. 13. கதியற்ற நிலைமை. 15. வெட்டு. 17. பொன்னைத் தூய்மை செய்வது இங்கே. 20. இத்தாலியின் தலைநகர்.

சொற்சிலம்பம் — 83 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அசுவத்தாமா. 7. கழல். 8. சரிதல். 10. வல்லவன். 12. ரகு. 13. சடுதி. 15. அசுத்தம். 17. பாலை. 18. தம்பதி. 20. தகவல். 22. வம்பு. 24. கிள்ளை. 25. அம்புலி.

**மேலிருந்து கீழ்**

1. அகவல். 2. சுழல். 3. வல்லரசு. 4. தாசன். 5. மாரி. 6. இல். 9. தண்டு. 11. வகுத்தல். 13. சம்பவம். 14. திரி. 15. அலைகள். 16. தம். 17. பாதகி. 19. திம்பு. 21. வளை. 23. புலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற் பரிசு:** பி. நந்தினி,
114, ராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

★ **இரண்டாம் பரிசு:** இரவீந்திரராணி சிவநாதன்.
முதலாம் வட்டாரம்,
வேலணை.

★ **மூன்றாம் பரிசு:** சு. ஜெயபாலன்,
தனிப்பனை,
செம்பியன்பற்று.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 84 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# வழி பிறக்குமா?

பனி போர்த்த அந்த வைகறைப்போதினில் முற்றத்தில் நின்ற பூவரச மரத்துடன் முதுகைச் சார்த்தி எழுவான் திசையைப் பார்த்து நின்றிருந்தாள் திலகம்.

உறைய வைக்கும் இந்தக் கொடுங்குளிர் வேளையில் இவள் திலகம் யாரை எதிர்பார்த்து, எதற்காக இப்படித் தவமியற்றுகின்றாள்?

பித்துப் பிடித்த சித்தன் போக்கு சிவன் போக்கோ? அல்லது அறநனைந்த பின் குளிரென்ன, கூதலென்ன என்ற நினைப்போ?

விடியப்போகின்றது. பறவைகளின் கூட்டுக்கரைசல் அன்றைய விடிதலை அவசரமாகப் பறைசாற்றுகிறது.

விடிந்தால் தைப்பிறப்பு; தைப்பொங்கல். தமிழ்மக்கள் கொண்டாடும் தலையாய பண்டிகைத் திருநாள்.

''தைபிறந்தால் வழி பிறக்குமோ?''

மூத்தகுடியில் வந்தோர் முன்னெப்போதோ சொன்னது; இன்றும் சொல்லப் படுகின்றது.

எது எதெற்கென்றில்லாமல் எதற்கும் பொதுவாகச் சொல்லி வைத்த பழமொழி.

மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்.

மூத்தோர் சொன்னதெல்லாம் — சொல்வதெல்லாம்— வார்த்தை அமிர்தமா?

காலமாற்றத்தின் நீரோட்டத்தில் எத்தனையோ பொன்மொழிகளும் பழமொழிகளும் கௌவைக்குதவாமலும் போய்விட்டனவே?

'தைபிறந்தால் வழிபிறக்கும்?'

மொட்டாக — பூவாக — பிஞ்சாக — காயாக — பழமாக—எத்தனையெத்தனையோ மனித ஜீவன்களை அவலமாய் — அகாலமாய் — கொன்றொழித்து, தின்று தீர்க்கும் கொடிய யுத்தம் தொடங்கிய பின்பு, எத்தனையோ தைப்பிறப்புகள் வந்துபோய் விட்டனவே?

இந்தத் தைப்பிறப்புடனாவது இந்த மக்கள் படும் அவலங்களுக்கு ஒரு வழி பிறக்குமா?

ஆனால், இந்தத் தைப் பிறப்பென்ன? இனி எத்தனை தைப்பிறப்புகள் பிறந்தாலும் — வந்தாலும் — தன் வாழ்வில் எந்த வழியும் — விடிவும் — பிறந்து விடப் போவதில்லை என்ற இறுதி முடிவிற்கு வந்தவளாய் — தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய எவனையோ — எதையோ—எதிர்பார்த்து அவனிடத்து தன் ஈறு முடிவில்லாத துயரக் கதைக்கு ''முடிவென்ன?'' என்று கேட்டு— முடிவில்லையென்றால் ''என்னையும் முடித்துவிடு'' என்ற நெஞ்சக் குமுறலுடன் நின்றிருந்தாள் திலகம்.

அன்றைய புதிய தைப் பிறப்பில் புதிதாக உதயமாகி வரப்போகும் பாலசூரியனைப் பார்த்து 'அடப்பாதகனே! அன்றைய இந்நாளில் முற்றத்தில் பொங்கிப் படைத்து உன்னை ஆராதித்து நன்றிக்கடன் செய்து நின்றவனை—என் கணவனை கொன்றொழிப்பதைப் பார்த்திருந்தாயே! ஓ நன்றி அறிதல் இல்லாதவனே? என் வாழ்வின் அஸ்தமனத்தைஇத்தனை சுறுக்கில் தந்துவிட்டாயே. இது உன் இளம் பருவத்து நியதிக்கு உகந்ததா? உன்னைத்தான் பார்த்துக் கேட்க நிற்கின்றேன். ஏன் ஒளிந்து கிடக்கின்றாய்?' திலகம் தனக்குள் கதைத்து பொருமிக் கொள்கிறாள்.

**தைப்பொங்கல் சிறுகதை**

நிலம் வெளுக்கத் துவங்கி விட்டது.

''என்னதிலகம்இண்டைக்கு தைப்பொங்கலல்லோ ......நீ பொங்கவில்லையோ?''

இருள் திரை முற்றும் அகலாத அந்த அதிகாலைப் போதினில் குளித்து முழுகிய கோலம் காட்ட கூந்தலைத் தளையவிட்டு, பூவோடும் பொட்டோடும் மெல்ல வந்த புஷ்பம், திலகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

அயலவளான புஷ்பத்தின் அவ்வேளைய பிரசன்னத்தையும் இக்கேள்வியையும் திலகம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

''ம்......''

திலகம் தனது நாசித் துவாரம் விரிய உள்ளிருந்து வெளியேற்றிய துயரப் பெருமூச்சு எதிரே நின்ற புஷ்பத்தின் உடலைத் தீய்த்தது.

''பொங்கிறவர் போனதுக்குப் பிறகு எனக்கென்ன பொங்கலும் புதுநாளும் புஷ்பம்? எல்லாம் போக்காளனோடை போயிட்டுது. புருஷன் உழைப்புமில்லை; வருஷப் பிறப்புமில்லை எண்டாகிவிட்ட எனக்கு நல்ல நாளென்ன? பெருநாளென்ன?''

புஷ்பம் தனது நாக்கைக் கடித்துக்கொண்டாள். அன்றைய பொங்கல் பண்டிகை தந்த உற்சாக நிலையில் — திலகத்தின் வாழ்வில் — தலையில் விழுந்த பேரிடியின் சோக சம்பவத்தை— ஓரிரு வருடங்களுக்குள் மறந்தவளாய் கேட்டிருக்கக் கூடாத அந்தக் கேள்வியையிட்டு மனம் நொந்தவளாய்—

''என்னவோ நினைப்பிலே உண்மையாக மறந்துபோய்க் கேட்டிட்டன் திலகம், என்னை மன்னிச்சுக் கொள். வாறன்''

புஷ்பம் வந்தபோதும் திலகத்துடன் கதைத்தபோதும் இருந்த உற்சாக நிலைபோய் இப்போது மனம் குன்றியவளாய் நிலம் பார்த்து, தளர் தடையுடன் திரும்பினாள்.

ஓ! மறதியே! நீ மகத்தான ஒருவரப்பிரசாதம்தான். உன் அறணைப் பிறப்பில்லையெனில் வாழையடி வாழை

(XV பக்கம் பார்க்க)

மூத்த சிறுகதை எழுத்தாளர் கே. வி. நடராஜனின் சிறுகதை இங்குஇடம்பெறுகிறது. ''யாழ்ப்பாணக் கதைகள்'' தொகுதியின் ஆசிரியராகிய இவர் சமகாலப் பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக அணுகுபவர்.

# ஒல்லித் தேங்காய்

அந்தக் கிராமத்திலே பொன்னு என்ற பெயருடைய ஒரு பெரியவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர், பிறருக்கு எப்பொழுதும் உதவிசெய்ய வேண்டும் என்று நினைப்பவர். ஊர்மக்கள் அவரை ''உபகாரி பொன்னு'' என்றும் அழைத்தனர்.

அவர் பிடியரிசித் தருமத்தைக் கிராமத்திலே தொடக்கினார். ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று பிடியரிசி வாங்கினார். சேர்த்த பிடியரிசியிலே கஞ்சி காய்ச்சி ஒவ்வொரு பூரணை நாளிலும் ஏழைகளுக்குத் தானம் வழங்கினார். தான் ஏழையாக இருந்தாலும் ஏதோ ஒரு பெரிய தர்மம் செய்கின்றோம் என்ற மனநிறைவு அவரிடத்துக் காணப்பட்டது.



அந்தக் கிராமத்திலே சின்னவர் என்ற ஒரு கஞ்சப் பிரபு இருந்தார். ஒரு சிறிய உதவிகூடப் பிறருக்குச் செய்ய மாட்டார். அவரிடம் பொன்னுக்கிழவர் பிடியரிசி கேட்கச் சென்றார்.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

''பிடியரிசியிலும் பார்க்க விலைகூடிய பொருள் நான் தாறேன். கஞ்சியை வடிவாகக் காய்ச்சிக்குடும்'' என்று சின்னவர் சொன்னார். கஞ்சப்பிரபு சின்னவரின் மனதில் இப்படியொரு நல்ல எண்ணம் தோன்றியது பொன்னுக் கிழவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. துண்டை விரித்துச் சின்னவர் வீட்டுத்திண்ணையிலே உட்கார்ந்தார். நேரம்சென்று கொண்டிருந்தது. வீட்டினுள்ளே போன சின்னவர் திரும்பி வரவில்லை.

பல மணிநேரம் கழித்துச் சின்னவர் வீட்டினுள்ளே இருந்து வெளியே வந்தார். ''அப்பாடா! இப்பத்தான் சாப்பிட்டு முடிச்சன்'' என்று ஓர் ஏப்பம் விட்டார். பொன்னுக் கிழவர் பணிவுடன் ''தேங்காய் எங்கே?'' என்று கேட்டார்.

சின்னவர் தனது வீட்டின் முன்னுள்ள ஒரு தென்னை மரத்தைக் காட்டினார். ''இந்தத் தென்னை ஒல்லிக்காய் தான் காய்ச்சுக்கொண்டிருக்கு. எப்ப இது நல்ல தேங்காய் காய்க்கிறதோ அப்ப உமக்கு நான் நல்ல தேங்காய் தருவன்'' — என்றார். பொன்னுக்கிழவர் பல ஆண்டுகளாகப் பார்த்தார். அந்த மரத்தில் ஒல்லித்தேங்காயே காய்த்துக்கொண்டிருந்தது.

தொகுப்பு: கலாநிதி சபா. ஜெயராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அ. அட்டைகளில் குளறுபடி செய்து

# குடாநாட்டுக்குள் புலிகள் நடமாட்டம்?

**வலி** கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் புலிகளின் ஊடுருவல், நடமாட்டங்கள், நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

புலிகளின் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படும் தென்மராட்சியின் சில இடங்களில் படையினர் அடிக்கடி சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தி உள்ளனர்.

'படை முகாம்களுக்கு அருகே வசிக்க வேண்டாம்'; 'படையினருடன் தொடர்புகளை வைத்திருப்பதைத் தவிருங்கள்' என்று பொதுமக்களை எச்சரிக்கும் சுவரொட்டிகள் மட்டுவில், சரசாலை, வேம்பிராய் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்ததாகப் பேச்சடிபட்டதைத் தொடர்ந்தே தேடுதல்கள் இடம்பெற்றன.

மட்டுவில் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து 8 கைக்குண்டுகள் ரீ — 56 ரகத் துப்பாக்கி என்பன மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. அந்த இரு சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

புத்தூர் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கிரனேட் வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டதாகவும் மற்றொருவர் தப்பிச் சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை மோப்பம் பிடித்து அறிவதில் படையினர் தீவிரமாக உள்ளனர். இத்தகைய திடீர் தாக்குதல்கள் பெரும்பாலும் அடிக்கடி இடம்பெறுகின்றன.

குடாநாட்டில் விடுதலைப் புலிகள் தாங்கள் பாதுகாப்பான நடமாட்டத்துக்கு வசதியாக தேசிய அடையாள அட்டைகளையும், இராணுவ அடையாள அட்டைகளையும் பயன்படுத்தி வருவதாக தெரிய வந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசிய அடையாள அட்டைகளில் படங்களை மாற்றி, குளறுபடிகள் செய்து, அவற்றைக் காட்டி படையினரையும், பொலீஸாரையும் ஏமாற்றி விட்டு தடைமுகாம்களூடாகச் சுதந்திரமாக — சாதாரண பிரஜைகள் போன்று — புலிகள் நடமாடுவது தெரிய வந்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் வலிகிழக்குப் பகுதியில் புலிகளின் சந்தேகத்துக்குரிய மறைவிடம் ஒன்றை முற்றுகையிட்ட சமயம் அங்கிருந்து சுமார் 30 க்கும் மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும் எண்ணிக்கையான அடையாள அட்டைகள் எப்படிப் புலிகளின் கைகளில் கிடைத்தன என்பது படைத்தரப்புக்கு வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

புலிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள் தாராளமாகக் கிடைப்பது குறித்தும் படைஉயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பணத்துக்காக அல்லது அனுதாபத்தின் பேரில் பொதுமக்களே விடுதலைப் புலிகளுக்குத் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதாகப் படைத்தரப்பு சந்தேகிக்கிறது. அடையாள அட்டையைத் தொலைக்கும் ஒருவர் அது தொடர்பான பொலீஸ் முறைப்பாட்டுடன் சில இலகுவான நடைமுறைகள் மூலம் விண்ணப்பித்துப் புதிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வசதி உண்டு.

இவ்வாறு அடையாள அட்டைகளைத் தொலைப்பதாக முறைப்பாடு செய்வோர் மீது படையினருக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தொலைந்து போனதாகக் கூறப்படும் அடையாள அட்டைகள் புலிகளின் கைகளுக்குப் போய்ச்சேர்வதாக படையினர் நம்புகின்றனர். எனவே இது விடயத்தில் படையினர் கூடிய கவனம் செலுத்தத் தொடங்கி உள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு அடையாள அட்டைகளைப் பொதுமக்களே விநியோகிப்பதாக படைத்தரப்பு சந்தேகிக்கும் அதேவேளை கடந்த காலத்தில் பொதுமக்களிடமிருந்து அடையாள அட்டைகள் பறிக்கப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தென்மராட்சிப் பகுதியில் பல இடங்களில் வீதிகளில் சென்றோரை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் அவர்களின் தேசிய அடையாள அட்டைகளைப் பறித்துக் கொண்டு தலைமறைவாகியதாக பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. சீருடை அணிந்த சிலரும் இச் செயலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## பொதுமக்கள் வழங்குவதாக படைத்தரப்பு சந்தேகம்

இந்த அடையாள அட்டைகளைப் பறித்தது யார்? அவர்கள் என்ன நோக்கத்துக்காக அவற்றை அபகரித்தனர் என்ற பல ஐயங்கள் பொதுமக்களிடையே அச்சமயம் நிலவின.

அடையாள அட்டைகளைத் தொலைப்போர் இனிமேல் அது தொடர்பான முறைப்பாட்டைச் செய்வதற்கும், புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதிலும் சில இறுக்கமான நடைமுறைகளை அமுலுக்குக் கொண்டுவர படைத்தரப்பு முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பிரதேச பொறுப்பதிகாரிகளுக்கும், கிராம அலுவலர்களுக்கும் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நல்லூர் இராணுவ முகாமுக்கு உட்பட்ட நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் படை முகாமுக்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என்று இப் பகுதி கிராம அலுவலர்கள் மூலம் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை இப்பிரதேசத்தில் ஏற்கனவே குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட படைப் பிரிவின் வதிவிடச் சான்றிதழ்களும் மீளப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ முகாமில் முறைப்படி பதிவு செய்யாத பலர் இப் பிரதேசத்தில் வசிப்பது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே மீண்டும் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

குடாநாட்டில் அதிகரித்து வரும் திருட்டுக்கள், கொலைகள் மற்றும் பொதுமக்களைப் பாதிக்கும் 'சமூக விரோதச் செயல்களைக்' கட்டுப்படுத்துவதிலும் படைத் தரப்புக் கூடிய கவனம் செலுத்த உள்ளதாக அறிய வருகிறது.

நாளாந்தம் இடம்பெறும் சமூக விரோதச் செயல்கள் பொதுமக்களிடையே பீதியையும், பாதுகாப்பின்மை பற்றிய உணர்வையும் ஏற்படுத்தி வருவதை அடுத்தே படை உயர் அதிகாரிகள் இது விடயத்தை கவனத்துக்கு எடுத்துள்ளனர்.

பொதுமக்களைப் பாதிக்கும் இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்துமாறும் அவ்விடயங்களில் தலையிட்டு செயற்படவும் பிரதேச படைப் பொறுப்பதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறு திருட்டுக்கள், கொள்ளைகள், ஆள் கடத்தல், வழிப்பறி, வாகனக் கடத்தல், சட்டவிரோத மதுபானத் தயாரிப்பு, சாராய விற்பனை, ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் மர்மக் கொலைகள் என முன் எப்போதும் இல்லாதவாறு குற்றச் செயல்கள் குடாநாட்டில் அதிகரித்துள்ளன. தற்போது இயங்கும் பொலீஸ் நிலையங்களில் உள்ள வசதிகள், ஆளணிப் பற்றாக்குறை, களத்தில் பணியாற்றுவதில் உள்ள பாதுகாப்புச் சிக்கல்கள் காரணமாகப் பொலீஸாரால் இவற்றை முற்றாகத் தடுக்க முடியவில்லை. எனவே இது விடயங்களில் படையினரின் பங்களிப்பும் கோரப்பட்டுள்ளது.

★ ★ ★

### தேர்தல் களமும் போர்க் களமும்

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வடமேல் மாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெற உள்ளது. அரசின் எதிர்காலத் தேர்தல் வெற்றிகளின் பரீட்சைக் களமாக வடமேல் மாகாண சபை மாற்றப்பட்டிருக்கிறது. சுலபமாக வெற்றி பெறக்கூடிய பிரதேசம் என ஆரம்பத்தில் வடமேல் மாகாணத்தை அரசு கருதியது. ஆனால் தேர்தல் பிரசார காலத்தில் இடம்பெறும் சம்பவங்களும் அவற்றின் பின்னணியில் உருவாகிவரும் களநிலைவரமும் ஆளுங்கட்சியினருக்கு சற்று கலக்கத்தையே ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது.

தேர்தல் காலத்தில் வன்செயல்களை ஏற்படுத்த எதிர்க்கட்சி திட்டமிட்டு வருவதாக 'வழமையான பாணியில்' ஆளுங்கட்சி குற்றஞ்சுமத்தி உள்ளது. வாக்களிப்பு முடிந்த கையோடு வன்செயல்களைத் தடுக்க ஊரடங்குச் சட்டம் உடன் அமுலுக்கு வரும் என்பது முன் கூட்டியே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாதாள உலகக் கும்பல்களின் உதவியுடன் பெரும் வன்முறைகளுக்கு திட்டமிடப்படுவதாக பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தேர்தலும் வன்செயல்களும் பிரிக்கமுடியாதவை என்பது இலங்கையிலும் அண்மைக்கால வரலாறாகி வருகிறது.

இதற்கிடையில் தேர்தலைப் புலிகள் குழப்பலாம் என்றவாறான 'வழமையான எச்சரிக்கைகளையும்' அரசு வெளியிடத் தவறவில்லை.

வடமேல் மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். வடக்கு — கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் இக்காலப் பகுதியில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்படுவர் என அவ்வப்போது செய்திகளும் வெளியாகி வருகின்றன.

அரசுக்கு ஆதரவான வாக்குகளுக்கு சேதத்தை ஏற்படுத்துவதற்காக புலிகள்-தேர்தல்காலத்தில்—எங்காவது பெரும் தாக்குதலை நடத்திப் படையினருக்குப் பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தலாம் என அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் தெற்கில் இடம்பெறும் தேர்தல்களைப் பொறுத்தவரை அவற்றைக் குழப்ப முயற்சித்து அதன்மூலம் அதற்கு முக்கியத்துவம் அளிக்கப் புலிகள் விரும்பமாட்டார்கள் என்று விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஆனால் தங்களின் அடுத்த தாக்குதலுக்கான தக்க தருணத்தை இக்காலப் பகுதிக்குள் புலிகள் தெரிவு செய்யலாம் என இராணுவ அவதானிகள் நம்புகின்றனர்.

வன்னியில் பலத்த மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட தளநிலைவரம் படையினரையும், புலிகளையும் பாதித்துள்ளது. அரண்கள், பதுங்குகுழிகள் வெள்ளக் காடாகின. புதிய நிலைகளை அமைக்கும் பணிகள் துரித கெதியில் நடைபெறுகின்றன. அதன் பின்னரே படையினரின் அடுத்த திட்டங்கள் வன்னியில் அரங்கேறலாம் என எதிர்பார்க்கலாம். புலிகளைப் பொறுத்தவரை வெள்ளப் பாதிப்பு அவர்களது அதிரடிகளுக்குத் தடை அல்ல; ஆனால் புலிகள் அடுத்து எங்கு தாக்குவார்கள் என்பது எப்போதும் போல ஊகிக்க முடியாததாகவே உள்ளது.

## தேர்தல் களமும்.... போர்க் களமும்...

குடாநாட்டைப் பொறுத்தவரை புலிகளின் பெரும் தாக்குதல் ஒன்று நடப்பதற்கு வாய்ப்பான பிரதேசமாக தென்மராட்சியையே இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.

தென்மராட்சியை விட்டு வெளியேறுமாறு பொதுமக்களைக் கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதாகப் பரவிய தகவலை அடுத்து கடந்த ஆண்டு நவம்பரில் அப்பகுதி மக்களிடையே பீதி நிலவியது தெரிந்ததே. தென்மராட்சியின் சில இடங்ளில் கடந்த சில நாள்களிலும் புலிகளின் சுவரொட்டிகள் காணப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

வவுனியா — மன்னார் வீதியில் படையினரின் வாகனத் தொடரணிகள் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்த சாத்தியம் இருப்பதாக இராணுவப் புலனாய்வுத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

வன்னிப் படையினருக்கான விநி

(XV ஆம் பக்கம் பார்க்க)

## 'மார்ட்டின் - 24'

வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருந்த சமயத்தில் கடந்த வாரம் கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியான தகவல் இது.

இந்த மாகாணசபைத் தேர்தலில் ஒரு கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் பெயர் மார்ட்டின் என்பதாகும். அவரது கட்சி சமர்ப்பித்த பட்டியலின்படி அவருக்கு வழங்கப்பட்ட இலக்கம் 24. மார்ட்டினுக்கு வாக்களிக்குமாறு அவரது ஆதரவாளர்களைக் கோருவதற்காக அச்சிடப்பட்ட, கவர்ச்சியான சுவரொட்டியில் 'மார்ட்டின் — 24' எனக் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. வடமேல் மாகாணத்தில் உள்ள முக்கிய நகர வீதிகளிலும், வீதியோர சுவர்களிலும் இந்த சுவரொட்டிகள் ஏராளமாக ஒட்டப்பட்டிருந்தன.

ஒரு நாள் இரவு அந்த சுவரொட்டியில் விஷமிகள் எவரோ சிறு மாற்றத்தைச் செய்திருந்தனர். அதன்பின் அந்த சுவரொட்டியில் பின்வருமாறு காணப்பட்டது.

'மார்ட்டின் — 24 மணிநேரமும் நித்திரை'

தற்போது இந்த சுவரொட்டி ஒட்டப்பட்ட மதில்களுக்கு வெள்ளை அடிக்கும் நிலை மார்ட்டினின் ஆதரவாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மறுபக்கம் ▶ வார விமர்சனம் ◀ ஏகக்பாலுவ
நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சோடு நெஞ்சம்

அன்பு அடக்கம் பொறுமை
அமைதி யார்க்கும் உடைமை
வன்பு கொடுமை கோபம்
வாழ்வு நெறியின் மடமை.

கல்வி கடமை ஒழுங்கு
காதல் அன்பு பணிவு
செல்ல அன்னை சேவை
சிறந்த வாழ்வின் போக்கு.

ஆசை பாசம் மோசம்
அண்டி வந்தால் நாசம்
ஓசை ஒளியின் வடிவம்
ஒருவன் தந்த படிமம்.

கருணை கண்ணியம் கவிதை
காதல் வாழ்வின் ஊட்டம்
சிறுமை கயமை சீற்றம்
சிறந்த வாழ்வின் மாற்றம்

பெற்ற தாயைப் பேணு
பெரியோர் வார்த்தை போற்று
கற்ற கல்வி எல்லாம்
கடுகு என்றே எண்ணு

— ம. கார்த்திக் —

## பொன் நாளைத் தேடி...

கால்களில் கொலுசம் கொஞ்ச
கைவளை கீதம் பாட
வேல்விழி என்னைச் சுட்டு
ஆயிரம் அர்த்தங் கூற
பால்நிலா ஒளியைப் பூசி
பளிங்குசெய் சிற்பம் ஒப்ப
மால்அவன் மாதின் அழகில்
வந்தனள் எந்தன் பெண்ணே!

பூவினை விஞ்சும் தோற்றம்;
புன்னகை சிந்தும் நேரம்
காவிலே புட்கள் எல்லாம்
காலையில் கத்தும் சத்தம்,
கூவிடும் குயிலே குரலாய்
ஆடிடும் மயிலின் நடையாள்
காவியம் சொல்லா அழகில்
வந்தனள் எந்தன் முன்னே!

தேவர்தம் தேசம் சார்ந்த
கன்னியர் வெட்கும் உருவாள்
பாவலர் யாரும் இங்கே
பாடிடா அழகை உடையாள்
பாவமே பூமி என்று
மெல்லென நடக்கும் திருவாள்
தேவதை போலே என்முன்
வந்தனள் எந்தன் கண்ணே!

பார்தனில் பெண்கள் எல்லாம்
பொருமிடும் அழகை உடையாள்
கார்நிறக் கூந்தல் அவளின்
இடையினில் ஆடும் நடையாள்
கூர்விழி கொண்டு என்னை
நித்தமும் குத்தி நிற்கும்
சீர்மிகு திறத்தாள் வந்து
என்றுதான் என்னைச் சேர்வாள்?

— இளங்குமரன் —

## நலமே வாழ்ந்திடுவீர்!

இடம்விட்டு இடம்பெயர்ந்து பின்
இருப்பிடம் நாடிவந்து
தடம்பதிக்க முனைந்திடும்
தமிழர்காள் கேண்மின்

வல்லபோர் அரக்கன் வைத்த
வஞ்சக மிதிவெடியும்
கொல்லவெனக் காத்திருக்கும்
கொடிய குண்டுகளும்

மறைந்திருந்து மண்ணிலுமை
மரணிக்க வைத்திடும்
கறைபட்டுக் கால்களையும்
கழற்றிட வைத்திடும்

நாளையிவ் வுலகையாளும்
நம்மிளஞ் சிறார் முதல்
வேளைவந்து காத்திருக்கும்
விருத்தர்கள் பலபேரும்

ஊனமுற்று எம்மண்ணில்
உறைகின்ற நிலைமாற
ஆனவர்கள் கூறுகின்ற
அறிவுரையைச் செவிமடுப்பீர்

கண்டகண்ட பொருள்களைக்
கையாலும் தொட்டிடாதீர்
மண்ணணைப் பகுதிதனில் நீர்
மறந்தும் நடைபயிலாதீர்

எச்சரிக்கைப் பலகைகளை
எண்ணத்தில் கொண்டிடுவீர்
நச்சிய இடமெலாம் நீர்
நடப்பதை நிறுத்திடுவீர்

என்றென்றும் கவனமாய்
எங்கும் நீர் செல்வதனால்
நன்றென்றும் கண்டிடுவீர்
நலமே வாழ்ந்திடுவீர்!

— செ. சுதாகரன் —

## நாம் பிறந்த நாடு நமது

சொந்த மண்ணை விட்டகன்ற போதும் — அதன்
சொப்பனங்கள் எம்நினைவில் வாழும்
எந்தநிலை வந்தணைந்த போதும் — தமிழ்
எம்மனதில் நின்று துணிவூட்டும்!

எங்களின் முன்னோர் திரிந்த நாடு — அவர்
இனிமையின் வேர் விட்டுயர்ந்த வீடு
மங்களத்தின் சீர்பிசகாப் பாட்டு — அதன்
மாண்புகளே எம் 'இருப்பின்' ஊற்று!

பச்சைவயல் எங்களின் பிச்சை சாய்க்க — சிந்து
பாடும் கடல் மீனை, முத்தை நீட்ட...
முச்சையைத் திருத்தித் தமிழ் காக்க — எங்கள்
முன்னோராண்டார் விண்வியந்து பார்க்க!

பாயும் கங்கை இல்லையென்ற சாபம் — ஞானம்
பாய்ச்சும் கோவில் கங்கைகளால் தீரும்!
நாதசுரம், தவில், கவிதை கேட்டாம் — முன்பு
இங்கிருந்த மலை கரைந்து போச்சாம்!

பால், உணவு உண்டெழுந்த போதும் — பின்
பல்முளைத்துக் காதலித்த போதும்
நோயில் நொந்து வாயரற்றும் போதும் — தமிழ்
நூதனமே...... எம்முயிர்க்கு 'நாதம்'!

தாய் பிறந்த மண்ணில் காலாம் வேரை — ஊன்றி
தாவரம்போல் வாழ்பவனே... கோரை
கூட... வாழும் மண்ணுக் கீயும் தன்னை — என்ன
கொடுப்பாய் கைமாற்றாய்? காக்க மண்ணை!

— அருணன் —

## வெற்றிக்கு... தளராதே!

என்னடா வாழ்க்கை யிதுவென் றலுத்துச்
சொன்னவரே சற்றுக் கேளும் — நீர்
முன்செய்த முயற்சி முடியாமற் போனமைக்கு
என்னகா ரணமென்றா ராயும்.

அத்திவா ரத்தில் அடித்தளத்தி லாங்கோர்
சொத்தி நிலையினைக் காண்பாய் — அதைக்
கொத்திப் பூசிக் குறைகளை நிவர்த்தித்தால்
சத்தியம் வெற்றிதான் கிட்டும் .

விழுந்ததையே எண்ணி விக்கித்து நின்றால்
எழுந்துல காள்வதெப் போது? — துயர்
முழுகியே நின்று முயற்சியை விட்டால்
அழுகிடு முன்னெதிர் காலம்.

வெல்லுத லென்ற விருப்போடு மீண்டும் நீ
செல்லு முனக்குத்தான் வெற்றி — இன்று
கல்லெறிந் திகழ்ந்திடுங் கயவரு முன்முன்
பல்லிழித் தேநிற்பர் நாளை.

தளராத துணிவோடு களமாட வுனக்கு
அளவற்ற வெற்றிகள் சேரும் — நாளை
இளவீர ருமக்கென்றே இவ்வுலக வாழ்வு
வளமா யமையும்; தளராதே.

— கோபி —

## வைகறைச் சேவல்கள்

மின்னல் பூத்தா கிழக்கு வெளுப்பது
மேகம் கிழித்துச் சூரியன் வரட்டுமே
விண்ணை ஆளும் உடுக்கள் தொகுதியும்
வெண்ணிலாவும் விரைந்து மறைந்திடும்
சன்னப் பூக்கள் எம்மை உரசலாம்
சாவும் அழைத்து விருந்து கொடுக்கலாம்
அன்னை பூமியை தட்டி எழுப்புதல்
ஆவி பிரியும் வரையெம் தொழிலடா!

உங்கள் சொற்படி முட்டை இடுவதா
ஓடிச் சென்று கூட்டில் அடைவதா
கங்குல் கண்டதும் கொண்டை சிலிர்க்குது
காலின் நகங்கள் மண்ணைக் கிளறுது
பொங்கும் அலைநீர் புரட்சி தொடங்கினால்
பூட்டி வைக்கக் கடலால் முடியுமா?
எங்கள் சந்ததி கூவித் திரிவது
ஏழை வீட்டு வாசல் விடியவே!

கும்பிட் டுவாழக் கோழிக் கூட்டமா
குன்றில் பறந்த வீரக் கொடியடா!
அம்மா உரித்துத் தூக்கிற் போடினும்
அன்றே அடுப்பில் குழம்பாய் மாறினும்
நம்பும் வைகறை நாளை விடியுமே
நாய்கள் கூவல் கேட்டுக் கொதிக்கலாம்
செம்மண் வீதி குருதி சிவக்கலாம்
சேவல் சாவதால் சூரியன் மறையுமா (?)

கழுதை கத்திப் பொழுது புலருமா?
கஞ்சத் தனங்கள் கருணை பொழியுமா?
புழுக்கள் பெருத்தால் சோலை செழிக்குமா?
பூவும் பிஞ்சும் தொடர்ந்து வீழ்வதால்
எழுந்த இரவே பகலைப் புணருவாய்
என்ற கூவல் செவிடர் காதிலா
வெளுக்க வேண்டும் வேதனை இரவுகள்
வேக வேகமாய் கூவத் தொடங்கிறோம்.

— உதிக்கிழான் —

## ஞாயிறல்ல; அவள் சனி!

ஞாயிறு உன் மேனியென்றேன்;
நான் மகிழ்ந்த திங்களவள்
செவ்வாயில் முத்தமிட்டேன்.
வியாழன், வெள்ளியெழ முன்
வீட்டை விட்டு ஓடினோம்.
அதன் பின்தான் புரிந்தது
அவள் ஒரு சனி என்று!

— சு. சற்குணதாஸ் —

## புதுயுகம் நோக்கி புறப்படு தோழா!

புதுயுகம் நோக்கிப்
புறப்படு தோழா
மதுயுகம் விட்டு
மறத்திங்கு வாடா!

வடியிலே மூழ்கின்
சருகதாய்ப் போவாய்
குடியது குலைந்து
கருகியே சாவாய்!

சம்பளப் பணத்தில்
கசிப்புநீ குடிக்க
சம்பலுஞ் சோறும்
ருசிக்கிறார் மைந்தர்!

கருகுதே ஈரல்
கடதாசி போல
வருகுதே உனக்கு
சுடுகாட்டு வாசம்!

தெருவிலே உந்தன்
தூஷண முழக்கம்
பெருகுதே எனக்கு
வாசனையாக!

உனக்கொரு வீடு
வடிசாலை என்றால்
தனக்கெனத் தேடும்
சவக்காலை உன்னை!

நிகழ்காலம் உனக்கு
நிழலாக இருக்கும்
எதிர்காலம் உனக்கு
புதிராக அமையும்!

நிஜமான வாழ்க்கை
நீவாழ வேண்டின்
நிஜமாக மதுவை
நீயொதுக்க வேண்டும்!

புதுயுகம் உனக்குப்
புதிராக இருந்தால்
புறப்படு இன்றே
புறக்காலை நோக்கி!

சதுரங்க வாழ்க்கை
உனக்கின்று வேண்டாம்
புறப்படு இன்றே
புதுயுகம் நோக்கி!

— ஏ. ஜெ. ஆர். ஷர்மின் —

## இனித்திடும் நினைவும் கனத்திடும் வாழ்வும்

சந்தனக் காற்றும், நல்ல
மாலையின் வெய்யிற் சூடும்
சிந்துகள் பாடி நாங்கள்
திரிந்ததோர் தெருவின் திருவும்
சிந்திடும் நுரைவந் தாட
சிலிர்த்திடும் கடலும், கரையும்
சந்திரன் பொழியும் நேரம்
நல்லையின் மணலும், இசையும்

எங்குதான் போச்சுதின்று?
நம்தேசமேன் வெந்த தாச்சு?

கண்மணி போலும் எங்கள்
தோழரும் சுற்றத் தாரும்
அம் மணி ஆட்சி தந்த
அழிவதன் உச்சம் ஆன
செம்மணித் துயராய் ஆனார்
திரும்பிடாக் கனவாய் ஆனார்.
நாம்இனி என்ன செய்வோம்?
நடுத்தெரு நாயாய் ஆனோம்.

குனிந்ததால் வந்த கேடு
என்றுதான் ஓடும் கூறு

நங்கையர் யாரும் இங்கு
நடுப்பகல் வேளை கூட
எங்கணும் வெளியே செல்லல்
நடந்திடா நிகழ்வாய் ஆச்சு
எங்குமே கொலையும் கொள்ளை
தினசரி நிகழ்வாய் ஆச்சு
தங்கமாய் எம்மண் முன்போல்
தளிர்த்திடல் வேண்டும், மீண்டும்

செம்பியர் கொடியுந் திங்கு
சிறத்திடல் வேண்டும் என்றும்

— அருண்மொழி —

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வி சனி | | | |
| | இராசிச் சக்கரம் | | ரா |
| சூ வெ கே | | | |
| சந் புத | | | செ |

# இந்த வார இராசி பலன்

## [17 - 01 - 1999 முதல் 22 - 01 - 1999 வரை]

மாற்றம்:

* 17 - 1 - 1999 இல்:- புதன் மகர இராசியில் மாறும்.

* 18 - 1 - 1999 இல்:- செவ்வாய் துலாம்-இராசியில் மாறும்.

* 17 - 1 - 1999 இல்:- பூராடம் 4ம் பாதம் தனுசு-இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியல்வாதிகள் தமதுமக்களுக்காக தீர்க்கமாகச் சிந்தித்து ஒரு முடிவான செயற்பாட்டைச் செய்ய வேண்டிய காலமாகும். ஐ. நா. வின் அழுத்தம், வெளிநாடுகளின் விருப்பம் அரசுக்கு சில சங்கடங்களைக் கொடுக்கலாம். அரசியல்வாதிகள், சமயவாதிகள் இரண்டுபட்டு நிற்பர். சண்டையா? சமாதானமா?—என்ற கேள்வி மக்கள், தொழிலாளர், மாணவர்கள் மத்தியில் எழ இடமுண்டு. இந்திய அரசியலில் அரசு எதிர்க் கட்சிகளுடன் முறுகும் நிலை ஏற்படலாம். எல்லையில் பதற்றங்கள் ஏற்படலாம். தென்திசை அரசியல் வாதிகளின் தேவைகள் அதிகரிக்கும். மேற்கு நாடுகளில் அமெரிக்க ஜனாதிபதிப் பீடத்தில் பதற்றநிலை ஏற்படும். ஜனாதிபதி கிளின்டனுக்கு நல்லதல்ல. மத்திய கிழக்கு நாடுகளில் அரசியலில் கருத்து வேற்றுமைகளும், கிழக்கு நாடுகளில் ஒரு பதற்ற நிலையும் அடிக்கடி ஏற்பட இடம் உண்டு.

**மேடம்:** நல்லவர்கள் எல்லோரும் வல்லவராய் இருப்பதில்லை. வல்லவர்கள் யாவரும் நல்லவர்களாகவும் இருப்பதில்லை. நாலு வார்த்தை சொல்லிச் சிரிப்பதை எதிர்ப்பதால் என்ன பயன்? வாழ்க்கையின் போராட்டச் சூழ்நிலைகளை அடிக்கடி மாற்றும் இராசி உங்கள் இராசியாச்சே. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். நாலுபேர் உங்களை வாழ்த்தும்படி வாழ முயற்சி செய்வீர்கள். கண் நோய், காய்ச்சல், பல்வலி, தலைவலி எனவும் வயிற்றுக் கோளாறாலும் வருந்த இடம் உண்டு. அடிக்கடி கோபிப்பதிலிருந்தும், உணர்ச்சிவசப்படுவதிலிருந்தும் விடுபட முயலவும். எதையாவது செய்து உடனே பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிப்பீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வெள்ளி, புதன்.

**இடபம்:** என்ன ஒரே அசதியாக இருக்கின்றீர்கள்? குறை சொல்பவர்கள் ஏதாவது சொல்லிக்கொண்டு தான் இருப்பார்கள். விதம் விதமான பானமும், பொரியலும் இல்லாவிட்டால் பூகம்பம்தான் போலிருக்கே? கொஞ்சம் பொறுமையாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் ஒரு கவலையில்லாத மனிதர். எதிர்ப்பாளர்கள் பல உதவிகளைச் செய்து தருவார்கள். கலையார்வம் மிக்க நீங்கள் பொருளைப் பார்க்க மாட்டீர்கள் போலிருக்கே! பணம் வரும்தானே எனச்சொல்வீர்கள். நெஞ்சு நோ, ஈரல் வருத்தங்கள், சலவருத்தங்கள், வாய்வுத் தொல்லை என வருந்த இடம் உண்டு. அளவுடன் உண்டு சுகத்துடன் இருக்க உங்களை நீங்களே தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.

**மிதுனம்:** கற்பனையா? கதைவளமா? அல்லது காவியச் சிந்தனையா? அழகு நிரந்தரமில்லை. அன்புதான நிரந்தரம் எனச் சொல்லுகிறார்களே. அது உண்மையா எனக் கேட்பது போலிருக்கிறதே? மயக்கு மொழி, நொட்டைச் சாப்பாடு உங்களுக்குக் கைவந்த கலையாச்சே. நாலுபேர் புகழ்ந்து பேச வேண்டுமாயின் கொஞ்சம் அடக்கமாக, கட்டுப்பாடாக, அமைதியாக இருக்க வேண்டாமா? 'நாங்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கலாம். உங்களைக் காணவில்லையே?' எனத் தொழில் ஸ்தானத்தில் சிலரின் குரல் உங்களுக்குக் கேட்பதில்லையா? புதிய நண்பர் வரவு மகிழ்வைத் தரும். வாய்வு, வாதத் தொல்லை, தலைவலி, சளித் தொல்லை, குடல் வருத்தம், அல்லது கால் உளைவு என அடிக்கடி மருந்து எடுத்து வருவீர்கள்.

## ஜோதிட சஞ்சீவி

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன்.

**கடகம்:** யார் என்ன சொன்னாலும் நமக்கென்ன? எனநினைக்கும் உங்களை ஒருவரும் அறியார். உதவி தேடி வருபவர்களுக்கு உதவிகள் செய்வதற்கும் தயங்கமாட்டீர்கள். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் சூடாகத்தான் இருப்பீர்கள். பப்படம் பொரிவது போன்றிருப்பீர்கள். ஆயினும் நாலுபேர் நல்லதாகத்தான் சொல்லுவார்கள். எதையும் மலைத்துத்தான் பேசுவீர்கள். நிம்மதி தேடி எங்கே போகிறீர்கள் எனப் பலரையும் கேட்பீர்கள். நெஞ்சுப் படபடப்பு, தலைச்சுற்றல், வாய்வுத் தொல்லை, சல, மல வருத்தங்கள் என்பன வருத்தலாம். காசை அளவறிந்து செலவு செய்யுங்கள். அல்லது மன அமைதி இருக்காது.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன்.

**சிங்கம்:** எனக்கு ஒருவரும் புத்தி சொல்லத் தேவையில்லை. நான் சொல்வதைக் கேட்டு நடப்பவர்கள் மாத்திரம் வரட்டும். நான் ஊருக்கு உதவி செய்தால் என் குடும்பத்திற்குப் பலர் உதவி செய்வார்கள் எனச் சிந்திப்பீர்கள். தர்ம ஸ்தாபனங்களில் அதிக காலம் செலவு செய்வீர்கள். தொழில் ஸ்தாபனத்தில் மறைமுகமான புகைச்சல் இருக்கச் செய்யும். எதையும் குறிப்பறிந்து செயற்படுங்கள். உங்களிடம் எல்லோரும் நயம் கருதி வருவார்களே ஒழிய உங்களுக்கு உதவி செய்வார்கள் என எண்ணாதீர்கள். நெஞ்சுவலி, முதுகுவலி, உஷ்ண பீடைகள், நரம்புச் சோர்வு, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

**கன்னி:** பழமையில் புதுமை காண்பீர்கள். உலகம் முழுவதும் பிரச்சினைதானே. அதற்காகச் சும்மா இருக்க முடியுமா? பாடுபட்டுத் தேடிய புகழும், செல்வமும் பாதிவழியில் தேடி அலையும் நிலையைப் போலிருக்கும் பலன்கள் நடக்கும். வியாழ மாற்றத்தால் ஓரளவு விடுதலை ஏற்படும். ஆயினும் மழை ஈரம் இருக்கத்தான் செய்யும். உசவிக்குப் போய் உபத்திரவம் வரும் காலம். கால வெள்ளத்தில் கலங்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் நல்லதை எதிர்பார்க்க முடியாது. நம்ப நடவுங்கள்; நம்பி நடவாதீர்கள்! இடமாற்றங்கள் ஏற்படலாம். நரம்புத்தளர்ச்சி, மார்புச்சளி, முட்டு, கைகால் பிடிப்பு, வாதவாய்வுத் தொல்லை என்பன அடிக்கடி பிரச்சினை தரும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன், வள்ளி.

**துலாம்:** பெரியவர்களை ஏற்றிப் போற்றுவதனால் எவருக்கும் தீமையில்லைத்தானே! அடிக்கடி சலிப்பு வரத்தான்செய்யும். தொழில் ஸ்தானத்தில் அதிக பணத் தட்டுப்பாடுகள் ஏற்படச் செய்யும். புதிய திட்டங்களால் தேவையற்றயோசனைகள், பயப்பாடுகள் அடிக்கடி வரச்செய்யும். ஓய்விலாமல் எதையாவது திட்டமிட்டுக் கொண்டு இருப்பீர்கள். தோல் வருத்தம், வயிற்று வருத்தம், நெஞ்செரிப்பு, உடல் அசதி, சீதோஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். ஓய்வு முக்கியமாகும். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிவீர்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**விருச்சிகம்:** உங்களைஎல்லோரும் மதிப்பார்கள். நீங்களும் புகழ்ச்சியை விரும்ப மாட்டீர்கள் எனச் சொல்ல முடியாது. தொழில் ஸ்தானத்தில் எடுத்த பொறுப்பிற்காகப் போராடியபடி இருப்பீர்கள். இடமாற்றம், பிரயாணங்களால் அவதிகள் ஏற்படச் செய்யும். உங்களைக் காட்டிக் கொள்ளாமல் பல இடங்களுக்கும் ஓடியாடித்திரிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அதிக பிஸியாக இருப்பீர்கள். இருப்பினும் உலகில் எது பெரிது? எது பெரிது? என உங்களையே நீங்கள் அடிக்கடி கேட்கும் காலமாக இருக்கும். பெருமையையும், சிறுமையையும் சமநிலைப்படுத்துவீர்கள். தொழில் ஸ்தானத்தில் கடன் கொடுத்துக் கலங்குவீர்கள். பொருளில் கொஞ்சம் கவனமாக இருங்கள். கிருமித் தாக்கம், வயிற்றுநோ, முதுகுநோ, கால்நோ என்பன கொடுக்கும். ஆலய வாசலில் ஆடி வரும்பொழுது தேடிவரும் உறவுஒன்று உங்களுக்குக் காத்திருக்கும் காலமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

**தனுசு:** கற்பனை அதிகமாகும். அதிக பேச்சு ஆபத்தைக் கொடுக்கலாம். குடும்பத்தினரின் முன்னேற்றத்திற்காக உழைப்பீர்கள் ஆனால் எவருக்கும் நன்றி, விசுவாசம் என்பது இருக்காது. கலகலப்பும் உற்சாகமும் இருக்கும். கண்டபடி பிரயாணத்தையோ அன்றி இடமாற்றங்களையோ செய்யாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல மாற்றங்களும் புதிய பொறுப்புக்களும் ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். உங்கள் சாதுரியப் பேச்சுக்களால் பல காரியங்கள் அனுகூலமாகும். எதிர்ப்பாலாருடன் எப்பொழுதும் போட்டியாக இருக்காது கொஞ்சம் அமைதியாக இருக்க முயற்சிக்கவும். ஈரல் வருத்தம், குடல் வருத்தம், கைகால் தாக்கம், சளிவருத்தம், வாய்வு வாத உளைவு என்பன கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன், வெள்ளி

**மகரம்:** கடமை பெரிதென அடிக்கடி நினைப்பீர்கள். திறமை இருந்தாலும் உடனே வெளிக்காட்ட மாட்டீர்கள். வேகமாக நடந்தால் சறுக்கி விழ வேண்டும் என்ற பயமா? மெல்ல மெல்ல செல்கிறீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தால் பல அரிய காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் பலரும் வாழ்த்திப் போற்றுவார்கள். பணப்புழக்கம் படிப்படியாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து உதவிகள் சிலருக்குக் கிடைக்கலாம். முழங்கால் பிடிப்பு, அஜீரணம், அடிபடல் அல்லது சத்திர சிகிச்சைப் பலன் என்பன கொடுக்கலாம். நரம்பு வருத்தம், வயிற்றுப் பொருமல், வாத உளைவு என்பன கொடுக்க இடம் உண்டு. தூர தேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**கும்பம்:** உங்களுக்கு எண்ணச் சிந்தனைகள் பல வர்ணக் குதிரைகளாக ஓட ஆரம்பிக்கும். சட்டம், திட்டம், சம்பிரதாயம் எல்லாவற்றையும் பற்றி கவனிக்க மாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செயற்பாடுகள் இருக்கும். தனிமையில் அமைதி காண்பீர்கள். எதிர்ப்பாலாருடன் அவதானமாக நடந்து கொள்ளவும். எந்தக் குழப்பங்களாலும் முடிவு ஏற்படாது. மனதிற்கு அமைதி தேவையாயின் ஆண்டவனின் சிந்தனைகள் வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று வாருங்கள். கைகால், மூட்டுவலிகள், நெஞ்சு படபடப்பு, வாத வாய்வு, நரம்பு விறைப்புக்கள் என்பன அடிக்கடி கொடுத்துக்கொண்டிருக்கும். தகுந்த வைத்தியம் செய்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

## மகாதேவா ஜோதிடம்

**மீனம்:** மனிதர்கள் எப்பொழுதும் குறை காண்பார்கள். சின்ன விசயம் என அலட்சியம் செய்யும் சில விஷயங்களால் பின்பு நீங்கள் வருந்த வேண்டி வரலாம். சனீஸ்வரன் உதயத்தில் தனது உக்கிர பலனைக் காட்டவிடாமல் வியாழ பகவான் அடிக்கடி தடுத்தபடி இருப்பார். நல்லவர்களின் சேர்க்கையால் பல ஆபத்து, கஷ்டங்களிலிருந்து விலகி நடக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் புதியவை ஏற்பட்டு பழையவை விலகும். மாற்றங்கள் சகஜமாகும். அடிக்கடி சலனங்கள் மனதை ஆட்கொண்டு எதிலும் முடிவு எடுக்க முடியாமல் இருக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். புத்திரர்களுக்காகவும், சகோதரர்களுக்காகவும் ஓடியாடித் திரிவீர்கள். சனீஸ்வரனின் தாக்கம் இருப்பதனால் பொறுமையாக சிரித்து சிரித்து சமாளித்துக் கொள்ளுவீர்கள். சளி, முட்டு, கைகால் வாத — வாய்வுத் தொல்லை என்பன இருக்கும். வைத்தியம் செய்யவும். தெய்வ வழிபாடு செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

### நியாயமில்லை

துள்ளித் திரிந்து
பள்ளிப்பயின்ற
காலங்கள், அவை
வாழ்கவே!

நேற்று மறைந்த
ஆண்டிலே இழந்துபோன
ஆரவாரமான அந்நாள்கள்
மீண்டும் வராதா?
அமைதியற்ற மனங்களில்
ஏக்கங்களே மிகுதியாய்!

ஆம்,
நிஜங்கள்
நிம்மதியைத் தர
நியாயமில்லையே!

— ரமணன் —

## குறள் வெள்ளம்

மனிதன் தேடி அணிய வேண்டிய ஆபரணங்கள் — அணிகலன்கள் — அலங்காரங்கள் — எவையெவை என்று ஆராயப் புகுந்தால் சந்தையில் புகும் ஆயிரம் ஆயிரம் டிசைன்கள் விடை தரமாட்டா.

நிலம் நோக்காத மிடுக்கான பார்வையும், அலட்சிய நோக்கும், திமிர்ப் பேச்சும் வாய்த்து விட்டால் — பண்பானால் — அவன் கழுத்திலுள்ள வடம் போன்ற சங்கிலியும் கைவிரல்கள் நிறைய மின்னும் வைர மோதிரங்களும் அணிகளாகி அழகுசெய்ய மாட்டா.

எடுப்புடன் வாழ்ந்துவிட்டால் உலகம் காலடியில் மண்டியிடும் என நினைப்பது பெரும் தவறு. அயலோடு போட்டி பிடித்து 4 பவுண் கூட அணிந்து கொண்டால் அது பெருமை என நினைப்பதும் மடமை. இப்போட்டியில் பேச்சும் பணிவும் பிழைத்து விடும். திமிர்த்தனமும் பழியும் எஞ்சும்.

மற்றவர்களையும் மனிதன் என்று மதிக்கும் மாண்பே முதலில் தேவை. அடுத்தவர்களோடு பழகும் போது பணிவும் இனிய பேச்சும் வெளிப்படின் அது போதும். உலகம் அவனை மதிக்கத் தொடங்கிவிடும். கழுத்தும் கைவிரல்களும் வெறுமையாகக் கூட இருக்கலாம்.

எனவே ஆணோ, பெண்ணோ பணிவும், இன்சொல்லும் கொண்ட பண்பைப் பெற்றுவிட்டால் அவர்களை பிற அணிகள் அணியவைத்து அழகு பார்க்கவேண்டிய தேவை எழாது.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.
(இனியவை கூறல்)

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மிதி வெடிகள்: புதைந்து கிடக்கும் ஆபத்து!

## டாக்டர் என். சிவராஜாவுடன் ஒரு நேர்காணல்

**மிதிவெடிகள் தொடர்பான சர்வதேச மாநாடு அண்மையில் கம்போடியாவில் நடைபெற்ற போது அம்மாநாட்டில் இலங்கையில் இருந்து நால்வர் பங்குபற்றினர். அதில் யாழ்ப்பாணத்தில் இருந்து 'யுனிசெவ்' அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி பென்னி புறூவும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறைத் தலைவரான வைத்திய கலாநிதி என். சிவராஜாவும் கலந்து கொண்டனர். டாக்டர் சிவராஜா அங்கு இருபது நிமிட உரையையும் நிகழ்த்தினார். மிதிவெடிகள் தொடர்பாகவும் அதனைத் தடுப்பதிலும் பெரும் பங்காற்றி வரும் அவரை நேர்முகம் காணுகிறார்கள் மருத்துவபீட மாணவர்களான கே.அழகேந்திரன்,எச். ஆர். குணரட்ணம், சி. சினோதயா ஆகியோர்.**

● இந்தத்துறையில் நீங்கள் அதிக ஆர்வம் காட்டியதற்கான காரணம் என்ன?

★ எமது பிரதேசத்தில் மிதிவெடிப்பிரச்சனையை ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக குறிப்பிடலாம். குறைந்த பட்சம் 15 ஆண்டுகளாக இது இருந்து வருகின்றது. இது தொடர்பான புள்ளி விவரங்கள் எம்மிடம் இல்லாதபோதிலும் ஜெய்பூர் செயற்கை அவயவம் பொருத்தும் நிலையத்தின் உதவியுடன் சில புள்ளி விவரங்களைப் பெற முடிந்தது. 1987—97 இடைப்பட்ட காலத்தில் செயற்கைக் கால் பொருத்திய 1614 பேரில் 50 சதவீதத்தினர் மிதிவெடியால் பாதிக்கப்பட்டே கால்களைப் பொருத்தியுள்ளனர். 1997 ஆம் ஆண்டில் மாதாந்தம் 10 பேர் மிதிவெடிக்கு இலக்காகித் தமது கால்களை இழந்தார்கள். இவர்களில் 10 சதவீதத்தினர் மரணம் அடைந்தார்கள். இப்பொழுதும் கூடுதலான எண்ணிக்கையிலான மக்கள் மிதிவெடியால் ஊனமுற்றுக்கொண்டே இருக்கிறார்கள். இதனாலேயே நான் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டியேற்பட்டது.



கம்போடிய மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு மோப்ப நாய் மூலம் மிதிவெடிகளைக் கண்டறியும் முறை பற்றி நிபுணர் ஒருவர் செய்முறை விளக்கம் அளிக்கிறார்.

● மிதிவெடிப் பிரச்சினையை எவ்வாறு களையலாம் என்று நினைக்கிறீர்கள்?

★ இந்த நிலையில் நாங்கள் செய்யக்கூடியது இரண்டு விடயங்களாகும். ஒன்று மிதிவெடிகளைக் கண்டுபிடித்து அகற்றுதல்; இரண்டாவது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மிதிவெடி ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுவது. மிதிவெடிகளை அகற்றுதல் குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட விடயமாகும். இதில் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். ஒரு மிதிவெடியை உற்பத்திசெய்ய 200 ரூபா அளவிலேயே செலவாகிறது. ஆனால் ஒரு மிதிவெடியை அகற்றுவதற்கோ 20 ஆயிரம் ரூபா முதல் 70 ஆயிரம் ரூபா வரை செலவாகும். ஆகவே சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கமே மிதிவெடிகளை அகற்றும் பணியைச் செய்ய முடியும்.

'யு. என். டி. பி' (UNDP) என்ற ஐ. நா. அபிவிருத்தி வேலைத்திட்டம் மிதிவெடிகளை அகற்றும் பணிக்கான ஆரம்ப கட்ட வேலைகளைச் செய்கிறது. யாழ்ப்பாணம் கோவில்வீதியில் யு.என்.டி.பியின் புள்ளிவிவரக் கேந்திரம் அமைந்திருக்கிறது. அங்கு சென்று எவரும் மிதிவெடி பற்றிய தகவல்களைக் கொடுக்க முடியும். அப்பொழுது மிதிவெடிகளை அகற்றும் பணிக்கு அவர்கள் உதவுவார்கள். இது கண்டறிந்த மிதிவெடிகளைப் பற்றிய நிலைமை. ஆனால் எங்கெங்கே மிதிவெடிகள் உள்ளன என்பதை அறிவது ஒரு நீண்டகால வேலையாகும். மிதிவெடிகள் உள்ள இடங்கள் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் மிதிவெடி மோப்ப நாய்களைப் பயன்படுத்தி மிதிவெடியுள்ள இடங்களைக் கண்டுபிடித்த பின்னர் பயிற்சி பெற்ற ஆள்களின் துணைகொண்டு அவற்றை வெடிக்க வைத்து அகற்ற முடியும். இது அங்குலம் அங்குலமாகச் செய்யவேண்டிய ஒரு பாரிய பணியாகும்.

● இப்பணிக்காக வேறு அமைப்புக்களையும் இணைத்துள்ளீர்களா?

★ ஆம். 'யுனிசெவ்' போன்ற நிறுவனங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை வலியுறுத்துகின்றன. ஏற்கனவே உள்ள மிதிவெடிகளால் ஊனமுற்றவர்களுடன் தினம் தினம் புதியவர்கள் மிதிவெடிகளால் பாதிக்கப்படுகிறார்கள். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். இதற்குப் பல்வகைப் பிரச்சாரங்களும் செய்வதில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கு மிதிவெடி பற்றிப் பயிற்சியளித்து, பயிற்சியைப் பரவலாக்கும் முறையில் பல்வேறு இடங்களுக்கும் பிறருக்கும் பயிற்சியளிக்க இவர்களை அனுப்புவது இதன் ஒரு திட்டமாகும். கிராம அலுவலர்கள், சுகாதார ஊழியர்களுக்கு 'யுனிசெவ்' இந்த முறையில் ஓராண்டில் 600 பயிற்சிகளை அளித்து உள்ளது.

அத்துடன் புதிய ஆண்டு ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் ஆசிரியர்களுக்கு 'மிதிவெடி பற்றிய விழிப்புணர்வுக் கலந்துரையாடலை' நடத்தத் திட்டமிட்டுள்ளது. மிதிவெடி பற்றிய அறிவைப் பரப்புவதற்குப் பாடசாலை சிறந்ததோர் நிலையமாகும். அதே வேளை மிதிவெடிகளால் பாதிக்கப்பட்டோரில் அனேகர் 19 வயதுக்குட்பட்டவராவர். அதாவது மாணவராவர்.

இப்பணியில் இன்னும் சுவரொட்டிகள், கைநூல்கள், வரைபடங்கள், விளம்பரப் பலகைகள், பத்திரிகைச் செய்திகள், விளம்பரங்கள் ஆகியனவும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள் சில நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

● மிதிவெடிகள் பொதுவாக எங்கெங்கே விதைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட முடியுமா?

★ பொதுவாக பழமரங்கள், தென்னை முதலிய உடனடிப் பசி, தாகம் தீர்க்கும் மரங்களின் கீழும், முற்றம், வீட்டுவாசல் முதலிய உடன் பழக்கமுடைய இடங்களிலும், காவலரண்கள் இருந்த இடங்கள், மண் அணைகள் அமைந்த இடங்கள் போன்றவற்றிலும் அவை பரம்பிக் கிடக்கின்றன.

● மிதிவெடியினால் பாதிப்புறுவோர் என்னென்ன விதமாக பாதிப்புறுகிறார்கள்? இதனை எவ்வாறு தடுக்கலாம்?

★ மிதிவெடியினால் பாதிப்புறுவோர் அங்கங்களை இழப்பது மட்டுமன்றி உளத்தாக்கத்துக்கும் உள்ளாகிறார்கள். 70 சத வீதத்தினர் தாக்குதலுக்குள்ளாகிய அதேகணத்திலேயே மனப் பாதிப்புக்குள்ளாகிறார்கள். மிகுதி 30 சத வீதத்தினர் ஆறு மாதகாலத்தின் பின்பும் மனச்சோர்வுக்குள்ளாகின்றார்கள்; இவர்களுக்கு உற்சாகமளித்து ஊக்கமளிப்பது அவசியமாகின்றது. பாதிப்புற்றோர் சிகிச்சைபெற்று அவயவங்கள் பொருத்தப்பட்ட பின்னர் தம் அவயவங்களை உரிய பயிற்சி மூலம் பழக்கப்படுத்தி இசைவாக்கம் செய்து கொள்ளாமை மற்றுமொரு பாரிய பிரச்சினையாகவுள்ளது. இதற்கு யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எளிதான பயிச்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்க ஐந்து பேருக்கு மூன்று மாதப் பயிற்சியளித்து களத்துக்கு அனுப்பவுள்ளது.

● அதிகமாக சிறுவர்களே பாதிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டீர்கள்; இதற்குரிய காரணங்கள் ஏதாவது உண்டா? அதனை எவ்வாறு தடுக்கலாம்?

★ மிதிவெடிகளால் குழந்தைகள் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் அவர்கள் எதையும் ஆராயும் வழக்கமுடையவர்கள். எந்தச் சிறிய பொருளைக் காணினும் அதனைப்பியத்துப்பிடிங்கி ஆராய்வதற்கு முயற்சிப்பார்கள். இந்தஇயல்பானசுபாவம் அவர்களை மிதிவெடிகளிற் சிக்க வைக்கிறது. இங்கேதான் பெற்றோரின் பங்கு முக்கியமானதாகின்றது. தெரியாத— புரியாத — பொருள்களைத் தொடக்கூடாதென பெற்றோர்தான் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். அறிவுறுத்தலுடன் நின்றுவிடாது அவர்களைக் கண்காணிப்பதும் அவர்களுடைய பொறுப்பாகும். பாதுகாப்பரண்களுக்குச் சமீபத்தில் குடியிருக்கும் பெற்றோர் இதில் மிகக்கவனமாக இருக்க வேண்டும், மர்மப் பொருள்களைக் கையாண்டு உயிரிழந்த, காயமடைத்த குழந்தைகள் பலர். செயற்கை அவயவங்களை குழந்தைகளுக்கு பொருத்தும்போது புதிய சிக்கல் ஒன்றும் எழுகின்றது. பெரியவர்களுக்கென்றால் இருக்கும் காலளவுக்கோ கையளவுக்கோ செயற்கை அவயவத்தை பொருத்த முடியும். அதை ஒரு தடவை பொருத்தினாற் போதுமானது. ஆனால் குழந்தைகளைப் பொறுத்தவரை நிலைமை வேறு. அவர்கள் வளர வளர அவயவங்களை மாற்ற வேண்டி வரும். அதுவும் ஆறுமாதங்களுக்குள் ஒருமுறை. இது தீராத வாழ்க்கைப் பிரச்சனையாவதோடு பொருளாதார ரீதியில் எல்லோருக்கும் கட்டுப்படியானதல்ல. இந்தப் பிரச்சினைக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள் அவயவங்களை இழந்து காலமெல்லாம் கஷ்டப்பட நேரிடும்.

● மிதிவெடிகளைப் பற்றிய ஆய்வுகளின் போதும், அது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காகவும் பல இடங்களுக்குச் சென்று வந்திருப்பீர்கள். இது தொடர்பாக குறிப்பிட்டுக் கூறும்படியான அனுபவம் ஏதாவது உங்களுக்கு ஏற்பட்டதா?

★ நான் ஒருமுறை புத்தூருக்கு ஒரு பாடசாலைக்கு, (ஆரம்பப் பாடசாலை) சென்றிருந்தேன். அங்கு பாடசாலைச் சிறுவர்களைச் சந்தித்து மிதிவெடிகள் தொடர்பாக உரையாடினேன் அப்போதுநான் கொண்டு சென்ற மிதி வெடிகளின் உருவப்படங்களைக் காட்டி 'இதனை எங்காவது கண்டுள்ளீர்களா?' என்று கேட்டேன். 'ஓ... கண்டிருக்கிறேனே... அதனில் இலங்கங்கள் கூட இருந்தனவே...' என்று கூறிய 5 வயது நிரம்பிய சிறுவனை என்னால் நம்பமுடியவில்லை. மீண்டும் மீண்டும் அவனிடம் கேட்டபோது அவன் அழத் தொடங்கி விட்டான். ஆனால் அங்கே அவனுடைய சகோதரியைச் சந்தித்து இது தொடர்பாக கேட்டு இருவரையும் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு அந்த இடத்தைக் கண்டு பிடிக்க அழைத்துச் சென்றோம். ஆனால் இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் அவ்விடத்தில் மாடு ஒன்று மிதிவெடியில் மாட்டிக் கொண்டது தெரிய வந்தது. எனக்கு ஆச்சரியம் என்னவென்றால் இந்தச் சிறுவன் இது மிதிவெடியென்று அறியாது கிட்டப்போய் அதனுடைய இலக்கத்தைக்கூடப் பார்த்து வந்திருப்பதுதான். எவ்வளவு தூரம் சிறுவர்களின் ஆர்வமும் கவனயீனமும் ஒன்றிப்போயிருக்கின்றன என்பதை உணரக் கூடியதாக இருந்தது அதைத் தொட்டுப் பார்த்திருந்தால் இன்று அவன் உயிருடன் இருக்கமாட்டான்.

● கம்போடிய மாநாடு பற்றி குறிப்பிட முடியுமா?

★ கம்போடியா எங்களைப் போன்றே யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு. அங்கு மிதிவெடிகளுடன் வெடிக்காத குண்டுகள், பொறிவெடிகள் போன்றனவே அதிகமாகும். இம் மாநாட்டில் 32 நாடுகளையும் 47 பன்னாட்டு நிறுவனங்களையும் சேர்ந்த 250 க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினார்கள். இதில் யாழ்ப்பாணத்தில் இருந்து நானும் 'யுனிசெவ்'' சார்பாக பென்னி புறூவும், யு. என். டி. பி சார்பாக டேவிட் டெயிலர் என்பவரும் கலந்து கொண்டோம். இதில் யாழ்ப்பாணத்தில் மிதிவெடி தொடர்பான பிரச்சினைகள் எடுத்துரைக்கப்பட்டன. கம்போடியாவில் மிதிவெடி அகற்றும் முறைகளும் பாவிக்கப்படும் உபகரணங்களும் காண்பிக்கப்பட்டன.

● கம்போடியாவில் நடைபெற்ற, நடைபெற்றுக்

(XI ஆம் பக்கம் பார்க்க)



கம்போடியாவில் நடைபெற்ற கண்ணிவெடி தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பிராணி அணில் அதில் பறக்கும் இனமும் உண்டு

மென்மையான தோற்றமுடைய, சுறுசுறுப்பு மிகுந்த சிறிய பிராணியாகிய அணில் நாம் அனைவரும் அறிந்ததொன்று.

அணில் காட்டு விலங்கு ஆயினும் தற்போது நகர்ப்புறங்களிலுள்ள சந்தடிமிக்க பகுதிகளையும் இது வாழ்விடமாக மாற்றிக் கொண்டு விட்டது.



அணில்களில் பல சாதிகளும், பல இனங்களும் உள்ளன. இவற்றின் உடல் மெலிந்தும், வால் மயிரடர்ந்து நீண்டும் காணப்படும். அணில்களில் ஏழு அங்குல அளவுள்ள சிறிய அணில் முதல் பூனையளவு பெரியன வரை பல்வேறு அளவுள்ள இனங்கள் காணப்படுகின்றன. சிவப்பு, பழுப்பு, சாம்பல், கறுப்பு முதலிய பலநிற அணில்களுண்டு. இவற்றுக்கு முதுகில் 2 முதல் 5 வரையான கோடுகள் — இனத்துக்கு ஏற்ப மாறுபட்டு — காணப்படும்.

**பிராணிகள் உலகம்**

அணில்கள் பறவைகளின் ஒலிபோல் கீச்சிட்டு உரத்து சத்தம் போடும். கத்தும் போது வாலை ஏற்றி ஏற்றி ஆட்டும். அணில்கள் பழம், கொட்டை, தானியம், இலை, பட்டை முதலியவற்றை உளி போன்ற கூரான முனையுள்ள முன்பற்களால் கொறித்து உணவாகக் கொள்ளும். சிறு பூச்சிகள், பறவைகளின் முட்டைகள், குஞ்சுகள் போன்றவற்றை உண்ணும் அணில் இனங்களுமுண்டு. அணில்கள் பாலூட்டி வகுப்பில் ரோடென்ஷியா என்னும் கொறிக்கும் விலங்கு வரிசையைச் சேர்ந்தவை.

அணில்கள் மரக்கிளைகளிலும், பொந்துகளிலும் கூரைகளிலுள்ள சந்துகள், வீட்டுச் சுவர்கள் போன்றவற்றிலும் இலை, புல், வைக்கோல், தூள், தும்பு, பஞ்சு என்பவற்றால் கூடுகட்டும். அலங்கோலமாக கட்டப்படும் இக் கூட்டில் 2 முதல் 4 வரையான குட்டிகளை ஈனும். பிறக்கும் குட்டிகள் மயிரின்றியும், கண் திறக்காதும் இருக்கும்.



அணில்கள் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் பரந்து காணப்பட்டாலும் அவுஸ்திரேலியாவிலும், மடகஸ்காரிலும் இவை காணப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அணிலின் மயிர் ஓவியம் தீட்டும் தூரிகை செய்யவும், அதன் மெல்லிய தோல் மிருதுவான பை முதலிய அழகுசாதனப் பொருள்கள் செய்யவும் உதவுகின்றன. சிலர் அணிலை உணவாகவும் உட்கொள்கின்றனர்.

தரையில் வாழ்பவை, மரத்தில் வாழ்பவை தவிர, பறக்கும் வகையைச் சார்ந்த அணில் வகைகளும் உண்டு. பறக்கும் அணிலது உடலின் இரு பக்கங்களிலும் உடலையும், முன்பின் கால்களையும் இணைத்து மெல்லிய தோல் மடிப்புகளிருக்கின்றன. பறக்கும் அணில் தனது காலை விரிக்கும் போது இந்த மடிப்புகள் விரிவடைகின்றன. அதனுதவியுடன் தாவித் தாவி காற்றில் மிதந்து திரியும். பறக்கும் அணிலின் 35 வகையான இனங்களை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்துள்ளனர். வட அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் சில ஆசிய நாடுகளில் இவ்வகை அணில்கள் காணப்படுகின்றன. இவை பகல் முழுவதும் உறக்கத்திலிருப்பதால் இவற்றை அரிதாகவே காணக்கூடியதாக உள்ளது. இவற்றின் கண்களுக்கு இரவில் பார்க்கக்கூடிய சக்தியுண்டு.

பறக்கும் அணில்கள் ஏனையவகை அணில்களைப் போல நிலத்தில் இறங்கி வருவதில்லை. அவை மரத்திலேயே வாழும். பறக்கும் அணில்களின் நீளம் வால் தவிர்த்து 8 முதல் 60 சென்ரிமீற்றர் வரை இருக்கும்.

அணில்களில் அனேக இனங்கள் தமக்கு உணவு மிகுதியாகக் கிடைக்கும் காலத்தில் அவற்றைத் தமது வாழ்விடங்களில் சேர்த்து வைக்கும் பழக்கம்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# சிரிப்பு எங்கள் சின்னம்

அன்பு எங்கள் தோழனாம்
அறிவு எங்கள் பாலமாம்
இன்பம் எங்கும் சூழவே
இனிய பேச்சுப் பேசுவோம்.

சிரிப்பு எங்கள் சின்னமாம்
சிற்பம் எங்கள் கண்களாம்
வெறுப்பு கொண்டு எவரையும்
வெருட்டக் கூட மாட்டோமே.

கடவுள் ஒருவர் என்பதே
கனிந்த எங்கள் முடிவாகும்
காணும் பொருள்கள் யாவிலும் — அவர்
காட்சி தானே வடிவாகும்.

நாளை உலகைத் திருத்திட
நமக்குள் உறுதி பூணுவோம்!
ஏழை மக்கள் சிரிப்பிலே
எமது இறையைக் காணுவோம்!!

வி. உதேஸ் —

# எங்கள் வீட்டுத் தென்னைமரம்!

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
எட்டாத உயரத்திலே
வட்டு நிறையக் காய்களோடு
நிற்குதொரு தென்னைமரம்!

பச்சைவண்ண ஓலைமீது
இச்சை தன்னைக் கொண்டுமே
பட்சியெல்லாம் பறந்துவந்து
தென்னையதில் அமருமே!

அருமையாக அங்குமிங்கும்
குரும்பை வந்து விழுமே!
விரும்பிச் சிறுவர் நாமெடுத்து
தேரும் செய்து விடுவோமே.

இனிமையாகப் பருகிடவே
இளநீரைத் தந்திடும்.
பாட்டி அமர்ந்து கதைகள் சொல்ல
நல்ல நிழல் தந்திடும்!

எங்கள் வீட்டுத் தென்னைமரம்!
என்றும் வாழும் தென்னைமரம்!!

—ந. தர்சினி—
(தரம் 8, நவாலி அட்டகிரி சைவ வித்தி.)

# வெண்கட்டி

சின்ன சின்ன வெண்கட்டி
சிரிக்கும் வெள்ளை வெண்கட்டி
கண்ணைக் கவரும் வண்ணங்களில்
கிடைக்கும் மாவுச் சோக்கட்டி!

குட்டிக் குழந்தை அழுகையிலே
கொடுத்தால் சிரிக்கும் வெண்கட்டி
சற்று அழுத்தி எழுதிவிட்டால்
சட்டென உடையும் சோக்கட்டி!

பாடம் விளக்க ஆசிரியர்
பாரில் எல்லா நாட்டினிலும்
தேடி எடுத்து எழுதுவது
தம்பியர் விரும்பும் சோக்கட்டி!

— இ. சுவர்ணா —
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

# காற்றாடி

அண்ணா செய்த காற்றாடி
அழகு மிக்க காற்றாடி
வண்ணக் காகிதக் காற்றாடி
வாலே இல்லாக் காற்றாடி

காற்றில் மிதக்கும் காற்றாடி
கண்டோர் வியக்கும் காற்றாடி
சற்றும் அயராக் காற்றாடி
சண்டைக்கு அழைக்கும் காற்றாடி

— [illegible] பாலன் —
(தரம் 2, கந்தரோடை தமிழ்க்கந்தையா வி.)

# சொற்றேடல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை வைத்துக்கொண்டு 17 கட்டங்களிலும் உள்ள சொற்களை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் வரவேண்டிய ''வா'' என்ற எழுத்து அந்தந்த இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக முதலாவது வட்டத்துக்குரிய சொல் 'வாத்தியார்'. எங்கே உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வா | | | | |
| 2. | | வா | | | |
| 3. | | | வா | | |
| 4. | | | | வா | |
| 5. | | | | | வா |
| 6. | | | | வா | |
| 7. | | | வா | | |
| 8. | | வா | | | |
| 9. | வா | | | | |
| 10. | | வா | | | |
| 11. | | | வா | | |
| 12. | | | | வா | |
| 13. | | | | | வா |
| 14. | | | | வா | |
| 15 | | | வா | | |
| 16 | | வா | | | |
| 17 | வா | | | | |

1. ஆசிரியர் இவர்.
2. சிவன் கோவில்.
3. பிடித்ததை விடாமை.
4. வாதிக்கு எதிர் தரப்பில்இருப்பவர்
5. கூட்டி வரும்படி உத்தரவிடுதல்.
6. இது சுவாசிக்கப் படுகின்றது.
7. அமர்க்களம்.
8. கிறிஸ்தவ வழி பாட்டு இடம்.
9. அமெரிக்கத் தலை நகரம்.
10. அறுபடை வீடுகளுள் ஒன்று.
11. ஒரு முனிவர்.
12. தர்மம் செய்பவன்.
13. சமையலுக்கு உதவும்.
14. சஞ்சீவியில் பதில் தருபவர்.
15. ஒரு நட்சத்திரம்.
16. இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் கப்டன்.
17. ஒரு தொற்று நோய்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# நாணயத்தை உங்களால் கண்டிபிடிக்க முடிகின்றதா?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | ர் | ஹ | ம் | க் | ல் |
| சா | ட | ள | ங் | ந | யா |
| ச் | டி | ரா | டொ | ய | ரி |
| வா | பி | ன்ா | ல | மா | ப |
| கு | ரோ | ன | ர் | ரூ | வு |
| ப | யூ | க் | பா | யெ | ன் |

மேலே உள்ள படத்தில் பின்வரும் நாடுகளின் நாணயங்களின் பெயர்கள் ஒளித்துக் கொண்டுள்ளன. இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, குறுக்காகவோ அவை ஒளிந்திருக்கக்கூடும். அவற்றை வட்டமிட்டுக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

★ அமெரிக்கா.
★ பிரான்ஸ்.
★ குவைத் / பஹ்ரைன்.
★ இந்தியா / இலங்கை.
★ சவூதி அரேபியா / கட்டார் / ஓமான்.
★ ஜப்பான்.
★ ஐக்கிய அரபு எமிரெட்ஸ்.
★ ஒல்லாந்து (டச்சு)
★ பிரிட்டன்.
★ ஸாம்பியா.
★ ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# இவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால்

ஐஸ் வியாபாரி — உருகிப் போவார்
கண்ணாடி வியாபாரி — உடைந்து போவார்.
பூ வியாபாரி — வாடிப் போவார்.
துணி வியாபாரி — நைந்து போவார்.
மீன் வியாபாரி — நாறிப் போவார்.
எண்ணெய் வியாபாரி — கொதித்துப் போவார்.
மர வியாபாரி — சாய்ந்து போவார்.
பல்பு வியாபாரி — மங்கிப் போவார்.

ரோகினி செல்வராஜா
(தரம் 8, புற்றளை ம. வி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது 'ஒரிஜினல்'?



மேலே உள்ள படத்தில் முதலாவதாக இருப்பது 'கமரா' ஒன்றில் பிடித்த படத்தின் நெகடிவ்'. அந்த 'நெகடிவ்' மூலம் அச்சிடப்பட்ட படம், ஏனைய ஐந்தில் எதுவாக இருக்கும் என்று கூறுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## சொற்களைத் தேடுங்கள்

கீழே கொடுக்கப்பட்ட தகவல்கள் குறிக்கும் சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று எழுத்துக்கள் கொண்டவை. அச்சொற்களிடையே ஓர் எழுத்தில் மட்டும் மாற்றம் உண்டு. எங்கே அச்சொற்களை கண்டு பிடியுங்களேன்.

அ) வீதிகள் இணையும் இடம்.
ஆ) யானை கட்டுமிடம்
இ) ஐவரின் தாய்
ஈ) குரங்கு இது.
உ) யோசி.
ஊ) அகிம்சாவாதி.
எ) அமைதி.
ஏ) சத்தி.
ஐ) சிற்றுண்டி வகைகளில் ஒன்று.

— நாகமணி மகேந்திரலிங்கம் —

( விடை XV ஆம் பக்கத்தில் )

## புதிர்கள்

1) 1 என்ற இலக்கத்தை நான்கு தடவைகள் மட்டும் பயன்படுத்தி எழுதக் கூடிய மிகப்பெரிய எண் யாது?

2 ) சாந்திக்கு 4 மகன்கள் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் ஒரு தங்கை உண்டு. சாந்திக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள்?

3 ) '' பறவைகளுக்கு ஒன்பது கால்கள் '' என்றும் '' யானைகளுக்குப் பதினேழு கால்கள் '' என்றும் புலவர் ஒருவர் கூறுகின்றார். இது சரியா?

கோ. அனுதர்சன்

(தரம் 9, நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.)

(விடை XV ஆம் பக்கத்தில்)

## அழகு

நாட்டுக்கு அழகு வளமை
நாவுக்கு அழகு இன்சொல்
வீட்டுக்கு அழகு வெளிச்சம்
வீதிக்கு அழகு ஒழுங்கு

சோற்றுக்கு அழகு மென்மை
கடலுக்கு அழகு அலைகள்
ஆற்றுக்கு அழகு ஓட்டம்
நீருக்கு அழகு சுத்தம்

பேச்சுக்கு அழகு உறுதி
கண்ணுக்கு அழகு கருணை
கல்விக்கு அழகு அடக்கம்
நிலத்திற்கு அழகு விளைவு.

— வேலும்மயிலும் மதியழகன் —

(தரம் 9, பருத்தித்துறை, வேலாயுதம் ம. வி.)




## குறுக்கெழுத்துப் புதிரின் தந்தை ஆர்தர் வைன்!

குறுக்கெழுத்துப் போட்டியின் தந்தை ஆர்தர் வைன் என்பவர். அமெரிக்காவைச் சேர்ந்த இவர் அங்கு வெளிவரும் ''நியூயோர்க் வேர்ல்ட்'' என்ற பத்திரிகையின் ஆசிரியராக 1913 ஆம் ஆண்டு கடமை ஏற்றார்.

அந்தக் கையோடு வந்த கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு தாம் வெளியிட எண்ணிய சிறப்பு மலரில் புதுமையாக ஒன்றை பிரசுரிக்க வேண்டும் என நினைத்தார். அதன்படி சிந்தித்து முதன் முதலாக குறுக்கெழுத்துப் புதிரை அதில் சேர்த்தார்.

உடனே அனைத்துப் பத்திரிகைகளும் தங்களது ஞாயிற்றுக்கிழமை வார இதழ்களில் குறுக்கெழுத்துப் புதிரை பிரசுரிக்க ஆரம்பித்தன.

தொடர்ந்து 1924 ஆம் ஆண்டு, சைமன், சுஸ்டர் என்ற இரண்டு ஆசிரியர்கள் குறுக்கெழுத்துப் புதிர்கள் மட்டும் அடங்கிய புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டனர். அமெரிக்கா முழுவதும் இந்தக் குறுக்கெழுத்துப் புதிர் புத்தகங்கள் நன்றாக விற்பனையாகி நல்ல பேரும் புகழும் பெற்றன. நல்ல வருமானமும் கிடைத்தது.

இவ்வாறு அமெரிக்காவில் உருவான குறுக்கெழுத்துப் புதிர் பின்னர் இங்கிலாந்துப் பத்திரிகைகளிலும் பிரபல்யம் பெற்று உலகம் முழுவதும் பரவின.

## நாய்க்கு வழிகாட்டுங்கள்!



இந்த நாய்க்குட்டிக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகின்றதாம். அந்த எலும்புத்துண்டை அது எடுப்பதற்கு அதற்கு வழிகாட்டுங்கள் பிளீஸ்...!

## உங்களால் முடியுமா?

1. குடித்து விட்டு மிச்சமாக எறியும் சிகரெட் துண்டுகள் நான்கை ஒன்றாகப் பொருத்திக் குடிக்கும் ஏழை அவன். தினமும் இப்படி மூன்று சிகரெட்டுக்களையாவது குடிப்பது அவன் வழமை. இவ்வாறு அவன் புகைப்பதற்கு ஒரு நாளைக்கு ஆகக் குறைந்தது எத்தனை எஞ்சிய துண்டுகள் அவனுக்குத் தேவை?



2. குடியானவன் ஒருவனிடமுள்ள காணித்துண்டின் வடிவம் இது. இந்தக் காணியை தனது நான்கு பிள்ளைகளுக்கும் சமமாக — சம வடிவில் — பங்கிட்டுக் கொடுக்க அவன் விரும்புகின்றான். அவனுக்கு இக்காணியைப் பங்கிட்டு உதவுங்கள் பார்க்கலாம்.

3, வாசுகிக்கு அவளது மாமனார் சில பேனாக்களை வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்து கொடுத்தார். அவள் தன் நண்பி ஒருத்தியுடன் அவற்றைச் சமமாகப் பங்கிட எண்ணியபோது ஒரு பேனா மீதமாக இருந்தது. அப்போது வேறொரு நண்பியும் வந்து சேர்ந்தாள். மூவருக்கும் சமமாகப் பங்கிட எண்ணியபோதும் ஒன்று மீதமாக இருந்தது. இவ்வாறு 4, 5, 6 பேருக்கிடையே பங்கிட எண்ணிய பேது. ஒரு பேனா மீதமாக இருந்தது. என்ன ஆச்சரியம்! ஏழு பேருக்கிடையே சமமாகப் பங்கிட முற்பட்டபோது அவை யாவும் மிச்சமின்றி சமமாகப் பங்கிடப்பட்டு விட்டன. வாசுகிக்கு அவளது மாமனார் வழங்கிய பேனாக்கள் எத்தனை?

— எஸ். ஜனா —
(விக்ரோரியாக் கல்லூரி)

(விடை XV ஆம் பக்கத்தில்)

## விடுகதை

(1) நீரோடு நிலங்கறுக்க நிலாவல் குருத்தெறியக் காரோடும் பட்டிணத்தில் காயும் தின்னலாம்; பூவுந் தின்னலாம்; இலையும் தின்னலாம்; பழந்தின்னக் கூடாது. அது என்ன?

(2 ) அடுக்கடுக்காய் இருக்கும் ராணி. அவள் யார்?

(3) சுற்றுவேன் அந்த மரத்தை; சூடேன் அந்தப் பூவை; நத்தேன் அந்தக் காயை; நாடுவேன் அந்தப் பழத்தை. அது என்ன?

(4) நன்னுவார்; தின்ன மாட்டார். அவர் யார்?

(5) பூப்பார்; காய்ப்பார்; கலகலப்பார். காகம் இருக்க கொப்பில்லை. அது என்ன?

(6) பக்கமெல்லாம் பட்டையுண்டு; மரமுமல்ல. பெயர்த்தெடுத்தால் முத்துண்டு; சிப்பியல்ல. உடைத்தெடுத்தால் விதையுண்டு, பழமுமல்ல. அது என்ன?

(7) ஆயிரம் தச்சர் கூடி அமைத்த ஒரு மண்டபம். ஒருவன் கண் பட்டு உடைந்தது. அந்த மண்டபம் எது?

(8) தலையுண்டு —வாலில்லை; உடம் உண்டு—காலில்லை. தட்டடச் சீறும் பாம்பு அல்ல. அது என்ன?

(9) கட்ட முடியாத கட்டு. என்ன கட்டு அது?

கணபதிப்பிள்ளை புஸ்பமாலா
( தரம் 8 தரம், விக்ரோறியாக் கல்லூரி )

### விடைகள்

1) முருங்கை. 2) ரோஜா. 3) வேம்பு. 4) பாக்கு வெட்டி. 5) நெல். 6) சோளம். 7) தேன்கூடு. 8) நெருப்புக் குச்சி. 9) கமக்கட்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை தாண்டல்

**சஞ்சீவி சிறுகதை**

''இஞ்சேருங்கோ உதயனைப் பார்த்தியளே. 'கொலசிப் ரிசல்ட்ஸ்' கொழும்பில அவுட் ஆகிட்டுதாம். ஐயோ இதைக் கேட்கேக்க எனக்கு ஒருபக்கம் பயமாயும் ஒருபக்கம் சந்தோஷமாகவும் கிடக்கு''.

அம்மா அடுப்படியில புட்டு அவிச்சபடி ஒருகையில பேப்பரை வைச்சுக்கொண்டு அறிவித்தாள். கட்டிலில படுத்திருந்த சின்னத்தம்பி கண்ணனுக்கு இதைக் கேட்டதும் ஏதோ உறைத்திருக்க வேணும்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு அடுப்படிக்கு ஓடிவந்து ''எப்பயணை வருகுதாம்?'' பயமாகக் கேட்டான். அவனைப் பொறுத்தவரை இதுதான் இப்போதைக்கு அவனின் தலைபோற பிரச்சினை.

''எல்லோருக்கும் வந்திட்டுதாம், ஆனா கண்ணனுக்கு மட்டும் ரிசல்ட்ஸ் போட்டே வரவில்லையாம்; ஏன்ரா கண்ணா பார்த்துக்கீந்து எழுதினனியே?''

அக்கா நகைச்சுவையாகக் கண்சிமிட்டியபடி தானும் ஏதோ கேட்கோணும் எண்ட நினைப்பில கேட்டாள். தான் அந்தக் காலத்தில ஏதோ சாதனை செய்த மாதிரி.

''ஐயோ இவன் என்ன செய்தானோ ஆருக்குத் தெரியும்? வாத்தீண்ர பிள்ளை மக்கு எண்டதைச் சரி என்று அறிவிக்கிறன் எண்டு பந்தயம் கட்டினவன் எல்லே?'' என்று கூறி அதோட நிறுத்தாமல் 'கெடுகுடி சொற்கேளாது சாபிணம் மருந்து குடியாது' எண்ட தன்ர பரம்பரைப் பழமொழியை எப்போதும் உரைப்பதுபோல இன்றும் உரைத்தார். இதைக் கேக்கேக்க எனக்குச் சிரிப்பாக வரும். ஆனால் இன்று...

பாவம் கண்ணன் இந்தப் பிஞ்சு வயசிலேயே நெஞ்சில வெடிகுண்டைக் கட்டின மாதிரி எவ்வளவு விரும்பாச் சுமை? கண்ணன் இவையள் சொல்லுறமாரி படுமொக்கு எண்ட நிலை இல்லை. படுசுட்டி. என்னைப் பொறுத்தவரை அவன்தான் என்னை விடக் கெட்டிக்காரன். ஒரு பெடியன் பத்து வயசில 'டெக்' கழற்றிப் பூட்டும் திறமையுள்ளவனாய் இருக்கிறதெண்டால் சும்மாவே? கண்ணனுக்குச் சின்ன வயசிலேயே இந்தப் பயித்தியம். ஐந்து வயசில இவனோட ஒத்த பிள்ளையள் பொம்மை விளையாடேக்க இவன் சுத்தியலும் ஸ்கூட்டிரைவருமாய் திரிவான். இருந்தும் என்ன? படிப்பு மட்டும் கொஞ்சம் கசந்தது அவனுக்கு. பள்ளிக்கூடத்தில படிக்கிற நேரத்தில மற்ற பிள்ளையளின்ரை பழுதான பேனைகளையும் மணிக்கூடுகளையும் திருத்திக் கொடுக்கிறதில இவனுக்கு நேரம் சரியாகுது எண்டு ரீச்சர்மார் அப்பாட்டச் சொல்லிச் சிரிக்க, அவர் வீட்ட வந்து தத்தித்தோம் எனக்கத்த, அதைத் தாங்கமுடியாம நான் ரீச்சர்மார் வீட்டில போய் கொழுவ, இப்படி எத்தனை நடந்தது? எனக்கு அப்பிடி ஒரு பாசம் அவனில. படிப்பு ஒண்டில தான் அவன் அப்பிடி: மற்றபடி எல்லாம் அவனுக்கு நிகர் அவன்தான். இருபது வயசிலே நான் பொறுப்பில்லாம தியேட்டர் வழிய சுத்தேக்க அவன் பாவம் பத்து வயசில விறகு கொத்திறது, மாடு மேய்க்கிறது, பால் கொடுக்கிறது, கடைக்குப் போறது... அப்பப்பா இப்படி எத்தனை வேலைகளைத்தான் செய்யுறான்? இருந்தாலும் வீட்டில ஏன் இப்படி அவனோட கத்துகினமோ எனக்கு விளங்கேல்ல.

ஒவ்வொரு நாளும் இப்படியாகத்தான் அவனுக்குக் கழியுது. இண்டைக்கோ நாளைக்கோ என ரிசல்ட்ஸ் பார்த்தபடி அவன் ஒருபக்கம், நாங்கள் ஒரு பக்கம்.

அடிக்கடி கேட்பான் ''அண்ணா நான் பாஸ் பண்ணுவனே?''

இப்படிக் கேக்கேக்க எனக்கு மனமெல்லாம் பத்தியெரியும். 'இந்த வெடி வெடிக்குமே?'' எனக் கேட்கவேண்டிய பிஞ்சு வாயால 'அண்ணா நான் பாஸ் பண்ணுவேனோ?' எண்டு தன்ர வாழ்க்கையைப் பற்றி இந்தச் சின்ன வயசில கேட்கவைத்த இலங்கைக்கல்வி முறை பற்றி எனக்குச்சரியான கோபம். ஒருபரீட்சையை வைத்து மனிசனை மதிப்பிடுற இந்தக் கல்வி தேவையா? சிந்தித்துப் பார்ப்பதுண்டு. என்ன செய்ய? இது பள்ளிப் பரீட்சையில்லையே? பிடிச்சோ பிடிக்காமலோ எழுதித் துலைக்க வேணுமே! பள்ளிப் பரீட்சையை நாங்கள் 'ஸ்டிரைக்' செய்து எடுக்காமல் விடேக்க எங்கட அதிபர் ''இது ஏ. எல். பரீட்சை எண்டா எழுதாம விடுவியளோ?'' எனக் கேக்க ''ஓம் எழுதாம விடுவோம்'' என ஒட்டு மொத்தமாக, வீம்பாகப் பதிலுரைத்த என்னையும் என் சக கூத்தாடிகளையும் நான் இப்போது நினைத்துப் பார்ப்பதுண்டு.



கண்ணன் பாவம். இந்த நினைப்பிலேயே உடம்பு கொதிச்சுப்போச்சு. திடீரெனக் காய்ச்சல் வந்ததும் அடுத்த நாளே படுத்த படுக்கையாகிவிட்டான். குறுகுறுத்த அவன் கண்கள் குளமாவதைக் காண எனக்கு மனம் பிடிக்காது. வீட்டுக்காரரும் பயந்து போட்டுதுகள்.

''இது என்ன மலேரியாவோ? என்னவோ ...? அடுத்த அனுமதிப் பரீட்சையும் வருகுது. இப்ப என்ன செய்ய?'' எண்டு அம்மா என்னட்டக் கேட்டதும் எனக்கு விசர்தான் வந்தது. மண்ணாங்கட்டி. அனுமதிப் பரீட்சை என ஏசிவிட்டபடி தின்னவேலியிலை |பக்கத்தில இருந்த டொக்டரிட்டக் கொண்டே காட்டிட்டு வந்தப்பிறகு தான் எமக்கு நிம்மதி. இந்த ரிசல்ட்ஸ் வந்து தொலைக்குதில்லையே? கொழும்பில் அவுட்டான அண்டைக்கே இங்கேயும் அவுட்டானால் என்ன? இவங்களும் இவங்கட போக்கு வரத்தும்! 'லயன் எயார்' காரனையும் இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனக்காரனையும் ஏன் கல்வியதிகாரியைக் கூட என் மனதுக்குள்ளே சபிச்சுப்போட்டன். ஆனால் எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன்?

அண்டைக்கும் அப்படித்தான் கொழும்பில ரிசல்ட் வந்து சில நாளாப்போச்சு. பேப்பரும் எடுக்கேல்ல.

''ஒவ்வொரு நாளும் ஆறு ரூபா குடுக்கிறதெண்டா நான் என்ன கோட்டை கட்டியிருக்கிறனே? இல்லாட்டி மரத்தில இருந்து புடுங்கிறதே? நீங்களெல்லாம் சேர்ந்து பேப்பர் விக்கிறவனுக்கு மாடி வீடு கட்டிக் குடுக்கிறன் எண்டு பிளான் போட்டியள் போல'' எண்ட அப்பாவின் கத்தலில எங்கட பேப்பர் எடுக்கிற எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி விழுந்தது.

வீட்டில அப்பாவின் பேச்சுக்கு மறுபேச்சுக் கிடையாது. அவர் போட்டதுதான் சட்டம். பயங்கரவாதத் தடைச் சட்டம்போல காரணமாகவும் போடுவார்; காரணமில்லாமலும் போடுவார். ஒருவர் உழைப்பில் இந்தக் காலத்தில் வாழுறதெண்டால் என்ன செய்ய?

என்ர படிப்பு, தம்பியின்ர படிப்பு, வீட்டுச் செலவுகள், பிறகு இந்தா இண்டைக்கோ நாளைக்கோ. எண்டுவரும் திருநாள்கள்... இதுக்கெல்லாம் செலவழிக்கிறதெண்டால் அவர் என்ன செய்வார்?

பாவம் பெஞ்சனெடுக்கிற வயசு. ஏதோ அவர் சொன்னா சரிதான் எண்டபடி எல்லோரும் ஆமோதிப்பின.

அவர் காலம எட்டு மணிக்கே பள்ளிக்கூடம் போட்டார். அக்கா... அவளும் இந்த தொண்டராசிரியரோ ஏதோ எண்டு போறாள். படிச்ச படிப்புக்கு தக்க சமபளமில்லைத்தான். இருந்தாலும் இப்ப ஒரு மாதமாகத்தான் போகத் தொடங்கியிருக்கிற படியால வேலைக்கு ஏழரைக்கே போட்டாள். நானும் தம்பியும் அம்மாவும்தான். அம்மாவுக்கு அடுப்படியே கதி. காலம அஞ்சுமணி தொடக்கம் இரவு 10 மணி வரைக்கும் தொடர் வேலைதான். பாவம் அம்மா அந்தக்காலத்தில நல்ல உடலழகு. சிவாஜிக்கு சோடியாக நடிக்கலாம் எண்டு அந்தக்காலத்தில பெட்டையள் பகிடி விடுவாளவையாம். ஆனால் இப்ப இளைச்சுப்போனா. வடிவேலுக்குக் கூட சோடியாக நடிக்கத் தகுதியில்லாமல் போட்டா. நானும் தம்பியும் பாட்டுக் கேட்டபடி கட்டிலில் படுத்திருந்தம். அவனுக்கு காய்ச்சல் விட்டபாடில்லை.

ஒரு பத்தரை இருக்கும். எண்டைக்கும் இல்லாம இண்டைக்கு அக்கா வேளைக்கு பள்ளியால வாறாள். வாசலில என்ர பெயரைத்தான் கூப்பிட்டபடி. நானும் ஏதோ என்னவோ எண்டு வாசலை நோக்கி ஓடினன்.

''டேய் மடையா இஞ்ச என்ன செய்யுறாய்?''

இது அவவின் வழமையான உலகப்புகழ்பெற்ற வசனம்.

அதோட நிறுத்தாமல் ''ஸ்கொலசிப் ரிசல்ட்ஸ் பள்ளிக்கூடத்துக்கு வந்துட்டுதடா இவன் கண்ணனோட படிச்சு வேணி நூற்றிமுப்பத்திரண்டு மாக்ஸ் எடுத்து பாஸ் பண்ணிற்றாளாம் அவான்ர அம்மாவுக்கு இப்பத்தான் பள்ளிக்கூடம் வந்து அவான்ர அப்பா சொல்லிட்டு போறார். நீ இவனையும் கூட்டிக்கொண்டு கெதியாய்ப் போட்டுவா.''

இந்தப் பேச்சு கண்ணனுக்கும் கேட்டிருக்க வேணும்.

''என்ன வேணி பாஸ் பண்ணிட்டாளோ? அவள் கெட்டிக்காரி பாஸ் பண்ணுவாள் தானே!'' என்று கூறி தனது இயலாமையைமறைமுகமாகச் சுட்டிக்காட்டினான். இருந்தாலும்—

''அண்ணா நாங்கள் இப்ப கலர் சேட்டோட பள்ளிக்கூடம் போவமே?'' ஆதங்கமாக கேட்டபடி பதிலுக்குக் காத்திராமல் தயாரானான். நானும் வெளிக்கிட்டபடி சைக்கிளை எடுத்தபோதுதான் அதற்குக் காத்துப் போயிருப்பது தெரிந்தது. என்னெண்டு போனதெண்டு புரியேல்ல. ச்சே! சகுனமே சரியில்ல. 'இண்டைக்கு ரிசல்ட் நல்லாயிருக்கவேணும். நல்லூரானே! உனக்கு பத்து தேங்கா உடைப்பன்' எண்டு நினைச்சபடி அக்கான்ரசைக்கிளில அவனை ஏத்திக்கொண்டு பதினொரு மணி வெயிலுக்குள்ளே புறப்பட்டு விட்டேன். எனக்குப் பின்னே கண்ணன் அமர்ந்தபடி பேச்சு மூச்சில்லாம வந்தான். ஒரு வேளை கோயில் பக்கம்ம எட்டிப் பார்க்காத அவன்கூட அன்று ஆயிரத்தெட்டு கோவிலிலே நேர்ந்திருப்பானோ என்னவோ!

ரிசல்ட்ஸ் வரப்போகுது என்பதைக் கேட்டதும் என்ர மனம் பழசை எல்லாம் நினைக்க தொடங்கிவிட்டது. ஓ நான் ஆண்டு அஞ்சில இதே பள்ளிக்கூடத்தில் படிக்கேக்க என்னை ஒருத்தருக்கும் தெரியாது. பள்ளிப் பரீட்சையில அறுபது மார்க்ஸ் வாங்குகிறதுதான் என்ர சாதனை. அப்போ அந்தக் காலத்தில அங்க படிக்கக் கூடிய பிள்ளைகள் எல்லாம் என்னைப்போல படிக்காததுகளோட கதைக்கிறேல்ல. எனக்கு அப்ப சரியான கவலை; இவை ஏன் என்னோடை கதைக்கிறேல்ல நான் கொஞ்சம் கறுப்பெண்டோ என விளங்காம யோசித்திருக்கிறன். விளையாட்டுப் போட்டியிலையும் சரி நாடகம், பாண்ட் வாத்தியம் எதிலேயும் என்னைச் சேர்க்கிறேல்ல. எல்லாத்தையும் தூரத்தில் நிண்டு வாய் பிளந்து பார்ப்பன். ஏதோ அப்பாவின்ர முயற்சியால எனக்கு அடிச்சு அடிச்சு படிப்பிச்சு நூற்றியெழுபது மாக்ஸ் வாங்கி பள்ளியில நாலாவதாய் வந்தபோது அன்று எனக்கும் சரி அப்பாக்கும் சரி பெருமை பிடிபடேல்ல. என்னைத் தெரியாத ரீச்சர்மாரெல்லாம், கைகுலுக்கி 'எனக்குத் தெரியும் நீர் இப்படி நல்லாப் பாஸ் பண்ணுவீர்' எண்டு சொன்னபோதுதான் இந்தப் போலி உலகத்தை புரிய ஆரம்பிச்சேன். ஆண்டு ஆறிலகால்வைச்சதிலிருந்து இந்த ஏ. எல் வரை எத்தனை 'தடைதாண்டல்கள்' என்ற வாழ்க்கை விளையாட்டுப் போட்டியில தொடர்ந்து சம்பியன் பெறறது, சாதனை படைச்சது, இல்லத்தலைவனாக வந்தது, மேடையேறி நாடகங்கள் நடித்தது, மாணவ முதல்வனாக வந்தது... எல்லாம் தான். அண்டைக்கு மிதிச்ச உலகம் மதிச்சபோது நான் பெருமைப்பட்டேன். நல்லதும் சரி கெட்டதும் சரி நான் பழகவேணும் எண்டு யோசிச்சன். ஓர் பெண்ணை காதலிக்கிறது கூட வெளியில தெரிந்தபோது பயப்பிடேல்ல; தலைகுனியேல்ல. என்ர வாழ்க்கை எனக்குத் தெரியும் எண்ட நம்பிக்கை.

பள்ளியை அண்மித்த போதுதான் தம்பி மீண்டும் தன்ர பழைய கேள்வியைக் கேட்டான்.

''அண்ணா நான் பாஸ் பண்ணுவனோ?''

எனக்கு எரிச்சல் தான வந்தது.

**- கை. அனுஷன் -**

''என்ன செஞ்சு தொலைச்சியோ? ஆருக்குத் தெரியும்?'' எண்டு அவனிட்ட எரிஞ்ச பிறகு தான் என்ர பிழை தெரிந்தது! அது பாவம் என்ன செய்யும்? ஏதோ வாழ்க்கையின்ர தடைதாண்டலிலை நிக்குது. விழுந்தாலோ, எழுந்தாலோ யார் என்ன செய்ய முடியும்?

வாசலிலை சைக்கிளை விட்டிட்டு உள்ளுக்கு போகேக்க அவன்ர நண்பர்கள் லைனில் நிற்பது புரிந்தது. கண்ணனும் பாவம் காய்ச்சலோட போய் லைனில் நிண்டான். அப்போ அங்க நிண்ட பெடியளின்ர இதய அடிப்பை ஈ. சீ. ஜி. போட்டுப் பார்த்திருக்கோனும். அப்பப்பா! அப்படியொரு பரபரப்பு.

''டேய்... பார்த்தீபன் நூற்றம்பத்தெட்டா மெடா. இவள் அருளியாவும் பாஸாம். எடா... இவன் நிஷாந்தனாம் எங்கட பள்ளியில முதலாம். ராஜி பாவமெடா. அழுது கொண்டு போறாள்...'' இப்படியாக அவர்களின் பேச்சுக்கள் தொடர்ந்தன. இவ்வளவு பொறுப்புணர்வாக்கதைக்குற பிள்ளையளைப் பார்க்கேக்க என்ர பள்ளிமேல எனக்குப் பெருமைதான். நான் படிச்ச பள்ளிக்கூடமெல்லே!

கண்ணனின் முறை வந்தது. அவனோட நானும் அதிபரும் அறைக்குள்ளே புகுந்தன். 'குட்மோனிங்' என எனது வருகையை தெரிவித்து விட்டு பதிலுக்காக காத்திராமல் 'ராஜேந்திரன் கண்ணன்' எண்டு தம்பின்ர முழுப்பெயரைக் கூறிவிட்டு நிமிர்ந்தன். மனசிற்குள்ளே ஆயிரம் வெடி வெடித்தது. கைகால்கள் எல்லாம் நடுங்கிற்று. பிலிப்பைன்ஸ் எரிமலை கூட தோற்றுவிடும் போல. அப்பிடி ஒரு கொந்தளிப்பு என்ர மனதில. அதிபரின் வேதவாக்குக்காக எமது காதுகள் கூர்மையாகின. திடீரென அதிபரின் வாயிலிருந்து 'சொறி' எண்ட வார்த்தை வர அதைத் தொடர்ந்து ''இவர் நூற்றிநாலு மார்க்ஸ்தான் வாங்கியிருக்கிறார்'' எண்டு கூற எம்மிருவரும் ஒருகணம் அசைவற்றுப் போனோம்.

நான் ''தாங்யூ போயுவ இன்போமேஷன்'' எண்டு மொழிந்து விட்டு தம்பியுடன் இயக்கிவிட்ட 'ரோபோ' போல நடந்தேன். கண்ணன் பாவம். லைனில நீண்ட மற்றவர்க்குத் தன் நிலமையைக் கூறி விட்டு கண் கலங்கியபடி சைக்கிளில் ஏறினான்.

எனக்குத் தெரியும். கண்ணன் பெயிலான கதை இனி அனைவரின் வாயிலும் உரைக்கப்படும். அவன் செய்யாத குழப்படிகளையும் சேர்த்து

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரம் இல்லையம்மா ஆறுதல் சொல்ல...

சஞ்சீவி சிறுகதை



கடைசி மூடையையும் இறக்கி அடுக்கியபோது, அவனையறியாமலேயே பெருமூச்சு வந்தது. நேரம் ஏறத்தாழ ஒரு மணி இருக்கலாம். அடுத்த லொறி வருவதற்குள் அவன் சாப்பிட்டாக வேண்டும். தலையில் சுற்றியிருந்த துண்டை விசிறி தோளில் போட்டுக்கொண்டு, இடது கைமேல் வலதுகை வைத்து, முதலாளி முன்னால் போய் நின்றான். ஒரு பத்து ரூபாத் தாள் விழுந்தது. அதைக் கையில் பொத்திக் கொண்டு, பக்கத்திலிருந்த சாப்பாட்டுக் கடைக்கு ஓடினான்.

அந்த வாடிக்கையாளனை கடைப் பெடியனுக்குத் தெரியும். ஒரு நப்பாசைக்காகக் கேட்டான்.

''என்னா வைக்க?''

'':பாண்''

சற்று நேரத்தில், அரை றாத்தல் பாண் (225 கிராம் இல்லை), இரண்டு வாழைப் பழங்கள்...இனிப் பழுப்பதற்கில்லை என்ற நிலை!

இரண்டு பக்கமும் கறுத்திருந்தன. அத்துடன் நுரை எட்டிப்பார்க்க பிளேன்—ரீ!

ரேடியோவில் வானம்பாடி பாடிக் கொண்டிருந்தது. அடிக்கடி எம். ஜி. ஆர். ஏங்கிக் கொண்டிருந்தார்.

''மனிசன மனிசன் சாப்பிடுறாண்டா, தம்பிப் பயலே.''

பாட்டு முடிந்து.

''எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே'' என்று தொடங்கிய போது நிதானித்தான், எதை எதையோ நினைத்தான்.

எத்தனை காலம்தான்...

இந்த வாழ்க்கை...

இந்த அவலம்...

பாணைப் பிய்த்து வாயில் வைத்தபோது உப்புக்கரித்தது.

வாழைப்பழங்களில் வந்து குந்தத் தொடங்கிய கொசுக்களை கையை ஆட்டிக் கலைத்தான்.

அந்தக் கடையில் ஒரு மூலையில் இருந்த இருக்கைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனையும் அவனது தந்தையையும் அவதானித்தான். பையன் படுசுட்டி என்பதை முகமே காட்டியது. மேசையில் பல காரங்கள் வைக்கப்பட்டிருக்க, எதை, எப்படித் தின்னுவது என்று சிறுவன் திண்டாட, அப்பா வழிகாட்டிக் கொண்டிருந்தார்.

அந்தச் சுட்டியோ போளியை விரித்து, உள்ளே இருந்த இனிப்பை விறாண்டியது. சூசியத்தை எடுக்கப் போக, ஒரு போண்டா மிஸ் பண்ணி தரைதட்டியது.

அவனுடைய குறும்புகளை, தந்தை ரசித்துக் கொண்டிருந்தார். அவர்கள் போகும் வரை, அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நிச்சயமாக பில் நூறு தாண்டியிருக்கும்!

ஏனோ, பொறாமைப் படாமல் இருக்க முடியவில்லை. பாணின் கருகலை உடைக்கத் தொடங்கிய போதுதான் அதை உணர்ந்தான்!

பக்கத்து மேசையில், ஒரு மனிசி இருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

கிட்டத் தட்ட நாற்பது வயது மதிக்கலாம்.

எவ்வளவு நேரம், தான் வாய்பார்த்ததை ரசித்தாளோ என்று சங்கடப்பட்டான்.

அவளோ, விடாமல் அவனை பார்த்துக் கொண்டிருந்தாள்! எவ்வித சலனத்தையும் காட்டாமல், சாதாரணமாக அவளைப் பார்த்த போது—

சிரிக்க முயன்றாள்!

பிறகு தலையை குனிந்து கொண்டாள்.

அவன் தலையைக் குனிந்து விட்டு, பார்த்தபோது — அவள்பார்த்துக் கொண்டேயிருந்தாள்!

இப்போது, மெதுவாகச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் அவள் எதையோ தேடினாள்.

அவள் முகம் மெல்ல மெல்ல மலர்ந்தது.

அவனை நோக்கி முகத்தை நீட்டி, மெல்லக் கேட்டாள்.

''தம்பி, உங்களுக்கு என்ன பெயர்?'',

''கோபி''—தன்பெயரைச் சொன்னான்.

''என்ன வயசு,''

''பதினேழு''

அவன் சொல்லும் போதே அவளது முகத்தில் சோக ரேகைகள் படர்ந்தன. அவளுடைய கண்களை கண்ணீர் திரையிடத் தொடங்கியது.

''தம்பி, என்ர மகன்,...... அவனுக்கு பதினாறு வயசு, சரியா உம்மைப்போலத்தான் செக்கச் செவேலெண்டு, மூக்கும் முழியுமா...''

தொடர்ந்து சொல்ல முடியாமல் பொது இடம் என்றும் பார்க்காது விம்மத் தொடங்கினாள்.

பாவம், என்ன நடந்ததோ? என்று கோபி நினைத்தான்.

அவளது விம்மல் தொடர்ந்தது.

''ரெண்டு வருஷத்துக்கு முதல் ரியூசன் எண்டு போனவன்தான். ஆமி புடிச்சதெண்டு கதைச்சவங்கள். அதுக்குப் பிறகு நான் காணேல...''

''வடிவா படிச்சுக்கொண்டிருந்த பிள்ளை, நானும் தேடாத இடமெல்லாம் தேடிப்போட்டன். இனி எங்க போய்தேட...?'' என்று மேலே, பார்த்துக் கையை விரித்து விட்டு, கேவிக் கேவி அழத் தொடங்கினாள்.

அவளை ஆற்றுப்படுத்த அங்கு யாருமே வரவில்லை. அதிகாரம் உள்ள அத்திவாரமே ஆடும் போது, ஆறுதல் சொல்ல என்ன ஆதாரம் இருக்கிறது?

கோபி—

**- சி.சோ.பதந்தன் -**

அவனும் தலையைக் குனிந்து கொண்டிருந்தான். அவன் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்து, ஆறிப் போயிருந்த பிளேன்—ரீயை சூடாக்கிக் கொண்டிருந்தது!

அவன்—

காணாமல் போன தனது தந்தையை நினைத்திருந்தான்!

(யாவும் கற்பனை)

★

## மிதி வெடிகள்....

(VII ஆம் பக்கத் தொடர்)

கொண்டிருக்கும் போர் பற்றி சிறிய விளக்கம் தருவீர்களா?

கம்போடியாவில் போர் என்ற வகையில் இப்பொழுது சிறிதளவில் உள்நாட்டுப் போர் மட்டும் உண்டு. பொல்பொட் இருந்த காலத்தில் கிட்டத்தட்ட பத்து இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். பொல்பொட்டின் இலக்குப் பெரும்பாலும் புத்திஜீவிகளையே குறிவைத்திருந்தது. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டனர். ஒருவனைக் கொல்லுவதற்காக ஒரு துப்பாக்கி ரவையைச் செலவழிப்பது வீண் என்று கருதிப் பலர் அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர். இதனைவிட வியட்நாம் யுத்தம் நடந்த போது கம்போடியாவுக்குள்ளும் சண்டை மூண்டது. இதனால் கம்போடியாவுக்குள்ளும் பெருமளவு மிதி வெடிகள் விதைக்கப்பட்டன. ஆனால் அவை பல வருடங்களாகியும் இன்றும் தமது சக்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இன்று அங்கு மிதிவெடிகளை அகற்றும் பணியில் அமெரிக்கர்கள்தான் பிரதான பங்கு வகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

● இலங்கையின் உள்நாட்டுப் போர் பற்றி ஏதாவது ஆராயப்பட்டதா?

★ இம் மாநாட்டின் நோக்கம் போரின் பின்னாக எழுந்துள்ள மிக முக்கியமான இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதே. ஆனால் மாநாட்டின் பிரதிநிதிகள் பலர் இங்குள்ள பிரச்சினையை விளங்கிக்கொண்ட விதம் வேறு விதமாக அமைந்திருந்தது. சில பிரதி நிதிகளுக்கு இங்கு நடக்கும் உண்மையான பிரச்சினையை எடுத்துக் கூறினேன். இருந்தும் அரசியல் சார்ந்த விடயங்களில் நான் எனது கருத்துக்களை இங்கு குறிப்பிட விரும்பவில்லை.

● வேறு ஏதாவது குறிப்பிட விரும்புகிறீர்களா?

★ மிதிவெடி தொடர்பான பிரச்சினையைக் களைவதற்கு ஏறக்குறை 600 கிராம அலுவலர்களுக்கும், வெளிக்கள சுகாதார ஊழியர்களுக்கும் பயிற்சி அளித்துள்ளோம். இந்தப் பயிற்சியைப் பயன்படுத்தி அவர்கள் மக்களுக்கு இதைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள் என நம்புகிறோம்.

கிராமமட்ட குழுக்களும்,



கம்போடியாவில் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் 5 ஆயிரத்து 950 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இருந்த கண்ணிகள் ஒன்றாகச் சேர்த்து வெடிக்க வைக்கப்பட்ட காட்சி.

மேற்கொள்ளும் முயற்சிகள் தடைகளைச் சந்தித்து வருகின்றன. மோப்பநாய்களைக் கொண்டு வருதல், தொலைத் தொடர்பு கருவிகளை பயன்படுத்துதல், வேறு உபகரணங்களைப் பாவித்தல் போன்றவற்றில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மிதிவெடிகளைப் பற்றியும் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறைகள் பற்றியும் சங்கங்களும் இவர்களைப் பயன்படுத்தி தங்கள் பகுதி மக்களுக்கு மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க முயற்சிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன். அத்துடன் மிதிவெடிகளினால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உதவ சமுதாயம் முன்வரவேண்டும். பல சந்தர்ப்பங்களில் ஊனமுற்றவர்கள் கஷ்டப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ... வருவதில்லை.

★

## இதய தாகம்

புயலோடு போராடும் படகாகிப் போனோம்
புரியாத தணலோடு – உறவாடலானோம்
வயிறாற ஒருவேளை உணவுண்ணும் நாளை
வரலாற்றுத் திருநாளாய் நினைத்தேங்குகின்றோம்
மயிர்நீப்பின் உயிர்போக்கும் இளமானைப் போல
மன்மானம் தனைக்காக்க முடியாதபோதும்
அயராக எமைமூடும் அவலப்புண் பிய்க்க
அறிவென்ற கூர்க்கொம்பு தனைச்சீவு கின்றோம்

கடலோரம் நதிவந்து கலந்தாடல் போலே
கனவோரம் நனவூற... விழி ஏங்கித் தூங்கும்!
சடலங்கள் விளைகின்ற தரைமீது அன்புப்
படலங்கள் எழுமென்றெம்மனம் பாலே தீட்டும்
முடமான இதயங்கள் முயன்றே பெருக்கும்
புவியினள வாகியே புதைந்தமனி தத்தை
உடன் தோண்டும்! பட்டைகள் தீட்டிச் செதுக்கும்!
பேந்தெங்கள் இதயங்கள் ஏன்தான் துடிக்கும்?

— த. ஜெயசிலன் —

## தடை தாண்டல்...

( X ஆம் பக்கத் தொடர்)

அவன் செய்தது தான் இப்படி பெயிலாகக் காரணம் என அவர்கள் உரைக்கக் கூடும். அவனுக்கு படிப்பிச்ச ரீச்சர்மார் கூட சிலவேளை அவன் என்ர மாணவன் எண்டு சொல்ல வெட்கப் படுவினம்... ஆனா என்னைப்போல் ஓரிரண்டு சீவனுக்குத்தான் புரியும் இது தோல்வி அல்ல எண்டு. வாழ்க்கையின்ர ஒருபடி. தடை தாண்டலில் முதல் தடையில கண்ணன் விழுந்திட்டான். அவ்வளவுதான். இந்த வீழ்ச்சி நிச்சயமாக அவனில ஒரு எழுச்சியைத் தூண்டும். இனி இந்தக் கண்ணன் என்ற தென்றலும் புயலாகும். இனி வரும் தடைகளை அவன் கவனமாகத் தாண்டுவான்.

எனவேதான் அவனிடம் ''டேய் நீ ஒழுங்காப்படி. இதைப்பற்றி பெரிசா நினைக்காதே அடுத்த அட்மிசன் ரெஸ்ரில பாஸ் பண்ணுறது மட்டுமில்ல முதலாவதா வர வேணும். அதுவரை பொறுமையாய் சனம் பார்க்கிற ஏளனப் பார்வைகளை மறந்திட்டுப் படி... டேய் சனம் இப்ப படித்தாண்டா... என்னைப் படிக்கிறேல்ல எண்ட எங்கே பொன்னம்மா ஆச்சீட்டப் போய் எணை நான் ஓ. எலில ஏழு 'டி' எடுத்திருக்கிறன் எண்டு சொல்லேக்க தம்பி நீ கொஞ்சம் ஊண்டிப் படிச்சிருந்தால் பாஸ் பண்ணியிருப்பாய் என்டெல்லே சொன்னவா...'' எண்டு கூறிச் சிரிக்க அவனும் கண்ணிலிருந்து பனித்துளியை இறக்கியபடி சிரித்தான்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

படைவீரர் புதைத்திட்ட தமிழரின் உடலம் — மனிதம்
தடயங்கள் தோண்டுமுன் சடலங்கள் தகனம்......
தடைதாண்டிச் செல்லாது முட்கம்பி அரணம்
— நீதிக்கு விடை கூறுமோ இப்புத்தாண்டின்
ஜனனம்?

— நாகபூஷணி —
சங்குவேலி.

இதுவரையில்
இங்கெதுவும்
மாற்றமில்லை;
நாட்காட்டியைத் தவிர!

— இ. தர்சி —

பூபாளத்தை எப்போதே
புதைத்து விட்டோம்
விடியும் போதும்
முகாரிதான்,
ஏற்றுக்கொள்!

— ஆ. முகுந்தன் —

★ ★ ★

விடிவு —
தடமில்லாத உன்
தனிப்பயணத்தில் அல்ல;
தடயமுள்ள எம்
தலைமுறைப் பயணத்தில்!

— எஸ். உமாபாலன் —

★ ★ ★

எத்தனையோ பேர்கள் வந்தும்
விடியாத நம் வாழ்வு
நீ வந்தா விடியுமிங்கே?
வீண் வேலை சென்றுவிடு!

வீதியிலே சென்றவரை......
வீட்டினிலே நின்றவரை...
பள்ளி சென்ற பாலகரை...

கொண்டுவந்தால் விழா வெடுப்போம்
உந்தனுக்கு...... இல்லை
மூடிவிடு விழிகளை நீ!
இருளாகவே இருந்திடட்டும்!

— தி. கணேஷ் —
காந்தியூர்.




98 ரணங்களின் புழுத்த மணத்துடன்
99 விடிந்தது.
......கிளியாகவோ!
......கொக்காகவோ!!
மீண்டும் காத்திருக்க
தொடங்கி விட்ட மக்கள்!
சமாதானம் நாட்டுத்
தலைவர்களின் செய்தியாக,
இதே, செய்தியுடன்
காத்திருப்போம்
2000 ஆம் ஆண்டின் வருகைக்கு
ஏனெனில்,
காத்திருந்து பழக்கப்பட்டவர்கள்,
மாற்றங்களின்றி
மாற்றங்களுக்காக!

— நா. இராஜமனோகரன் —

முள் வேலிக்குள்ளும்
பூட்ஸ் கால்களுக்குள்ளும்
நீ உதிப்பதை விட
சுதந்திர இரவுகளே மேலானவை!

— ஜெ. கவிதா —

புதிய நூற்றாண்டிற்கு
ஆதரவு தரும்
ஆதவனே!
நிலத்துக்கு தான்
தடைகளுண்டு
ஆனால் உனக்கு!
நிலத்தில் தடம்
பதிக்கும் உரிமை
உண்டு!

— புதுவையூர்
கௌசல்யா —

★ ★ ★

பொறுத்தது போதும்
பொங்கியெழுந்திடு!
இருபதாம் நூற்றாண்டின்
இறுதியிலாவது
தாண்டமுடியாத்
தடைகளைத்
தகர்த்திடு!
வீறுடன் சென்று
விலக்கிடு!
வெற்றி நிச்சயம்!

— பு. அருள்நேசராணி —
மானிப்பாய்.

★ ★ ★

முழுவதுமாய் வெளிவரவே
முழுப் பயம் தெரிகிறதே!
பிறந்துவிட்ட ஒன்பதிலே
பிரளயம் தோன்றிடுமோ?
'ஷெல்லுகள்' கூவிடுமோ?
செம்மணிகள் தோன்றிடுமோ?
பகலவன் தன் பெயரினிலே
படையெடுப்பு பெருகிடுமோ?
பல பயம் இவர் முகத்தில்
பப்படமாய் பொரிகிறதே!

— திருமதி ரேவதி கிருபாகரன் —
மட்டுவில்

★ ★ ★

தொண்ணூற் றெட்டின்
புலர்வுகளை இருட்டி
தொண்ணூற் றொன்பதின்
இருளகற்றிட
மலர்ந்த புத்தாண்டுப்
புத்தகமே — நீ
எழுதப்போவது
எந்த அத்தியாயங்களை...?

— மு. சுயர்சன் —

★ ★ ★

கொடிய வரட்சியும் பின்
கொட்டும் மழை வெள்ளமும்
கெடுபிடி நிறை ஆட்சியும்
கூடவே இவை யும்மைக்
குட்டிச்சுவர் ஆக்கியபின்
புத்தாண்டாம் நானிங்கு
மெத்தப் பயத்துடனே
மெதுவாக பிறக்கின்றேன்...!

— த. திருச்செந்தூரன் —
பண்ணாசம்

★ ★ ★

எம்மைச் சுற்றி
முள்வேலிகள்...
முறிக்கப்பட்ட வடலிகள்......
பரிச்சயமில்லாப் பாஷை...
பதிக்கப்பட்ட பாதணிச்சுவடு...
இத்தனைக்கும் நடுவே
தொண்ணூற்றொன்பது
திலகமிட்டு..
இன்னமும் முறியாத பனைக்குப்
இலையுதிர்ந்த
இறந்தகாலத்திற்குமிடையே
இதோ வந்துவிட்டான்
உதயசூரியன்!

— நட்சேத்ரா —
உடுப்பிட்டி

★ ★ ★

இயற்கையும் செயற்கையும் சேர்ந்த
அனர்த்தங்களில் மத்தியில்
இன்னுமொரு புதிய உதயம்...
இது விடியலுக்கான பூபாளமா?
அல்லது இன்னுமொரு சோகவரலாற்றுக்கு
கட்டியம் கூறும் முகாரியா?

— வாசன் —
வதிரி

## மௌன மொழி -17




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்து அனுப்பியவர்: பருத்தித்துறை சந்தை, மேற்கு லேனைச்சேர்ந்த ரீ. ஜெயதிபன்.

முந்நூற்று அறுபத்தாறாவது
சூரிய உதயத்தில் 1999!
ஆனாலும் மனிதத்திலும்
நாட்டிலும்
உதயம் எப்போது?

— சாந்தி —

★ ★ ★

அரச படையின்
ஆகப் பிந்திய
அறிவிப்பிது —
ஆதவனாயினும்
ஆதாரம் இருந்தாலே
அனுமதிப்போம்
ஆகாயத்தில்
அசைந்து வர!

— வி. சாஜி —

வயதில் முதிர்ந்தவனே;
வரலாறுதெரிந்தவனே;
வார்த்தை ஒன்று கூறு
வந்தேறு குடிகள் யார்?

— ப. சதீஸ் —

புதிய நூற்றாண்டை
பிரசவிக்கப் போகும்
புதிய ஆண்டே — உன்
பிரவேசத்தால்
பூட்ஸ்களும் முள்வேலியும்
இல்லாத —
பிரதேசத்தை
பிரசவிக்க முடியுமா?

— சி. மதி —

வரலாறு
எழுத வரும்
புதிய தாளிலும்...
வடுக்கள் பதிக்க
தயாராகிறது
ஒரு தேசம்...

— சி. கலையரசி —

சிதைவுகள்
நடுவே
புதைக்கப்பட்டவர்களின்
மௌனத்தின்
அலறல்கள்
உனக்கும்
கேட்கிறதா?
முன்னர் வந்தவர்கள்
முடியாது சென்றார்கள்.
குறைந்தபட்சம்
நீயாவது......?

— அபிநவன் —

விடியலுக்காய் உன்வரவை
எதிர்பார்த்து நாமிருக்க;
அடையாள அட்டை
இல்லாமல் ஐயையோ
தடைப்பட்டு நின்று
தடுமாறித் தவிக்கிறியோ?

— ம. ஐங்கரன் —
ஏழாலை மேற்கு.

★ ★ ★

ஆண்டு புதிதென்ன,
ஆதவன் புதிதென்ன,
ஆவது ஒன்றுமில்லை......
அரசாங்கம்
பழையதுதானே!

— ப. செந்தூரன் —

★ ★ ★

இம்முறையும் ஆதவன்
இராணுவ அரணுக்குள்
தொடரும் இருள் நிலை
தொண்ணூற்றி
ஒன்பதிலும்...
அகற்றிடுவோம்
தடைகளை
ஆதவன் வருகைக்காக
இன்றல்ல ஒருநாள்!

— ஆதித்தர் —
வரணி.

★ ★ ★

'சூரியக்கதி'ரால்
பாரிய அழிவுகள்...
கோரிய சமாதானமும்
போரினால் கிட்டவில்லை,
'நைன்ரி நைனின்' ஆவது
நன்மை தருமா?

— ச. க. சுதர்சனக்குரு —

★ ★ ★

ஆண்டுகள் யுகங்களுள்
அமிழ்ந்துபோக;
அகிலமோ யுத்தத்தில்
அழிந்துபோக;
புதுவருடப் பாலைக்குள் —
புரியாத குழப்பத்தில் —
மறவாத கடமையில் —
நீ......

— எஸ். அருந்ததி —
உடுத்துறை.

★ ★ ★

இருக்கின்றதா
அடையாள அட்டை?
இல்லையேல்,
இங்கு புதைகின்ற
புதைகுழிக்குள்
நீயும் அடக்கம்!
பிறகு ஆடிஅமாவாசையின்
நிலவு வெளிச்சத்தில்
உன்னைத்
தோண்டியெடுப்போம்!

— கேசவன் —
கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இராணுவம் இலங்கை வருமா?

**நீர்வேலி. கே. லக்சனா.**
● வித்துவான் ஐயா! எங்கள் வீட்டுக்கு ஒரு முறை விஜயம் செய்வீர்களா?
* ஏன் வம்பை விலைக்கு வாங்குகிறீர்?

★ ★ ★

**அரியாலை. வி. ஜெயபால்.**
● அமெரிக்க இராணுவம் இலங்கை வருமா?




* வரட்டுமே! கூட கிளின்ரனும் வந்தால்தான் ஆபத்து!

★ ★ ★

**சங்கானை. ரி. சுந்தரம்.**
● பிடிவாதத்துக்கு உதாரணம்...?
* பிரபாகரன் தான்!

★ ★ ★

**சுதுமலை க. தயா.**
● அகம்பாவம் பற்றி உங்கள் கருத்து என்னவோ?
* அதைக் கொண்டிருப்பவரின் 'அகம்'...... 'பாவம்'!

★ ★ ★

**மல்லாகம். த. கர்ஷிகா.**
● கஷ்டப்பட்டு உழைக்காமல் சொகுசாக வாழ்பவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
* அரசியல்வாதிகள் குறித்து உமக்கு ஏன் இவ்வளவு அக்கறை?

★ ★ ★

**நுந்தாவில். ந. உதயகுமார்.**
● நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்கின்றாரே பாரதிதாசன்?



* ஐயோ! குடும்பங்களிலும் 'ராகிங்' புகுந்து விட்டதா?

★ ★ ★

**துன்னையூர். எஸ். தாகூர்.**
● தாங்கள் வழங்கும் பதில்கள் பிரமாதமாக இருக்கின்றனவே! அது எப்படி?
* அது உங்கள் கேள்வியின் மகத்துவம்!

★ ★ ★

**மிருசுவில், க. யசோதர்.**
● பெண்கள் ஏன் ஆண்களைக் காதலிக்கின்றார்கள்?




* அண்மையில் 'பயர்' (FIRE) திரைப்படம் பார்த்திருக்கின்றீர் போலும். அதுதான் இப்படிச் சந்தேகங்கள் உங்களுக்குப் பிறக்கின்றன.

★ ★ ★

**சுன்னாகம். ரி. பிரேம்**
● பாலர் பாடசாலை ஆசிரியையைப் பெண் பார்க்கப் போனேன். பாடச் சொன்னதும் 'Twinkle Twinkle Little Star' என்று பாடுகிறாள் என்ன செய்யலாம்?
* சிறுமியோ எனப் பயந்து விடாதீர்கள். முதல் நாள் முடிய 'How I Wonder What You Are!' என்று நீங்கள் அதிசயிக்கும் வண்ணம் நடந்து கொள்வாள்.

★ ★ ★

**வசாவிளான். எல். சிவா.**
● சைவர்களாகிய நாம் பசு இறைச்சியைக் கொத்து றொட்டியில் சேர்த்துச் சாப்பிடுகிறோமே! இது நியாயமா?
* சைவரின் சமய வாழ்வுக்கு மதிப்பெண் போட்டால் அது சைவராகத்தான் முடியும். பசி வந்திட வயிற்றுக்குள் பசுவும் போகும்.

★ ★ ★

**ஈவினை. வி. ரி. செல்வம்.**
● டாக்டரின் கையெழுத்து அவர் மனைவிக்கே விளங்காதாம். மருந்து கலப்பவருக்கு எங்கே விளங்கப் போகிறது?
* டாக்டரின் கையெழுத்து விளங்குவதும் விளங்காததும் நோயாளியின் தலையெழுத்தில் விளங்கும்.

★ ★ ★

**கொடிகாமம். சு. பிரபாகரன்.**
● ஜனநாயக வழியில் செயற்படுவதாகக் கூறும் ஆயுதக் குழுக்களுக்கும், ஆயுதம் ஏந்திப் போராடும் போராளிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை என்ன?
* இரு தரப்புனரும் தமிழ், ஈழம், விடுதலை என்ற பெயர்களைப் பயன்படுத்துவது ஒற்றுமை: ஆனால் இரண்டாவது தரப்பு பிழைத்திருப்பதால்தான் முதல் தரப்பு பிழைப்பு நடத்த முடிகின்றது என்பது வேறு விடயம்.

★ ★ ★

● கட்சி விட்டு கட்சி தாவும் அரசியல்வாதிகள் பற்றி உங்கள் கருத்து என்னவோ?



* கொப்பு விட்டுக் கொப்பு பாயும் மந்திகள்.

★ ★ ★

**மறவன்புலோ. எஸ். ரி. சிவனேந்த்.**
● 'ஒவ்வொருவரது வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் இருப்பாள்' என்பது முன்னைய காலக் கூற்று. ஆனால் இப்போது வெற்றிகளுக்குப் பின்னால் 'லஞ்சம்'. 'ஏமாற்று', 'அதிகாரம்', 'பயமுறுத்தல்', 'சுத்துமாத்து' என்பன இருக்கின்றனவே..?
* 'பெண்கள்' என்ற சொல்லுக்கு வாழ்க்கை அகராதியில் நீங்கள் குறிப்பிட்ட சொற்களும் ஒத்த கருத்துடையவையாக உள்ளனவே...! தெரியவில்லையா?

# வித்துவான் பதில்கள்

**அராலி. எஸ். சுமிதா.**
● ஆண்களுக்கு 'ஏமாற்றும் உரிமை; பெண்களுக்கு ஏமாறும் உரிமை' — என்கிறார்களே, உண்மையா?
* என்ன உங்கள் வீட்டு அகராதியில் 'ஏமாறுதல்' என்ற சொல்லுக்கு இப்போது தலைகீழ் விளக்கம் கொடுத்திருக்கின்றார்களோ?

★ ★ ★

**தும்பளை. வை. சுதா.**
● காதலில் தோல்வியுற்ற இளைஞர்களைப் பற்றி......?
* பிழைத்துப் போக வாய்ப்புக் கிடைத்தவர்கள். (காதல்) பிழைத்ததால் (சீதனம் வாங்கிப்) பிழைக்க வாய்ப்புக் கிட்டியவர்கள்.

★ ★ ★

**யாழ்ப்பாணம். சுபமாலா.**
● 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பர். தை பிறந்து விட்டது. ஈழத் தமிழர் 'அதை' எட்டுவார்களா?
* எ'தை'? அ'தை'யா? இ'தை'யா? வந்த'தை, போன 'தை'ப் பார்க்காதீர். அடுத்த'தை' பாரும்!

★ ★ ★

**அராலி தெற்கு. எஸ். குமரன்.**
● அடக்கு முறைகளில் இருந்து விடுபட பெண்கள் எத்தகைய போராட்டத்தில் ஈடுபட வேண்டும்?
* அடக்கப்படுவோருக்குத்தானே விடுதலைப் போர்? ஆட்சியாளருக்கு அல்லவே!

★ ★ ★

**யாழ்ப்பாணம். ரதி.**
● புலாலை மறுப்பதால் சைவசமயம்தான் மெய்ச் சமயம் என்று கூறுகிறேன். உங்கள் பதில்?
* புலால் மறுப்பது சைவ சமயத்துக்கு மட்டும் உரித்தான கொள்கையல்ல. அத்தோடு எம்மதமும்சம்மதமே என்ற பரசமய — சமரச — நோக்குத்தானே இந்து தத்துவத்தின் அடிப்படையே!

**யாழ்ப்பாணம். வி. அறிவு.**
● அரசியலுக்கும் சினிமாவுக்கும் என்னையா ஒற்றுமை?
* இரண்டுமே நடிப்புத் தான்!

★ ★ ★

**சண்டிலிப்பாய். என். ரி. மிலன்.**
● திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்கிறார்களே[ உண்மையா?
* சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றதா என்பது தெரியவில்லை. ஆனால் அது நிச்சயிக்கப்படும் இடத்தில் வைத்துத்தான் நரகத்துக்கு விஸா குத்துகின்றார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

★ ★ ★

**நல்லூர். யோ. தர்சினி.**
● தலைமைத்துவப் பண்பில் உயர்ந்தவராக யாரைக் கூறுவீர்?
* தலைவரை.

★ ★ ★

**திருநெல்வேலி. தி. மதிவண்ணன்.**
● காமத்தைக் குறைக்க ஒரு நல்ல வழி கூறுங்கள் பிளீஸ்...!
* அவனவன் 'வயக்ரா' தேடி அலைகிறான். நீர் என்னடாவென்றால்......!

★ ★ ★

**பருத்தித்துறை. பைந்தமிழன்.**
● 'டமில்' கட்சிகள் நடத்தும் அறிக்கைப் போர் போட்டிக்கு 'உதயன்' 'சஞ்சீவி' களம் அமைத்துக் கொடுப்பது ஏன்?




* காற்றோடு போர் புரிபவர்களுக்கு [illegible] எதற்கு என்று கேட்கின்றீர்கள். அப்படித்தானே? நியாயமான கேள்வி.

★ ★ ★

**இணுவில். கே. கிட்டு.**
● வித்துவான் ஸார்! தமிழ் 'உதிரிக் குழுக்கள்' என்பதன் கருத்து யாது?
* மக்கள் மனத்திலிருந்து உதிர்ந்து போன குழுக்களை அப்படி அழைக்கின்றார்கள் போலும்!

★ ★ ★

**சரசாலை. ரி. குமார்.**
● இப்போதைக்குப் பேச்சு நடக்காதா?
* பேச்சு என்ற பேச்சே ஒரு பேச்சுக்குத்தான் என்பதை ஒரு பேச்சுக்குச் சொல்லி வைக்கின்றேன்.

★ ★ ★

**பருத்தித்துறை. எஸ். மணிமாறன்.**
● வெங்காயத்தை வெட்டும்போது கூட உங்கள் மனைவி கண்கலங்கக் கூடாது என்று வெங்காயத்தை வெறுத்து விட்டீர்களாமே? அது உண்மையா?



* உண்மை தான். ஆனால் வெட்டிக் களைத்ததால்தான் வெறுத்து விட்டேன். வெங்காயம் சேர்க்காமல் சமைக்கும் என்னைப் பார்த்து வீட்டுத் தலைவி (மனைவி) 'வெங்காயம்' என்று அடிக்கடி திட்டுவதும் வெறுப்புக்குக் காரணம்!

★ ★ ★

**ஓட்டுமடம். எஸ். ஈசன்.**
● வித்துவான் ஸார்! புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சை ஆரம்பிப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக உங்களை அழைத்தால்...?
* மத்தியஸ்தம் என்ன காகிதத்தில் கிறுக்கும் வேலையா?

★ ★ ★

**உடுவில். த. சிவகுமார்.**
● யாழ்ப்பாணத்திற்குத் தரை வழிப்பாதை திறந்தால் கொழும்புக்கு 'ஹீரோ ஹொண்டா'வில் போகலாமா?



* உங்கள் கனவு கொழும்புக்குச் செல்வது பற்றியதா அல்லது எமலோகத்துக்குச்செல்வது பற்றியதா என்பது எனக்கு விளங்கவில்லை.

★ ★ ★

**அல்வாய். வா. வேணுகோபால்.**
● மை டியர் வித்துவான் அவர்களே! 'கடி ஜோக்' ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்.
* முதலாளி ஒவருர் தன் பெண் ஊழியருக்கு முதல் மாதச் சம்பளமாகப் பட்டு கவுண் வாங்கிக் கொடுத்தாராம். அடுத்த மாதம் சம்பளத்தை உயர்த்திவிட்டாராம்.

★ ★ ★

**பளை பா. கணபதிப்பிள்ளை**
● திருமணத்தின்போது முதலிரவு என்ற சம்பிரதாயம் தேவையா?
★ திருமணமே சம்பிரதாயமாகி விட்ட காலத்தில் எது முதலிரவு என்று தீர்மானிப்பதுகஷ்டம்தான். ஆகவே அதை வெறும் சம்பிரதாயமாகத்தான் கடைப்பிடிக்க வேண்டியிருக்கின்றது.

★ ★ ★

**நுகவில் க. சுதாகரன்**
● காதலும் கத்தரிக்காயும் என்கிறார்களே. அவர்களைப் பற்றி...?
* அழுகி விடும் என்பது தெரிந்தவர்கள்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவியில் பிரசுரமாகுபவை குப்பையா?

## உங்கள் உள்ளத்திலிருந்து

### படங்கள் தெளிவில்லை

சஞ்சீவியில் அனைத்து விடயங்களும் சிறப்புக்குரியன. ஒரேயொரு குறை. சில சமயங்களில் படங்கள் தெளிவாக அச்சிடுவதில்லை. இது குறித்து கவனம் எடுப்பது அவசரமானது; அவசியமானது. கவனிப்பீர்களா?

**சுண்டுக்குளி. ரஞ்சித்குமார்.**

★ ★ ★

### அருமருந்து

சஞ்சீவியில் சினிமாப் பகுதியையும் சேருங்கள் என்ற கோரிக்கைக்கு 19-12-1998 இதழில் ஆசிரியர் தந்த பதில் — விளக்கம் — பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. நலிவுற்ற எங்கள் சமூகம் உய்வதற்கு தங்கள் கருத்து அருமருந்தாகும்.

**இணுவை. கனகதயாபரன்.**

★ ★ ★

### குத்தும் வெள்ளை றோஜா

02-01999 சஞ்சீவியில் ஏமாற்றும் எத்தாகளின் குணநலன், பண்புகளைச் சிரிப்போடு சி(ரி/று) கதையாக 'முதற்பாடம்' ஆக்கித் தந்த கா. அருளானந்தத்துக்குப் பாராட்டுகள்.

இலக்கிய நயங்களை எழுதி இலக்கிய ஆர்வலர்களைத் திருப்திப்படுத்தும் புலவர் ம. பார்வதிநாதசிவம், தனக்கே உரிய பாணியில் பதில் தரும் வித்துவான், நாட்டு நடப்புகளை வார விமர்சனம் மூலம் அம்பலப்படுத்தும் நல்லூர் தாஸ் ஆகியோரையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

'வெள்ளை ரோஜா முள்', ஆபாசமாகக் குத்துவது வருத்தத்திற்குரியது.

கலாநிதி சபா ஜெயராசாவின் யாழ்ப்பாண நாட்டார் கதைகளின் தொகுப்பு வரவேற்கத்தக்கது.

'பிரின்சிப்பல் பில் கிளின்ரன்' என்ற ந. கிருஷ்ணாவின் கவிதையும் நன்று.

**இமையாணன் கிழக்கு.**

**கோ. கிருஷாந்தன்.**

★ ★ ★

### சிறுவர் சுடர் சிறப்பு

சிறுவர் சுடர் பகுதியில் இடம்பெறும் வினாக்கள் மற்றும் புதிர்ப்போட்டிகள் போன்றவை சிறுவர், மாணவரின் மூளை விருத்திக்கு உதவுகின்றன. நுண்ணறிவு வளரவும் அது உதவுகின்றது.

மாணவரைக் கவரும் 'சிறுவர் சுடர்' மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

**எழுதுமட்டுவாழ்.**

**சு. கர்ணன்.**

★ ★ ★

### பொது அறிவை வளருங்கள்!

ஜி. சீ. ஈ. 2000 இல்இருந்து உயர்தர வகுப்புக்கு பொது அறிவும் பொது உளச்சார்பும் ஒரு பாடமாக அமைகின்றது. ஆனால் இளம் பராயத்தினர் பொது அறிவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் குறைவாகவே உள்ளன. 'வாரம் ஒரு நாடு' போன்ற அறிவு வளர்க்கும் விடயங்களை சஞ்சீவியில் வாரம் தோறும் சேர்க்கலாமே?

**அச்சுவேலி. இ. றொஷான்.**

### சஞ்சீவி வடிவத்தை மாற்றி அதை அலங்கோலப்படுத்தி விடாதீர்கள்!

'சஞ்சீவி'யைக் குப்பைத் தொட்டியாக எண்ணி நல்லூர் அன்பர் வரைந்த கடிதம் பலரின் மனதையும் புண்படுத்தி விட்டது. அக்கடிதம் கண்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்; அந்தக் காழ்ப்புணர்ச்சி கண்டு வெட்கப்பட்டோம்.

வளர்ச்சிக்காக விமர்சனம் எழுதுவது வரவேற்கத் தக்கதே. ஆனால் இழிவுபடுத்துவதற்காக எழுதப்படும் விமரிசனம், அதை எழுதுபவரின் குற்றம் காணும் இயல்பை பிரதிபலிப்பதாகவே அமையும்.

தன்னால் தரமற்றதாகக் கருதப்பட்ட ஆக்கம் குறித்து அதை எழுதியவரின் வளர்ச்சி கருதி விமர்சித்திருந்தால் அவரின் உள்ளத்தூய்மை வெளிப்பட்டிருக்கும். அதை விடுத்து கடந்தகால எழுத்தாளர்களைத் தனக்குத் துணையாக்கிக் கொண்டு சஞ்சீவியை விமர்சித்த முறை வேண்டுமென்றே செய்த ஒரு செயலாகவே கருத வைக்கின்றது.

தனது ஆக்கங்கள் பிரசுரமாகவில்லை என்ற உணர்வில் வெளிப்பட்ட கருத்துக்களோ இவை என்பதும் தெரியவில்லை.

அவர் குறிப்பிட்டுள்ள பெரிய எழுத்தாளர்கள் பல விமர்சனத் தடைக் கற்களைத் தாண்டியவர்கள். இந்த சிறுகதை, கவிதை, கட்டுரை முதலிய இலக்கிய வடிவங்கள் தொடர்ந்து ஆக்கபூர்வமாக வெளிவருவதற்கு இடையின்றி புதிய எழுத்தாளர்கள் பலர் உருவாக வேண்டும். அந்த நற்பணியை 'சஞ்சீவி' செய்கிறது. இதை ஏன் அவர் மறந்து விட்டார்?

சஞ்சீவிக் கவிதைகளை அவர் விமர்சித்த விதம் காழ்ப்புணர்ச்சியின் உச்சக் கட்டம். பல மணமுள்ள கவிதைப் பூச்செடிகளை கவிதை முற்றத்தில் 'சஞ்சீவி' வளர்த்தெடுப்பதை வாசகர்களாகிய நாம் அறிவோம்.

அந்த விமர்சனத்தைப் படித்தபோது '......... தெரியுமா கற்பூர வாசனை?' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

கொழும்புப் பத்திரிகைக்கு வக்காலத்து வாங்குவதை விடுத்து, சஞ்சீவியின் மேன்மைக்காக அதன் பிழைகளைச் சுட்டிக்காட்டுவதே வரவேற்கத் தக்கது. ஒட்டுமொத்தமாக சஞ்சீவியை ஒரு பத்திரிகையே இல்லை என்று மறுதலித்து விடாதீர்கள். ஏனென்றால் இன்று தமிழ் மக்களின் எண்ணக் கருவூலத்தின் மொத்த வடிவமாகத் திகழ்வது 'உதயன்' — 'சஞ்சீவி' இரண்டும் மட்டுமே. எமது இதய சஞ்சீவியை வாசகர்களாகிய நாம் ஒதுக்கி வைக்கப் போவதில்லை.

இத்தகைய விமர்சகர்களின் கருத்துக்கு இடம் கொடுத்து சஞ்சீவியின் வடிவமைப்பை மாற்றி அலங்கோலப்படுத்தி விடாதீர்கள் என்பதே ஆசிரிய பீடத்தினருக்கு நாம் விடுக்கும் அன்பு வேண்டுகோள்.

**பருத்தித்துறை.**

சஞ்சீவிப் பிரியன்
**பஞ்சலிங்கம்.**

★ ★ ★

### குப்பை என்று விமர்சிப்பதற்கும் கூட இடம் தரும் சஞ்சிகை சஞ்சீவி!

நல்லூர் அன்பர் குறிப்பிட்ட கருத்துகள் கண்டிக்கத் தக்கவை; வருத்தம் தருபவை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மிகவும் சிக்கலான சவால்களை எதிர்நோக்கிக்கொண்டு தரம் குன்றாமல் வெளிவருவது சஞ்சீவியே. எத்தனை இடர்கள், இழப்புக்களைச் சந்தித்தும் காலத்தின் தேவைகளுக்கேற்ப சஞ்சீவியின் தரம் உயர்ந்து கொண்டே போகின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் புதிய புதிய எழுத்தாளர்களை உருவாக்குவதற்கு அத்திவாரமாக அமைவதுகூட சஞ்சீவிதான்.

மற்றைய சஞ்சிகைகள் கூட கவிதைக்கு சிறிய இடம் ஒதுக்கி சிறியளவில் சந்தர்ப்பம் வழங்கி வருகின்றன. ஆனால் சஞ்சீவியோ பரந்த மனப்பான்மையுடன் செயற்படுகிறது.

சிவலோகநாதன் அவர்கள் உதாரணமாகக் காட்டும் பத்திரிகைகள் காதல், காமம் போன்றவற்றிற்கும் முன்னுரிமை வழங்கி வருகின்றன. அத்துடன் கலாசாரம், பண்பாடு போன்றவற்றைச் சீரழிக்கும் சினிமாப் படங்களையும் பிரசுரித்து வருகின்றன. ராஜேஸ்குமார், சுஜாதா போன்றோரின் ஆக்கங்கள் கூட இதற்குச் சான்று. ஆனால் சஞ்சீவியில் உள்ள ஒவ்வொரு பக்கமும் பத்திரமாகப் பேணி வைக்கக்கூடியன. ராஜேஸ்குமார், சுஜாதா போன்றோரின் ஆக்கங்களைப் படித்துவிட்டுக் குப்பைத் தொட்டிக்குள் போடுவதும், கச்சான் சரை சுற்றுவதும்தான் முடிவு. அவற்றைப் படித்து முடிவில் என்னதான் பயன்...? முன்னேற்றத்திற்கு அத்திவாரமா...? எது குப்பை...? உண்மையில் அவைதான் எமக்குத் தேவையா...?

1996-க்கு முன்னர் யாழ். குடாநாட்டில் நாம் எல்லோரும் எவ்வளவு நிம்மதியாக, கலாசாரச் சீரழிவு இல்லாமலும், பாதுகாப்பாகவும் இருந்தோம்! ஆனால் இன்று எந்தளவு நிலைமை மாறிவிட்டது பாருங்கள். காரணம்...? கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் சிலவும், சீர்கெட்ட சில சினிமாக்களும், தட்டிக் கேட்டுத் தண்டிக்க பாதுகாவலர்கள் இல்லாததுமே காரணம்.

ஆனால் இன்றுவரை அவைகளுக்கு இடம் கொடாமல் நல்லவற்றையே பிரசுரித்து வருகிறது சஞ்சீவி. ஈழ மக்களின் சோகத்திற்கு ஆறுதல் கூறுவனவற்றில் சஞ்சீவியும் ஒன்று. துணிவுடன் தனது கருத்துக்களை உண்மை முகத்துடன் காட்டுவது அது எவ்வளவு குறைந்த நிலையிலும் செழித்திருப்பது அ[illegible] என்று தன்

னைக் கூறுபவரின் கருத்துக்களுக்கும் பெரும்பான்மை மனத்துடன் இடம் கொடுத்து பிரசுரித்துவரும் ஒரே ஒரு சஞ்சிகை சஞ்சீவி.

**யாழ்ப்பாணம்.**

**நாத்திகன்.**

★ ★ ★

### சுட்டிக்காட்ட மறந்ததேனோ?

எங்கள் கருத்துப்படி சஞ்சீவி ஒரு அட்ஷய பாத்திரம். அதில் 'வெள்ளை றோஜா முள்' ஒரு கறை. ஆனால் சிறுகதை, கவிதை, கட்டுரை என்பவற்றில் என்ன குறை? குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டத் தவறியது ஏனோ? எழுத்தில் அடங்கவில்லையோ? அல்லது கூறமுடியவில்லையோ? அவர் குறிப்பிடும் பத்திரிகைகள் சிறந்த கவிதைகளைச் பிரசுரிக்கின்றதாமா? ஆம். அவை தித்திக்கும் காதலைக் கைவிடாமல் கவி சமைக்கின்றன!

காலத்தின் கண்ணாடி இலக்கியங்கள். அந்த வகையில் சிறுகதை, கட்டுரை, கவிதை போன்றன யதார்த்தத்தைப் பிரதிபலிப்பனவாகவே சஞ்சீவியில் வெளிவருகின்றன. ஆனால் சஞ்சீவியை விட அவர் குறிப்பிடும் பத்திரிகைகள் சிறந்ததாகத் தெரிகிறதா? இரண்டு பக்கங்களில் கவிதை தரக்குறைவு, ஆனால் இரண்டு பக்கங்களில் சினிமா பிரசுரிக்கப்படுவது சிறப்புப் போலும்.

பிரபலமானவரின் ஆக்கங்கள் வரத்தான் வேண்டும்; அதை வரவேற்கிறோம். ஆனால் புதியவர்களின் படைப்பில் என்ன தரக்குறைவு? அதனைச் சுட்டிக்காட்ட மறந்ததேனோ? இதுதான் எங்களின் ஆதங்கம். சஞ்சீவியில் வரும் அதே கவிதைகளை நீங்கள் குறிப்பிடும் பத்திரிகையில் பிரசுரித்தால் உங்கள் கண்ணுக்கு நன்றாகத் தான் இருக்கும். நீங்கள் தப்பபிப்பிராயம் கொண்டதற்கு வருந்துகிறோம்.

**கந்தர்மடம்.**

**ஜே. காவ்யா,**
**ஆர். சொப்னா.**

★ ★ ★

### எது குப்பை?

குப்பைகளைப் பிரசுரிக்கும் பத்திரிகையா சஞ்சீவி? யார் சொன்னது? பல வர்ணங்களில் சினிமா நடிக, நடிகையர் படங்களைத் தாங்கிவரும் பத்திரிகைகளை விட சஞ்சீவி தரம் குறைந்ததா, என்ன? சஞ்சீவியில் வரும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் தரமில்லாதவையாம்! 'மறுபக்கம் — வாரவிமர்சனம்', 'உலக உலா', 'உள்ளும் புறமும்' போன்ற கட்டுரைகள் எந்தளவு தரமானவை என்பதை நமது மக்கள் அறிவர். இன்று தமிழ் மொழியில் எமக்கு வாசிக்கக் கிடைக்கும் முதல்தரமான அரசியல், இராணுவ ஆய்வுக்கட்டுரைகள், இவைதான்; மற்றெல்லாம் பின்.

ஐயா! சிவலோகநாதன்! எமது பிரதேசம் தானே 'மரணங்கள் மலிந்த பூமி'. அப்படியிருக்க, எமது பத்திரிகையில்தானே அதிகமான மரண அறிவித்தல்கள் வரும். இதனாலேதான் சஞ்சீவிக்கு மரண அறிவித்தல் பார்க்கும் பத்திரிகை என்ற 'இமேஜ்' உருவாகியிருக்கலாம். எமது பிரதேச மக்களின் நிலைமையை — எண்ணங்களை — பிரதிபலிக்கும் பத்திரிகை என்ற ரீதியில் இதுவும் ஒரு பெருமையேயன்றி வேறல்ல. எனினும் உங்கள் குறைகள் சில உண்மையே.

**அரியாலை.**

**பிரசன்னா.**

★ ★ ★

"குப்பைகளைப் பிரசுரிக்கும் வார இதழ் சஞ்சீவி" — என்ற தலைப்பில் நல்லூரைச் சேர்ந்த ம. சிவலோகநாதன் என்ற வாசகர் எழுதிய மடல் கடந்த 02 - 01 - 1999 சஞ்சீவியில் இதே பத்தியில் பிரசுரமாகி பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

அந்தக் கருத்தை மறுதலித்து கோபத்துடனும் எரிச்சலுடனும் பொங்கியிருக்கின்றார்கள் சஞ்சீவி அபிமானிகள். பல டசின் கணக்கில் அவர்களது கடிதங்கள் வந்து குவிந்துள்ளன.

வாசகர் என்ற முறையில் விமர்சிப்பதற்கு ம. சிவலோகநாதனுக்கு உள்ள நியாயமான உரிமையை நாம் ஏற்றுக் கொள்வதே பொருத்தமானது. அதனைப் பிழையான கண்ணாடி கொண்டு பார்ப்பது தேவையற்றது. ஆக்க பூர்வமான வழியில் விமர்சனங்களை உள்வாங்கிக் கொள்வோம்.

சஞ்சீவி அபிமானிகளில் — காத்திரமான கருத்துத் தெரிவித்த — ஒரு சிலரின் மடல்கள் இங்கு பிரசுரமாகின்றன. இடநெருக்கடியால் இது விடயத்தில் ஏனையோரின் கடிதங்களுக்கு இடந்தர முடியவில்லை. வருந்துகிறோம்.

அத்தோடு ஏனைய பத்திரிகைகளையும் சம்பந்தப்படுத்தி விமர்சிக்கும் விவகாரம் இது என்பதால் இத்துடன் இந்த விடயத்தை நிறுத்திக் கொள்வதே நல்லது.

(ஆ—ர்)

### சஞ்சீவி — மக்கள் பத்திரிகை; மஞ்சள் பத்திரிகை அல்ல!

'குப்பைகளைப் பிரசுரிக்கும் வார இதழ் சஞ்சீவி' என்ற தலைப்பில் வித்துவக்காய்ச்சல் முற்றிய நிலையில் ஓர் அன்பர் பிதற்றியுள்ளார்.

அவர் கவிதை என்பதற்கு தனது பேரறிவிற்கு எட்டிய வகையில் ஏற்புடைய தொருவிளக்கத்தைக் கொடுத்திருந்தார். கவிதைக்கு வேதம் என்ற ஒரு பெயர் இருக்கிறதாம். சஞ்சீவியில் 'கவிதை முற்றத்திலோ', 'மௌனமொழி' பக்கத்திலோ வெளியாகும் இளங்கவிஞர்களின் உள்ளத்தின் வெளிப்பாடுகள் எவையும் கவிதைகள் இல்லை என்கிறார் அவர்.

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உங்கள் உள்ளத்தில்...

(XIV ஆம் பக்கத் தொடர்)

கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை ஏற்பாடு செய்திருந்த கவிதை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றின்போது கவிஞர் முருகையனிடம் ''கவிதை என்றால் என்ன?'' என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அவர் அதற்கு தந்த விளக்கம் ''கடவுளின் தோற்றம் எப்படி இருக்குமென்று கேட்பதைப் போலவே கவிதை என்றால் என்னவென்று கேட்பதும்'' என அமைந்தது. தமிழ்நாட்டுக் கவிஞர் வைரமுத்து கவிதை பற்றிக் குறிப்பிடுகையில் 'ஒருவன் எழுதுவது கவிதையா? இல்லையா? என்பதை காலந்தான் தீர்மானிக்கிறது' என்றார்.

எனவே சஞ்சீவியில் வெளியாகும் கவிதைகள் காலத்தைப் பிரதிபலிக்கின்றன. சஞ்சீவிக் கவிதைகள் குப்பைகள் என்றும் கொழும்புப் பத்திரிகைகள்தான் தரமான கவிதைகளைத் தாங்கி வருகின்றன என்றும் கூறியிருந்தார். அடேயப்பா எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு? இந்த அன்பரின் கருத்துப்படி தரமான கவிதைகள் என்றால் காதலைப் பற்றி எதுகை மோனையில் வார்த்தை ஜாலம் காட்டுவதுதான் போலும்.

மற்றைய சில பத்திரிகைகளை சஞ்சீவியுடன் ஒப்பிட்டு நிறைய வருத்தப்பட்டிருந்தார் இந்த அன்பர். கலாசார சமூக சீரழிவுகளை இப்பத்திரிகைகள் ஏற்படுத்த வல்லன எனக் கருதியமையால் யாழ்ப்பாணம் இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு முன்னர் இப்பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திற்கு கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்குத்தடை செய்யப்பட்டிருந்தன. இதைஇந்தப்பேரறிஞர்மறந்துவிட்டார் போலும். தவிரவும் சினிமா நடிகைகள், நடிகர்களின் படங்களை முன்பக்கத்தில் அச்சிட்டு விற்பனையைத் துரிதப்படுத்துவதே கொழும்புப் பத்திரிகைகளின் நோக்கம். ஆனால் சஞ்சீவியின் நோக்கம் யாழ்ப்பாணத்தின் கலை, கலாசாரத்தை மேம்படுத்துவதே ஆகும் சஞ்சீவி எப்போதும் மக்கள் பத்திரிகையேயொழிய மஞ்சள் பத்திரிகையல்ல.

'வெள்ளை ரோஜா முள்' தொடரில் விரசம் கலந்திருப்பதாக வேதனைப் படுகிறார் இந்த அன்பர். இவர் சிறந்த பத்திரிகை எனக்குறிப்பிடும் — கொழும்பிலிருந்து வெளியாகும் — சில பத்திரிகைகள் பச்சை பச்சையாகவே பிரசுரிக்கின்றன. குடும்பத்தில் உள்ள எல்லோரும் வாசிக்க முடியாதவாறு விரசமான சொற்கள் வேறு. அவற்றை விடவா 'வெள்ளை ரோஜா முள்' விரசம் கலந்துள்ளது?

சஞ்சீவியில் சுஜாதாவின் அறிவியல் பூர்வமான கட்டுரைகள் கூட அவ்வப்போது இடம்பெற்றிருப்பதை இந்த அன்பர் கவனிக்கவில்லைப் போலும்.

மனைவியின் சிறப்புக்களைத் தெரியாமல் வேறு ஒரு பெண்ணின் சிறப்புக்களை வர்ணிப்பவர்போல உள்ள திரு. சிவலோகநாதன், தன்னை மாற்றிக் கொள்வாரா?

**இ. ஸ்ரீநிதி.**
**கரவெட்டி.**

★ ★ ★

## மரண அறிவித்தல்களை பிரசுரிப்பதும் அவசியமே!

நல்லூர் அன்பர் புகழ்ந்த – தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையிலும் விளம்பரங்களே (மரண அறிவித்தல்கள், அஞ்சலி உட்பட) அதிகமாக இடம்பெறுகின்றன.

அதேசமயம் சஞ்சீவியின் சஞ்சிகைப் பகுதி விளம்பரம் ஏதும் இடம்பெறாது பிரசுரமாவதும் குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டிலிருந்து வெளிவரும் ஒரேயொரு பத்திரிகை 'உதயன்' — 'சஞ்சீவி' மட்டுமே. அதனால் மரண அறிவித்தல் மற்றும் அஞ்சலிகளுக்கு இங்குள்ள மக்கள் அதைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இங்கு போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் பாதிப்புற்றிருக்கும் நிலையில் மரண அறிவித்தல், வீட்டுக் கிருத்திய அழைப்பு போன்ற தகவல்களை குடாநாட்டின் ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலைக்கு எடுத்துச் சென்று தெரிவிக்க இத்தகைய சேவை இங்குள்ள மக்களுக்கு அத்தியாவசியமானது.

மேலைத்தேசம் போன்று இயந்திர வாழ்க்கை கொழும்பிலும் பிற இடங்களிலும். அங்கு அடுத்த வீட்டில் வசிப்பவர் யார் என்பது பலருக்குத் தெரியாது. ஆனால் இங்கு எமது சமூக வாழ்க்கை முறை வேறுபட்டது. தெரிந்தவர், அறிந்தவர் அவர்களின் மரணவீட்டுக்கும் ஏனைய குடும்ப நிகழ்வுக்கும் நாம் பிரசன்னமாக வேண்டிய சமூகக் கடப்பாடு உள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றோம். அந்தச் சமூகக் கடப்பாட்டை நிறைவேற்ற உதயனின் இச்சேவை உதவுகின்றது.

இதற்காக நிறுவனத்தைக் குற்றம் சொல்வது முறையல்ல; இத்தகைய விளம்பரங்களை ஏற்க மறுத்தாலும் குற்றம் சொல்வது நாங்கள்தான்.

தென்னிலங்கைப் பத்திரிகைகளில் நல்ல ஆக்கங்கள் வெளிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பெரும்பாலான அத்தகைய ஆக்கங்களில் நல்லதமிழ் பயன்படுத்தப் படாதமையை நாங்கள் கவனிக்க வேண்டும். சஞ்சீவி ஓரளவு இதற்கு விதிவிலக்காக இருப்பது பாராட்டுக்குரியது!

**கு. சி. சுந்தரம்பிள்ளை.**
**உரும்பிராய்.**

★ ★ ★

## அம்பெய் தழைக்கிறார் வம்பு!

அவிவேகத் தோடு அதிவேகங் கொண்டு
''அவமான'' மென்றொருவர் சாடுங் — கவிதையிதழ்
நேத்தியா யில்லையென நேற்றிங்கு சொன்னசொல்
காத்திர மில்லாக் கனம்.

''மந்திரக்''கோல்கொண்டு மாற்றுரைத்துப் பார்க்குமொரு
சிந்தை யவரது சொந்தமன்றோ! — சிந்துவழி
''மந்திர'' மோதா மனுவாழு மிந்நாளில்
யந்திரங் கண்டாரே, யாது!

கதிரையிற் சாய்ந்து கவிநய மாயும்
மதியற்ற வாயரைப் பாரீர் — அவரின்
சுவைஞான மற்றசொல் லொன்று; வளருங்
கவிவாணர் காணுங் கணு.

''மந்திரந்'' தான்கவியோ! மாகவியும் 'மந்திரமோ!'
இந்தக்கோ லின்று எடுபடுமோ! – செந்தமிலா
மாயையும் மந்திரமும் தூயகவிப் போர்வையுள்
மேய்ந்தநாள் மாய்ந்ததே மெய்.

மனிதன் விளங்காத ''மந்திரப்'' பாக்கள்
புனைவாரைக் காவும் பொதிகை — முனிவரிவர்
தும்போட்டித் தும்மலைத் தேடுவார் போலச்சொல்
லம்பெய் தழைக்கிறார் வம்பு.

**அங்குசன்.**

## வழி பிறக்குமா...

(III ஆம் பக்கத் தொடர்)

யாக வரும் திருக்கூட்டமென்ற மனித சமுதாயம் என்றோ அழிந்தொழிந்து போயிருக்குமோ?

முற்றத்துப் பூவரச மரத்துடன் நின்றிருந்த திலகத்தின் கண்ணெதிரே சில வருஷங்களுக்கு முன்புவரை மாட்டுத் தொழுவமாக இருந்த கொட்டிலொன்று ...... அதில் இன்று மாடுமில்லை, கன்றுமில்லை என்றாகி அழிந்து துவைந்து அரைகுறையாகக் கிடக்கின்றது அது. அதனுள்ளே ஓர் ஓரத்தின் மூலையில் கலப்பையும், நுகமும் துருப்பிடித்த நிலையில் கிடக்கின்றன.

அவை சொல்லும் கதை? வெறும் கற்பனைக் கதையல்ல. அவளது உணர்வோடும் உடலோடும் ஒன்றிவிட்ட கதையல்லவா?

திலகத்தி தன் கண்களில் இருந்து பெருக்கெடுத்த கண்ணீராறு இமை வரம்பை உடைத்தோடு நின்றது.

அந்தக் கலப்பையும் நுகமும் அவள் கணவன் கார்மேகத்தின் கரங்கள் கைப்பற்றி நிலபுலத்தை உழுது பயிரிட உதவிய சாதனங்களல்லவா?

ஆனால் அவளை உழுத கலப்பையும் நுகமும்...? அந்த அவலக் காட்சியை பொங்கிச் சொரியும் கண்ணீரினூடே காண்கின்றாள் திலகம்.

காலம்போம்; அவள் கட்டையில் போகும்வரையில் அவள் கணவன் கார்மேகத்தின் கரிய நெடிய உருவத்தின் கண்கொள்ளாக் காட்சியும்— நினைப்பும்—இந்தத் தைத்திங்களைக் காணும் போதெல்லாம் தகித்துக் கொண்டு வருகின்றதே!

ஆம். இவள் கணவன் கார்மேகம் அகாலமாய் மாண்டு மடிந்து போனதும் இந்நாளில் தான். ஐந்து ஆண்டுகள் எப்படி ஓடிமறைந்து விட்டன? அவன் மாண்டு மறைந்து போனதின் பின்பு வந்திருக்கும் ஐந்தாவது தைப்பொங்கல் இது. அன்றும் இவ்வாறு தான் எழுவானின் முறுவலித்து வந்த இந்தப் பாலசூரியனுக்குத்தான் முற்றத்தில் பொங்கிப் படைத்து உழவனுக்குரிய நன்றிக்கடனைச் செலுத்தி ஆராதித்து நிற்கிறான் கார்மேகம்.

வானம்பிளந்துபேரிடியான நெருப்புக்கோளம் எங்கோ வீழ்ந்தது. பூமி பூகம்பமேற்பட்டு நடுங்கிற்று. நிதானிப்பதற்கிடையில் இந்த சூரியக் குஞ்சுகூட அந்தப் புகை மூட்டத்தில் மறைந்துபோய் விட்டான். கார்மேகத்தைப் பூமி பிளந்து விழுங்கிக் கொண்டதா? அவன் நின்ற இடத்தில் சின்னதாய் கிணறொன்று தோண்டப்பட்டுக் கிடந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் வானில்உறுமி மறைந்த சீனத் தயாரிப்பான அந்த யுத்த விமானம்விட்டெறிந்துபோன குண்டொன்று திக்கெல்லாம் அதிரும்படியாக முற்றத்தில் வீழ்ந்து வெடித்தபோது...

'ஐயோ...ஆதவனே...! நீயும் பார்த்திருந்தாயே அந்தப் படுபாதகச் செயலை' அந்த விடிகாலைப் பொழுதைப் பார்த்திருந்து வாய்விட்டுக் கதறியழுதாள் திலகம்.

''என்னடி மோனை திலகம்! காலங்காத்தாலை பித்துப்பிடிந்தவளாட்டம் பல்லோடைபல்லுக்கிட்டுகிற உந்தப் பனிக் குளிருக்கை போயிருந்து கொண்டு...நல்ல நாள் பெருநாளிலை உப்பிடி ஒப்பாரிவைச்சு கூக்குரல் எழுப்பினாப்போல போனவன் வரவாபோறான்? அதிலையும் அயலட்டம் ஊருலகம் என்ன சொல்லும்? 'உவதான் ஒருத்தி புது நாணையமாகப் புரியனைப் பறிகொடுத்த மாதிரி குத்தி முறிஞ்சு ஒப்பாரி வைக்கிறா. இந்தத் தமிழ்ச் சாதியிக்கை இண்டைக்கு உவவைப்போல எத்தனை எத்தனை இளசுகள் வாழுற, உண்ணிற வயசிலை தங்கடை புரியன் பிள்ளையளைப் பறி குடுத்திட்டு ... கொண்டு கிடக்கேயுக்கை......

உவதான் ஒருத்தி புதுநாணயமா முத்தத்திலை வந்திருந்து கண்ணீர்ப் பொங்கல் பொங்கிறா' என்று வக்கணை சொல்லாதுகளே?''

''அவன் போக்காளன் போன இந்த நாளை நினைச்சால் நெஞ்சு வெடிச்சுப் போகும்தான். ம்... அதுக்காக நெடுக அதையே — அவனையே — நினைச்சு நினைச்சு நெக்குருகி நீயும் நினைவிழந்து போனால்... அவன் நாமத்தை சொல்லப் பிறந்திருக்கும் சின்னஞ் சிறுசுகளின்ரை கெதி என்னாகும் எண்டு யோசித்துப்பார்... இனி அதுகளை ஆளாக்கி பேராக்கி அதுகளின்ரை முகத்திலை — அவனைக் கண்டு ஆறுதலடையிறதைப் பாராமல்... இஞ்சை பார்! நீ அழுகிறதைப் பார்த்து பெடியனும் எழும்பியிருந்து அழுகிறான்... எல்லாம் வாழையடி வாழையாக வந்த மனிதக் கூட்டம்தான். பிள்ளை உந்த விம்மலையும், விக்கலையும் விட்டிட்டு எழும்பிவா. வந்து பார்க்கிறதைப் பார்'' — திலகத்தின் பேத்தியார் பொன்னம்மா பாட்டி இந்த மண்ணில் இன்றைய நாளில் இதெல்லாம் இயல்பாய்ப் போச்சு, அதற்காக இருப்பவர்கள் இருக்கிறதையும் அழித்து விடக் கூடாது என்ற நடைமுறை யதார்த்தத்தை-உபதேசமாய் எடுத்துரைத்தபோதும் திலகம் இருந்த இடத்தை விட்டு உசும்பியதாய் தெரியவில்லை!

''படீர்!''

பூவரச மரத்துடன் குந்தியிருந்து முழங்கால்களுக்குள் முகத்தைப் புதைத்து விம்மிக் கொண்டிருந்த திலகத்தின் அருகே வெடித்த அந்த வெடிச்சத்தத்தில் திடுக்குற்று துடித்துப் பதைத்து எழுந்து நின்றாள் திலகம்.

சைக்கிள் வால்வ் கட்டைக்குள் நெருப்புக் குச்சி மருந்தைத் திணித்து, சிறுகம்பியின் இணைவுடன் வெடியடித்த அந்த உபகரணங்களுடன் சிரித்து நின்றான் எட்டு வயதான அவள் பெற்ற பாலகன்.

உரித்து வைத்துப் படைத்து அவள் கணவன் கார்மேகத்தின் அச்சுப்பதிவில் அவனை அவள் கண்டாள்.

திகைத்து நின்ற திலகம் கண்ணீரினூடே அவனை இழுத்தணைத்து முத்தமாரி சொரிந்தாள். அவள் எழுந்து விட்டாள். இனி அவள் சந்ததிக்கு வழி பிறக்கும். ★

## சின்னப்பிராணி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

கொண்டவை. பின்னர் உணவு கிடைக்காத காலங்களில் அவற்றைப் பயன்படுத்தும். பைன் மரக்காடுகளிலுள்ள அணிலொன்று சில சமயங்களில் ஒன்று முதல் இரண்டு மூடை பைன் காய்களைச் சேர்த்து வைத்திருக்கும்.

அணில்கள் பழமரங்களிலுள்ள பழங்களை கொறித்துத் தின்று அவற்றை மனித பாவனைக்கு உதவாததாக்கும். இந்த ஒரு காரணம் மட்டுமே அணில்கள் மீது மனிதரின் வெறுப்பைத் தூண்டி விடுகின்றது. ★

## தேசிய அ. அட்டை...

(IV ஆம் பக்கத் தொடர்)

யோக மார்க்கத்தில் வவுனியா — மன்னார் வீதி தற்போது பிரதானஇடம் பெற்றுள்ளது. கவச வாகனங்களின் பாதுகாப்புடன் நீண்ட வாகனத் தொடரணிகள் அடிக்கடி இப்பாதையூடாகப் படையினரையும் தளபாடங்களையும் ஏற்றிச் செல்கின்றன.

புலிகள் இந்த வாகனத் தொடரணியை இலக்கு வைக்கத் திட்டமிட்டிருப்பதால் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புலனாய்வுப் பிரிவினர் படையினரை எச்சரித்துள்ளனர். ★

# விடைகள்

VIII மற்றும் IX ஆம் பக்கங்களில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### சொற்றேடல்

1. வாத்தியம். 2. சிவாலயம். 3. பிடிவாதம். 4. பிரதிவாதி அல்லது எதிர்வாதி. 5. அழைத்துவா. 6. பிராணவாயு. 7. ஆரவாரம். 8. தேவாலயம் 9. வாஷிங்டன். 10. சுவாமிமலை. 11. துர்வாசர். 12. தர்மவான். 13. இலைக்கோவா. 14. வித்துவான். 15. திருவாதிரை. 16. கவாஸ்கர். 17. வாந்திபேதி.

### நாணயங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | ர் | ஹா | ம் | க் | ல் |
| சா | ட | ள | ங் | ந | யா |
| ச் | டி | ரா | பொ | ய | ரி |
| வா | பி | னா | ல | மா | ப |
| கு | ரோ | ன | ர் | ரு | வு |
| ப | யூ | க் | பா | யெ | ன் |

★ அமெரிக்கா—டொலர்.
★ பிரான்ஸ்—பிராங்க்.
★ குவைத் / பஹ்ரைன் — டினார்.
★ இந்தியா/இலங்கை—ரூபா.
★ சவூதி அரேபியா / கட்டார்/ஓமான்—ரியால்.
★ ஜப்பான்—யென்.
★ ஐக்கிய அரபு எமிரேட்ஸ்—திர்ஹம்.
★ ஒல்லாந்து (டச்சு) — மார்க்.
★ பிரிட்டன்—பவுன்.
★ ஸாம்பியா—குவாச்சா.
★ ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்—யூரோ.

### எது 'ஒரிஜினல்'?

படம் நான்கு.

### சொற்களைத் தேடுங்கள்

அ) சந்தி. ஆ) பந்தி.
இ) குந்தி. ஈ) மந்தி.
உ) சிந்தி. ஊ) காந்தி,
எ) சாந்தி. ஏ) வாந்தி.
ஐ) பூந்தி.

### புதிர்கள்

1) 11 11.
2) ஐந்து.
3) அந்தப் புலவருக்கு கால் வாய்ப்பாடு நன்கு தெரியும். அதன்படி—
9 கால்கள்=இரண்டே கால்.
17 கால்கள்=நான்கேகால்.

இப்போது 'ஒன்பது கால்கள்' என்பதற்குப் பதிலாக 'இரண்டேகால்' என்ற பதத்தையும் 'பதினேழு கால்கள்' என்ற பதத்திற்குப் பதிலாக 'நான்கே கால்' என்பதையும் போட்டு வசித்துப் பாருங்கள். புலவர் கூறியது சரிதானே!

### உங்களால் முடியுமா?

1) பத்துத் துண்டுகள்.
2)



3) 301 பேனாக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டு காலம் அமெரிக்க எதிர்ப்பை தாக்குப்பிடித்துவரும் பிடெல் காஸ்ட்ரோ

கியூபாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டு 40 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

இந்தநிறைவுநாள்இம்மாதம் முதலாம் திகதி கியூபாவில் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டது.

1959 ஜனவரி முதலாம் திகதி பிடெல் காஸ்ட்ரோவின் தலைமையில் இராணுவத்தில் உள்ள ஒரு பிரிவினர் புரட்சி செய்தனர்.

அப்பொழுது கியூபாவில் ஜனாதிபதியாக இருந்தவர் பல்ஜென்சியோ பாட்டிஸ்ரா (Fulgenclo Batista).

புரட்சியின் போது அவர் அமெரிக்காவுக்கு தப்பிச்சென்றார்.

கரிபியனில் உள்ள இந்த சின்னஞ் சிறு தீவு வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போரின் கொந்தளிக்கும் மையமாக மாறும் என்று அப்பொழுது எவரும் எதிர்பார்க்கவில்லை. மிக அருகில் உள்ள அமெரிக்காவை எதிர்த்துக் கொண்டு காஸ்ட்ரோ ஆட்சியில் நீடிப்பார் என்றும் எவரும் கருதவில்லை.

கியூபாப்படையைச்சேர்ந்த ஒரு பிரிவினரான ஆயிரத்து 500 பேர் கொண்ட புரட்சிப் படைகளும் 26 ஆவது ஜூலை இயக்கமும்இணைந்து அப்பொழுது பாட்டிஸ்ராவின் ஆட்சியைக் கவிழ்த்தன.

புரட்சி நடந்த முதல் நாளிலேயே காஸ்ட்ரோவின் தலைமையில் படைகள் தலைநகர் ஹவானாவுக்குள் நுழைந்துவிட்டன.

அப்பொழுது 32 வயதான காஸ்ட்ரோ புரட்சிப்படைகளின் டாங்கி ஒன்றில் அமர்ந்து வந்தார். மக்கள் வீதிகளில் திரண்டு பெரும் ஆதரவு வழங்கினர்.

**மாற்றங்கள் காஸ்ட்ரோவை அசைக்கவில்லை**

இன்று சர்வதேச அரங்கில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. சோவியத் யூனியன் உடைந்து சின்னாபின்னமாகி உள்ளது. அமெரிக்கா தனித்து உலக வல்லரசாகி விட்டது. பல நாடுகளில் ஆட்சியிலிருந்த தலைவர்கள் பலர் தூக்கி எறியப்பட்டு விட்டனர். ஆனால் காஸ்ட்ரோவின் ஆட்சி இன்றும் நீடிக்கிறது. உலகில் தற்பொழுது ஆட்சியில் இருந்து வரும் நான்கு கம்யூனிஸ்ட் தலைவர்களில் காஸ்ரோட்வும் ஒருவர்.

காஸ்ட்ரோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்டமுயற்சிகள் எதுவும் இதுவரை பயன் அளிக்கவில்லை.

**பொருளாதாரத் தடை**

கடந்த 40 வருடகாலத்தில் அமெரிக்காவில் பதவியிலிருந்த 9 ஜனாதிபதிகளை எதிர்த்து காஸ்ட்ரோ போராடி வந்துள்ளார்.

1962 ஆம் ஆண்டு ஏவுகணை நெருக்கடியை அடுத்து கியூபா மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றன. எனினும் கியூபாவுக்கு பெரிய அளவில் அது பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

பொருளாதாரத்தடை நீக்கப்பட வேண்டும் என்று தற்பொழுது பெரும்பாலான உலக நாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

கியூபா மீதான அமெரிக்கத் தடையை நீக்கக்கோரி 1995 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஐ. நா. தீர்மானம் நிறைவேற்றி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கூடுதலான நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றன.

கடந்த வருடமும் இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அமெரிக்காவும் இஸ்ரேலும் மட்டுமே எதிர்த்து வாக்களித்தன. 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 143 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன.

சீனி ஏற்றுமதி மூலமும் உல்லாசப் பயணத்துறை மூலமும் வெளிநாட்டுப்பணம் மூலமுமே அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்கு கியூபா தாக்குப்பிடித்து வருகிறது.

கியூபா மீதான தனது பொருளாதாரத் தடைகளை சர்வதேச ரீதியில் விஸ்தரிக்க அமெரிக்கா முயன்றது. ஆனால் அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. அமெரிக்காவின் நட்பு நாடுகளான கனடா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் கியூபாவில் முதலீடு செய்து வருவது கியூபா சம்பந்தமான அமெரிக்கக் கொள்கைக்குக் கிடைத்த தோல்வி என்றே கருதப்படுகிறது. இதுவே தனது பொருளாதாரத் தடைகள் குறித்து மறு பரிசீலனை செய்ய அமெரிக்காவைத் தூண்டியது.



கியூபாவின் புனித] நகராகக் கருதப்படும் சன்ரா]கிளாராவில் எடுக்கப்பாட்ட படம். சேகுவேரா தலைமையிலான படைகளிடம் அரச படைகள் தோல்விஅடைந்தது இங்குதான்,

கியூபா சம்பந்தமான கொள்கையை மீளாய்வு செய்ய கமிஷன் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தற்பொழுது அமெரிக்காவில் வலுத்து வருகிறது.

இதனை அமெரிக்கா ஏற்கவில்லை. எனினும் கியூபா மீதான தடைகளைச் சிறிது தளர்த்த அமெரிக்கா இணங்கி உள்ளது.

★ அமெரிக்கப் பிரசைகள் வருடம் 300 டொலர்களை கியூபாவில் உள்ள தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்ப அனுமதித்தல்.

## உலக உலா

★ அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் நேரடி தபால் சேவையை ஆரம்பித்தல்.

★ இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி சார்ட்டட் விமானப் பறப்புக்களை அதிகரித்தல்.

மேற்கண்ட சலுகைகள் அமெரிக்க — கியூபா உறவில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்று கருத முடியாது.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் தனக்கு இதுவரை 6 ஆயிரம் கோடி டொலர்கள் மட்டுமே இழப்பு ஏற்பட்டிருப்பதாக கியூபா தெரிவிக்கிறது.

**காஸ்ட்ரோவின் பிடி இறுகின்றது**

1959 இல் காஸ்ட்ரோ ஆட்சியைக் கைப்பற்றியபோது தான் ஒரு போதும் சர்வாதிகாரியாக மாறப்போவதில்லை என்று நாட்டு மக்களுக்கு அறிவித்தார். ஆட்சியில் நீடிக்கும் எண்ணம்

## கியூபாவின் எதிர்காலம் இன்னும் கேள்விக்கிடம்

தமக்கு இல்லை என்றும் அவர் கூறினார். ஆனால் இன்று 72 வயதை அடைந்துள்ள காஸ்ட்ரோ அதிகாரத்தில் உள்ள தமது பிடியை மேலும் இறுக்கி உள்ளதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கியூபாவில் அதிருப்தியாளர்கள் பலர்கொலைசெய்யப்பட்டிருப்பதாக தற்பொழுது அமெரிக்காவில் வாழும் கியூபாப் பிரசைகள் குற்றஞ்சாட்டுகின்றனர். போதைப் பொருள் கடத்தல் என்ற குற்றச்சாட்டின்பேரில் 1989 இல் கியூபாவில் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

**சித்தாந்தங்களை பரப்பும் முயற்சி**

1960 களில் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஆபிரிக்காவின் ஒரு பகுதியிலும் கியூபா தனது கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைப் பரப்ப முற்பட்டது.

இதுவே, காஸ்ட்ரோவின் ஆட்சியை வீழ்த்தும் அமெரிக்காவின் வைராக்கியத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

காஸ்ட்ரோவின் ஆட்சியை வீழ்த்துவதற்கு அமெரிக்கா மேற்கொண்ட மிகப் பெரிய நடவடிக்கை 1961 இல் இடம்பெற்றது.

அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ. யினால் அமெரிக்காவில் வைத்து பயிற்சி அளிக்கப்பட்ட 2,600 கியூபா அதிருப்தியாளர்கள் [illegible] கியூபாவில் [illegible] Pigs) என்று அழைக்கப்படும் இடத்தில் இறக்கப்பட்டனர்.

ஏற்கனவே தகவல் அறிந்து தயார் நிலையில் இருந்த கியூபாப் படைகள் எதிரிப் படைகள் இறக்கப்பட்ட இடத்தில் வைத்தே அவற்றை நிர்மூலம் செய்துவிட்டன.

இந்த முயற்சி தோல்வி அடைந்த பின்னர் காஸ்ட்ரோவுக்கு நச்சுச் சுருட்டு வழங்கி அவரைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது.

மாபியாவின் தாக்குதல் பிரிவும் ஒரு தடவை பயன்படுத்தப்பட்டது. நஞ்சூறிய உடையும் ஒரு தடவை அனுப்பப்பட்டது.

இவை பயன் அளிக்கத் தவறிய பின்னர் கியூபாவில் அமெரிக்க ராணுவத் தலையீட்டுக்கான சூழ்நிலையை உருவாக்க சி. ஐ. ஏ. முயன்றது.

கியூபாவுக்கு மிக சமீபமாக உள்ள அமெரிக்காவின் மியாமியில் நெருக்கடி நிலை ஒன்றை உருவாக்குவது, சிவிலியன் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தி விட்டு பழியை கியூபா மீது போடுவது போன்ற திட்டங்களும் வகுக்கப்பட்டன.

ஆனால் காஸ்ட்ரோ இவற்றில் இருந்து எல்லாம் தப்பி விட்டார்.

1989 — 90 இல் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்த போதும் அது காஸ்ட்ரோவின் உறுதியை சிறிதாவது தளர்த்தவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கியூபாவில் காஸ்ட்ரோவின் ஆட்சி ஏற்பட்ட நாளிலிருந்து சோவியத் யூனியனே கியூபாவின்நெருங்கிய நட்பு நாடாக இருந்து வந்தது.

அமெரிக்காவின் பொருளாதாரத்தடைகளை அடுத்து அமெரிக்காவுடனான வர்த்தகம் தடைப்பட்டதால் கியூபாவின் ஏற்றுமதிப் பொருள்களான சீனி, சுருட்டு போன்றவற்றை சோவியத் யூனியனே பெரும் அளவு வாங்கியது.

சோவியத் யூனியனின்வீழ்ச்சிக்குப் பின்னர் கியூபா பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டது.

உலகில் பனிப்போர் முடிவடைந்துகியூபா மீதான அமெரிக்க நெருக்குதலும் தளர்ந்தமை பெரும் நெருக்கடிகளில் இருந்து கியூபா விடுபட உதவியது.

**பொருளாதார வீழ்ச்சி**

சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர் கியூபாவின் பொருளாதாரம் பெரும் அளவு வீழ்ச்சி கண்டது. 1992—94களில் 40 சத வீதம் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது.

ஆனால் தற்பொழுது பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து வருவதாக காஸ்ட்ரோ கூறுகிறார்.

இன்னும் ஐந்து ஆண்டுகளில் 1985 இல் இருந்த பொருளாதார நிலையை கியூபா அடைந்துவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது. 1980 களில் கியூபாவின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்தது.

ஸ்பெயின், இத்தாலி, மெக்சிக்கோ நாட்டவர்கள் பெருமளவி தற்பொழுது கியூபாவுக்கு உல்லாசப்பயணிகளாகி வருகின்றனர். கியூபாவில் பெண்கள் இலகுவாகக்கிடைப்பதும் உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரிக்கக் காரணம் ஆகும்.

1960களில் புரட்சியாளர்களின் சுறுசுறுப்பான இடமாக இருந்து வந்த தலைநகர் ஹவானாவில் இன்று நிலைமை முற்றாக மாறி விட்டதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

காஸ்ட்ரோவும் உடல் தளர்ந்த நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறார். எனினும் அவரது உள்ளம் தளராதது அமெரிக்காவுக்கு கிடைத்த பெரும் தோல்வியே.

அமெரிக்காவுக்கு சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் கஸ்ட்ரோவின் திர்காலம் இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை கியூபாவில் காஸ்ட்ரோவும், லிபியாவில் கடாபியும், ஈராக்கில் சதாமும், வடகொரியாவில் கிம் ஜோங் இல்லும் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாகவே கருதப்படுகின்றனர்.

லொக்கர்பி பிரச்சினையில் லிபியா தொடர்ந்து பிடிவாதம் காட்டுமானால் அமெரிக்காவின் அடுத்த இலக்கு லிபியாவாகத்தான் இருக்கும்.

இந்த நான்கு நாடுகளுடன் ஒப்பிடுகையில் கியூபாவினால் அமெரிக்காவுக்கு நெருக்கடி குறைவு என்றே சொல்ல வேண்டும்.

காஸ்ட்ரோவின் ஆட்சி தானாகக் கவிழும் நாளையே அமெரிக்கா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. *

## பாடசாலைக் கல்வி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

உள்ள ஏற்றதாழ்வுகள் தலையாய பிரச்சினையாகும். இதனால் மாணவர்கள் தமது கற்றல் நேரத்தில் அதிகமான நேரத்தை தனியார்கல்வி நிலையங்களில் கழித்துவரும் தன்மையைக் காண முடிகின்றது.

**நிகழ்காலத் தேவைகளும் பாடசாலைகளும்**

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், சமூக அபிவிருத்திக்கும் உறுதுணை அளிக்கவல்லனவாக நடைமுறை கல்வித் திட்டங்களில் விஞ்ஞானம், சுற்றாடல், கல்வி, சுகாதாரம் போன்றவற்றின் காத்திரமான பங்களிப்பு அவசியமாகும். இன்றைய சமூகத்தின் நிகழ்காலத்தேவைகளை நிறைவுசெய்யும் விடயங்கள் பாடங்களின் மூலம் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவேண்டியதேவை அத்தியாவசியமான தொன்றாகும்.

சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு, ஒருமைப்பாடு பற்றிய மனப்பாங்கு போன்றவை இன்றைய மாணவர் சமூகம் பெற வேண்டிய விடயங்கள் ஆகும். வளப்பாதுகாப்பு, சனத்தொகைக்கல்வி, சமாதானக் கல்வி போன்ற விழுமியம்சார்பான விடயங்கள்பாடசாலைகளில் சரிவர மாணவர்களை சென்றடைவதில்லை. இன்று பாடசாலைகளில் இயல்பாகவே நடைபெறும் வெண்கட்டிப் பேச்சுகளின் (Chalk and talk) மூலம் நாட்டின் தேசியகல்விக் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமல், நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org